# சமூக நலம்
# மற்றும்
# சத்துணவுத் திட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2016 – 2017

## மானியக் கோரிக்கை எண்.45

**Dr. V.சரோஜா**
சமூக நலம் மற்றும்
சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2016

# பொருளடக்கம்


| வ.எண் | அத்தியாயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | குழந்தைகள் நலம் | 9 |
| 3 | மகளிர் நலம் | 26 |
| 4 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 65 |
| 5 | முதியோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலன் | 96 |
| 6 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் | 105 |
| 7 | சமூகப் பாதுகாப்பு | 148 |
| 8 | சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள் | 186 |
| | இணைப்பு – வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு | 194 |

# கோரிக்கை எண்.45

# சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2016–2017

## அத்தியாயம்–1

**முன்னுரை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, தமிழக அரசின் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, ஏழை எளிய பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் நல்வாழ்வினை உறுதி செய்து அவர்களின் வாழ்க்கை முறையினை மேம்படுத்துவற்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது தொடர்ச்சியான ஆட்சிக்காலங்களிலெல்லாம் பல சீர்மிகு முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இதனால், தமிழ்நாட்டிற்கு அகில இந்திய அளவிலும் மற்றும் உலக அறிஞர் பெருமக்களிடையேயும் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றுத் தந்துள்ளார்கள். மாநில அரசு

பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு சிறப்பாக முனைப்புடனும், பன்முகத் தன்மையுடனும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி சமூக நலம், சமூக பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகிய மூன்று துறைகள் மூலம் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் தலைமையின்கீழ் பெண்கள், குழந்தைகள், மூன்றாம் பாலினர், கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் ஆகியோரின் நலன்களுக்காக புதுமையான பல எழுச்சிமிகு திட்டங்களைச் சீரிய முறையில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மகளிர் மற்றும் பெண்குழந்தைகளின் பாதுகாப்பிற்கு வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறையினை அடியொற்றி தொடர்ந்த விரிவான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. மேலும், பாலினப் பாகுபாடுகளைக் களைய தனிகவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீர்மிகு சிந்தையில் உதித்த **“தொட்டில் குழந்தைத் திட்டம்”** பெண் சிசுக்கொலையை அறவே ஒழித்து, கைவிடப்பட்ட குழந்தைகளைத் தத்து கொடுக்கும் வரை பாதுகாத்து, பாராமரிப்பதில் மற்ற மாநிலங்களுக்கு தமிழகம் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட **“பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்”** மாநிலத்தில் உள்ள திட்டங்களிலேயே புதுமையானத் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 8 மாவட்டங்களில் பாலின விகித மேம்பாடு உறுதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம், பெண் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகளின் வளமான எதிர்காலம் குறித்த நம்பிக்கையை வலுவூட்டுவதாகவும், அவர்கள் உயர்கல்வி பயில்வதை ஊக்குவிப்பதாகவும் விளங்குகிறது.

பெண் குழந்தைகளின் நல்வாழ்விற்குத் தொடர்புடைய தடைக் காரணிகளான திருமணச் செலவு மற்றும் பாலினப் பாகுபாடு போன்றவை சமுதாயத்தில் இருந்து அறவே ஒழிக்கப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து நடைமுறையிலுள்ள வழக்கங்களுடன் தங்கள் பெண்குழந்தைகளின் திருமணத்தை நடத்த சிரமப்படும் ஏழ்மை நிலையிலுள்ள பெற்றோர்களுக்கு உதவிடும் வகையில் முன்னோடி திட்டங்களான 10 ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படித்த பெண்களுக்கு திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் தங்க நாணயத்துடன் ₹25,000ம், பட்டப்படிப்பு/பட்டயப்படிப்பு படித்த பெண்களுக்கு 4 கிராம் தங்க நாணயத்துடன் ₹50,000ம்

நிதி உதவியாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் **55** சதவீத பெண்கள் உயர்கல்வி கற்க ஊக்குவித்துள்ளது. மேலும், ஏழ்மை நிலையிலுள்ள பெற்றோர்களின் மகள்கள், ஆதரவற்ற பெண்கள், கலப்புத் திருமணம் புரிவோர், ஏழை விதவையரின் மகள் மற்றும் மறுமணம் புரியும் ஏழை விதவைகள் ஆகியோருக்காகவும் இத்திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுவருகின்றன. **23.05.2016** முதல் **8** கிராம் தங்க நாணயம் திருமாங்கல்யம் செய்வதற்கு வழங்கப்படுகிறது.

“மூன்றாம் பாலினரின்” வருமானத்தை பெருக்கும் வகையில், அரசு பல்வேறு நிதியுதவித் திட்டங்கள் அறிவித்துள்ளது. இந்நடவடிக்கையின் மூலம் சமூகத்தில் நலிவடைந்த நிலையில் உள்ள மூன்றாம் பாலினத்தவரின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மூலமாக நடத்தப்படும் சேவை இல்லங்கள், ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆகியோர் பாதுகாப்புடன் தங்குவதற்கும், கல்வியுடன் கூடிய வேலைவாய்ப்பு பயிற்சிகள் அளிக்கும் மையமாகவும் உள்ளது. “குறைந்த வருவாயை ஈட்டும் பணிபுரியும் பெண்களுக்கான மகளிர் அரசு விடுதிகள்” அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக உள்ளது.

பெண்கள் தங்களது பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளும் வகையில், தமிழக அரசு இலவச தையல் இயந்திரங்களை வழங்கி வருகிறது. 97 மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்களிலுள்ள 77,000 பெண் உறுப்பினர்கள் நான்கு இணை பள்ளிச்சீருடைகள் தைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருவதன் மூலம் தங்கள் குடும்பத்திற்குத் தேவையான வருமானத்தை சுயமாக வேலை செய்து பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

குழந்தைகளை கவரும் வண்ணமும், அவர்களின் தற்போதைய தேவையைத் திருப்திபடுத்தும் வகையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 4 வகையான மசாலா கலந்த முட்டையுடன் கூடிய 13 வகையான கலவை சாதத்தினை அறிமுகப்படுத்தியுள்ளார்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், குழந்தைகளின் உரிமை தொடர்பான, பாதுகாப்பு, பங்கேற்பு மற்றும் மேம்பாட்டினை வழங்கும் முக்கிய வழிகாட்டித் திட்டமாக செயல்படுகிறது. இத்திட்டத்தின் நோக்கங்களான ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல், குழந்தைகள் மற்றும் மகளிர் நலம் பேணுதல், வளரிளம் பெண்களின் திறன் மேம்பாடு மற்றும் சமச்சீரான வளர்ச்சியினை அடைய உரிய முயற்சிகளை

மேற்கொள்கிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம், பிறந்தது முதல் ஆறு வயது குழந்தைகளுக்கு இணை உணவு மற்றும் மதிய உணவு வழங்குதல், சுகாதாரப் பணிகள் , முன்பருவ கல்வி வழங்குதல், வளரிளம் பெண்கள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவு வழங்குதல் போன்ற நலப்பணிகளை வழங்குகிறது. மறு சீரமைக்கப்பட்ட, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் திட்டத்தின்படி, அங்கன்வாடி மையங்கள், “எழுச்சிமிகு முன்பருவக்கல்வி வளர்ச்சி மையங்களாக” செயல்பட்டு வருகிறது. இம்மையங்கள் சுகாதாரம், ஊட்டச்சத்து வழங்குதல் போன்ற சேவைகளை வழங்கும் முதல்நிலை மையங்களாக செயல்பட ஏதுவான கூடுதல் மனித வளம் மற்றும் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, குழந்தைகள், பெண்கள் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக பல்வேறு சமூக நல சட்டங்களை நடைமுறைப்படுத்தியும் கண்காணித்தும் வருகிறது. வரதட்சணைத் தடைச் சட்டம்,1961, குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, ஒழுக்க நெறி பிறழ்தல் தடுப்புச் சட்டம்,1956, இளைஞர் நீதிச்சட்டம் (குழந்தைகளை பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்,2015,

குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம்,2006, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம், 2007, பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலின வன்கொடுமை தடுப்புச் சட்டம்,2013 ஆகியன நடைமுறைப்படுத்தப்படும் முக்கிய சட்டங்களாகும்.

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்,2015, ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம்,1956, போன்ற முக்கியமான சட்டங்களை பெண்கள் மற்றும் குழந்தைகளை துயருறும் சூழல் மற்றும் ஒழுக்க அச்சுறுத்தல் போன்றவற்றிலிருந்து காப்பதற்காக சமூக பாதுகாப்புத் துறை இச்சட்டங்களை திறம்பட மாநிலத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறது. குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், சிறார்கள் மற்றும் மகளிருக்கு தேவையான பிற்காப்பு நிறுவனங்கள் இத்துறையின் மூலம் அரசால் நடத்தப்பட்டு வருகிறது.

வருவாய் நிர்வாக ஆணையர் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் ஒருங்கிணைப்பு முகமையாக இத்துறை செயல்பட்டு வருகிறது.

தமிழகம் மனிதவள மேம்பாட்டு குறியீட்டில் வியக்கத்தக்க உயரிய நிலையினை அடைந்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் பன்முகத் தன்மை கொண்ட சீரிய வழிகாட்டுதலின் பேரில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனில் பொற்கால வளர்ச்சி இலக்குகளை அடைந்துள்ளது.

*******

## அத்தியாயம் – 2

# குழந்தைகள் நலம்

**2.1** குழந்தைகளே நாட்டின் செல்வம் என்பதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தலைமையிலான அரசு அதனை உறுதிப்படுத்த சமுதாயத்தில் அனைவராலும் பாராட்டி ஏற்றுக் கொள்ளும் வகையில் குழந்தைகளின் நலனுக்காக பல முன்னோடி திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. குழந்தைகளின் முக்கிய தேவைகளான ஆரோக்கியம், ஊட்டச்சத்து, கல்வி, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, குழந்தை நலன் மற்றும் வளர்ச்சிக்கு தேவையான வாய்ப்புகள் மற்றும் வசதிகள் ஆகியன பல்வேறு சிறப்பான நலத் திட்டங்கள் மூலம் செம்மையாக நிறைவேற்றப்படுகிறது.


பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் வாழ்வாதார திறன் குறித்த முழுமையான முன்னேற்றத்தினை வலியுறுத்தி கொண்டுவரப்பட்ட பல்வேறு புதுமையான திட்டங்களால் பெண் குழந்தை குறித்த நேர்மறையான எண்ணங்களை குடும்பம் மற்றும் சமுதாயத்தில் ஆழப் பதிய வைத்துள்ளது.

## 2.2 தொட்டில் குழந்தைத் திட்டம்

பெண் சிசுக் கொலை நிகழ்வினை தமிழகத்தில் முற்றிலும் ஒழித்திடவும், குழந்தைகளை இறப்பின் பிடியிலிருந்து காப்பாற்றவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசால் முதன் முதலில் இம்மாநிலத்தில் 1992 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் தொட்டில் குழந்தைத் திட்டம் தொடங்கப்பட்டது.

வறுமை, ஆண் குழந்தை வேண்டும் என்ற மனப்பான்மை, பெண் சிசுக்கொலை என்பது கொடூரமான செயல் என்ற உணர்வு இல்லாமை, புரிந்து கொள்ளாமை மற்றும் ஏற்றுக் கொள்ளாமை, பெண் குழந்தைகளுக்கு மரபு வழியாக செய்யப்படும் சடங்குகள் மற்றும் திருமணத்திற்காக ஏற்படும் செலவினம் குறித்து சமூகத்தின் எதிர்பார்ப்பு மற்றும் அங்கஹீனத்துடன் பிறக்கும் குழந்தைகளைப் பராமரிக்க இயலாமை போன்றவை பெண் சிசுக் கொலைக்கான முக்கிய காரணிகள் ஆகும். இத்திட்டத்தின் கீழ் பெற்றோர்களால் நிராகரிக்கப்படும் குழந்தைகள் மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், குழந்தைகள் இல்லம் மற்றும் பாதுகாப்பு இல்லங்களால் பெற்று பராமரிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2001 ஆம் ஆண்டு, பெண் சிசுக்கொலை நிகழ்வு அதிகமாக இருந்த மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் குழந்தை வரவேற்பு மையங்களை விரிவுப்படுத்திட உத்தரவிடப்பட்டது.

இந்த 5 மாவட்டங்களில் தொட்டில் குழந்தை வரவேற்பு மையங்கள் முழுமையான வசதிகளுடன் நிறுவப்பட்டன. தொட்டில் குழந்தைத் திட்டம் நடைமுறையிலுள்ள மேற்படி 5 மாவட்டங்களில் குழந்தைப் பாலின விகிதத்தில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் கவனிக்கதக்க வகையில் முன்னேற்றம் கண்டுள்ளதை கீழ்க்கண்ட விளக்கப்படத்தில் காணலாம்.




2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, கடலூா், அரியலூா், பெரம்பலூா், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் மிகக் குறைவான குழந்தைப் பாலின விகிதம் பதிவானதைத் தொடா்ந்து, மேற்படி மாவட்டங்களிலும் தொட்டில் குழந்தைத் திட்டம் விரிவுப்படுத்தப்பட்டது.

மத்திய அரசின் “பெண் குழந்தைகளைக் காப்பாற்றுவோம்! பெண் குழந்தைகளை வரவேற்போம்!” என்ற திட்டம் செயல்படுத்துதற்காக இந்தியாவிலுள்ள 100 மாவட்டங்களில் கடலூர் மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. குழந்தைப் பாலின விகிதத்தை மேம்படுத்துவதற்காக இது போன்ற திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு பிற மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்படும்.

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, பாலின பாகுபாட்டிற்கு முக்கிய குறியீடான குழந்தைப் பாலின விகிதம் 27 மாநிலங்கள் மற்றும் புதுதில்லி உள்ளிட்ட யூனியன் பிரதேசங்களில் குறைந்திருந்தபோது தமிழ்நாட்டில் தொட்டில் குழந்தைத் திட்டத்தின் சிறப்பான செயல்பாட்டின் காரணமாக 2001ல் 942/1000ஆக இருந்த குழந்தைப் பாலின விகிதம் 2011ல் 943/1000 ஆக அதிகரித்துள்ளது. மேற்கண்டவாறு உரிய நேரத்தில் சிந்தித்து செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்ட முன்னோடி திட்டங்களினால், மாநிலத்தில் பாலின பாகுபாட்டில் சமநிலை அடைந்ததற்கு உரிய ஆதாரமாக திகழ்கிறது.

**2016–17 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹37.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.3 முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

குழந்தை ஒரு நாட்டின் மதிப்புமிக்க சொத்து ஆவர். நாட்டின் எதிர்காலம், குழந்தைகளின் பல்வகையான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 1992 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், பெண் குழந்தைகளின் நலனுக்கான முன்னோடி மற்றும் புதுமையான திட்டமாகும். இத்திட்டம் மூலம் பெண் சிசுவதை தடுப்பு மற்றும் பெண் கல்வியை மேம்படுத்துதல் ஆகிய இரண்டு நோக்கங்களைக் கொண்டுள்ளது. இத்திட்டம் ஏழைக் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கி அதன் மூலம், அவர்களின் குறுகிய கால வருமானத்திற்கு ஆதரவு வழங்கியும், அதே நேரத்தில் அவர்களது நடத்தையில் நீண்ட கால மாற்றத்தையும் ஏற்படுத்துகிறது. இத்திட்டம் குடும்பம் மற்றும் சமூகத்தில் ஒரு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய, பெண் குழந்தைகளின் வாழ்க்கை மற்றும் எதிர்காலத்தில் ஒரு முன்னோடி திட்டமாகும். இத்திட்டம், தமிழ்நாட்டில் உள்ள முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## இத்திட்டத்தின் கீழ் வைப்புத் தொகை வழங்கப்படும் முறை

### திட்டம்–1

இத்திட்டத்தின் கீழ் **01.08.2011** அன்றோ அல்லது அதற்கு பிறகோ பிறந்து குடும்பத்தில் ஒரே பெண் குழந்தை மட்டும் இருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் நிலையான வைப்புத் தொகையாக **₹50,000** தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகையின் இரசீது நகல் பெண் குழந்தையின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

### திட்டம்–2

இத்திட்டத்தின் கீழ் **01.08.2011** அன்றோ அல்லது அதற்கு பிறகோ பிறந்து, குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருப்பின், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் நிலையான வைப்புத் தொகையாக தலா **₹25,000/–** தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகையின் இரசீது நகல் பெண் குழந்தைகளின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

மேற்படி வைப்புத் தொகை ஒவ்வொரு ஐந்தாண்டு முடிவிலும் புதுப்பிக்கப்பட்டு **18** வயது நிறைவடைந்ததும் திரண்ட வட்டி விகிதத்துடன் கூடிய நிலை வைப்புத் தொகையின் முதிர்வுத் தொகை, அப்பெண் குழந்தைக்கு வழங்கப்படுகிறது.

இப்பயனை அடைய பெண் குழந்தை பத்தாம் வகுப்பு வரை படித்து, பொதுத் தேர்வு எழுதியிருத்தல் வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் முதிர்வுத் தொகை அப்பெண்குழந்தைக்கு உயர்கல்வி பயில உதவுகிறது.

**01.08.2011**க்கு முன்னர் திட்டம் **1**ல் வைப்புத் தொகை **₹22,200/–** மற்றும் திட்டம் **2**ல் வைப்புத் தொகை **₹15,200/–**க்கு முதிர்வுத் தொகை முறையே **₹1,33,306/–** மற்றும் **₹91,273/–** ஆக இருந்தது. **01.08.2011**க்கு பிறகு புதிய திட்டத்தில் முதிர்வுத் தொகை பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளது:-

**முதிர்வுத் தொகை விவரம்**

**புதிய திட்டம்**

| **வ. எண்** | **திட்டங்கள்** | **ஆரம்ப வைப்பீட்டுத் தொகை (₹)** | **18 வயது நிறைவடையும் போது முதிர்வுத் தொகை ஆண்டு ஊக்கத் தொகை ₹1,800 சேர்த்து தோராயமாக** |
|---|---|---|---|
| 1 | திட்டம்–1 | 50,000 | 3,00,232 |
| 2 | திட்டம்–2 | 25,000 (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்) | 1,50,117 (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்) |

வைப்பீடு செய்யப்பட்ட ஆறாவது ஆண்டிலிருந்து கல்விச் செலவுக்காக ஆண்டுதோறும் ஊக்கத்தொகையாக ₹1,800 வழங்கப்பட்டு வருகிறது. 2013–14 ஆம் நிதியாண்டு முதல் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பயன்கள், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1992 முதல் 1995 ஆம் ஆண்டு வரை பதிவு செய்த பயனாளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் திட்டம்–1ன் கீழ் ₹50,000/– ஆகவும், திட்டம்–2ன் கீழ் ₹24,000/– ஆகவும் இருந்த ஆண்டு வருமான உச்ச வரம்பை 14.10.2014 முதல் இரண்டு திட்டங்களுக்கும் பொதுவாக ₹72,000/– என உயர்த்தி அறிவித்தார்கள்.

**இத்திட்டத்தின் சாதனைகள்**

தமிழ்நாட்டில் பெண் கல்வியின் முன்னேற்றம் 2001 ஆம் ஆண்டில் 64.43 சதவிகிதத்தில் இருந்து 2011–ஆம் ஆண்டில் 73.86 சதவிகிதமாக உயர்ந்துள்ளதற்கும், பள்ளிக்கு சென்ற பெண் குழந்தைகளின் இடைநிறுத்தல் குறைந்ததற்கும் இத்திட்டம் முக்கிய காரணியாக உள்ளது. 31.12.2001 முதல் 31.03.2016 வரை 6,40,459 பெண் குழந்தைகள் பயனடையும்

வகையில் ₹1117.79 கோடி தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**2016–17 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹14,012.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.4 குழந்தைத் தத்தெடுத்தல் திட்டம்**

தத்தெடுத்தல் என்பது ஆதரவற்ற குழந்தைகளுக்கும் மற்றும் பெற்றோர் கவனிப்பு மற்றும் ஆதரவும் இல்லாத ஒவ்வொரு குழந்தைக்கும் சிறந்த மாற்று இல்லமாக செயல்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் பாதுகாப்பு, அன்பு மற்றும் ஒழுக்கம் சார்ந்த பொருளாதார பாதுகாப்பிற்கான உரிமை உண்டு. இது ஒரு குழந்தை குடும்ப சூழ்நிலையில் வளர்ந்தால் மட்டுமே பெற இயலும். ஆதரவற்ற, கைவிடப்பட்ட அல்லது ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகளைத் தத்து வழங்குவதன் மூலம் மறுவாழ்வு அளிப்பதே சிறந்த வழிமுறையாக கருதப்படுகிறது.

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளிப்பது குறித்து வலியுறுத்தி இயற்றப்பட்ட இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு (ம) பாதுகாப்பு) சட்டம், 2015–இன் கீழ் ஆதரவற்ற, கைவிடப்பட்ட

அல்லது ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மறுவாழ்வு மற்றும் சமூக இணக்கத்துடன் வாழ்வளிப்பதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மத்திய தத்துவள ஆதார மையம் வழிகாட்டுதல்,2015–இன்படி, மேற்கண்ட குழந்தைகள் தத்தெடுத்தல் குறித்த வழிமுறைகளை சட்டப்பிரிவு 56ல், குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இச்சட்டத்தில் உள்ள வழிமுறைகளின்படி, குழந்தையின் நலன் கருதி, தேவையான பாதுகாப்புகளுடன் குழந்தைகளை தத்து வழங்கும்போது முன்னுரிமையின் அடிப்படையில் உள்நாடு மற்றும் வெளிநாட்டிற்கு தத்து வழங்குவதற்காக பல்வேறு நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் குழந்தைகளை தத்தெடுப்பதற்கான குழந்தை நேயமிக்க அணுகுமுறை மூலம் குழந்தை தத்து வழங்குவது குறித்த நேர்வுகளில் தீர்வு காண வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய தத்துவள ஆதார மையம் (CARA) மத்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் தன்னாட்சி நிறுவனமாக செயல்படுகிறது. மேலும், இந்திய குழந்தைகளை தத்து வழங்குவதில் ஒருங்கிணைக்கும் நிறுவனமாகவும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு தத்தெடுத்தலை கண்காணித்தல் மற்றும் முறைப்படுத்தும் பணியை மத்திய

தத்துவள ஆதார மையம் மேற்கொள்கிறது. மாநில அளவில் உள்நாட்டு தத்தெடுத்தலை மேம்படுத்தவும், வெளிநாட்டு தத்தெடுத்தலை நெறிமுறைப்படுத்திடவும் மத்திய தத்துவள ஆதார மையத்திற்கு உதவிடும் வகையில் சமூக நல ஆணையரகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாநில தத்துவள ஆதார மையம் நிறுவப்பட்டுள்ளது.

தத்தெடுப்பு திட்டத்தின் கீழ் தமிழகத்தில் **6** வயது வரை உள்ள குழந்தைகளை பாதுகாத்து உள்நாட்டில் தத்து வழங்கிட மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட **15** சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. மேற்படி, தத்து நிறுவனங்கள் முறையே சென்னை **(2)**, சேலம் **(2)**, மதுரை **(2)**, காஞ்சிபுரம் **(2)** மற்றும் கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றுமாக அமைந்துள்ளன. இவற்றுள், **5** நிறுவனங்கள் மத்திய தத்துவள ஆதார மையத்தால் (Central Adoption Resource Authority) வெளிநாட்டு தத்தெடுத்தலுக்கு அங்கீகரிக்கப்பட்ட இந்திய தத்து அமர்த்தும் முகமையாக (Recognised Indian Placement Agency) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**இத்திட்டம் துவங்கப்பட்ட காலம் முதல் மே 2016 வரை தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகளின் விபரம்**

| வ. எண் | தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | ஆண் குழந்தைகள் | பெண் குழந்தைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | உள்நாட்டில் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | 1,117 | 3,586 | 4,703 |
| 2 | வெளிநாட்டில் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | 80 | 330 | 410 |
| | **மொத்தம்** | **1,197** | **3,916** | **5,113** |

உள்நாடு மற்றும் வெளிநாட்டு தத்தெடுப்பை மேம்படுத்துவதற்காக தமிழக அரசால் மாநில தத்தெடுப்பு ஆலோசனை குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பின்வரும் சட்டங்களின்படி, குழந்தைகள் சட்டப்பூர்வமாக உரிய நீதிமன்றங்களால் தத்து அளிக்கப்படுகின்றனர்:-

1. இந்து தத்தெடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டம், 1956 (HAMA)

2. இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015.

தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் குழந்தை தத்துவள தகவல் மற்றும் வழிகாட்டி மையம் (Child Adoption Resource Information and Guidance System) உருவாக்கப்பட்டுள்ளது. இது தத்தெடுக்கப்படும் குழந்தைகள், குழந்தை கோரும் பெற்றோர்கள் குறித்தான முழுமையான விவரங்கள் மற்றும் தத்தெடுப்பு மையங்கள் குறித்த தகவல் களஞ்சியமாக இணையதளத்தில் பதிவு செய்வதை உறுதி செய்கிறது.

உடல் மற்றும் மருத்துவ ரீதியான பிரச்சினைகளைக் கொண்ட சிறப்பு கவனம் தேவைப்படும் நிலையில் உள்ள குழந்தைகள் மற்றும் இத்திட்டத்தின் கீழ் தத்துக் கொடுக்க இயலாத நிலையில் உள்ள குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் மற்றும் பாதுகாப்பு அளிப்பதற்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் அரசு மானியத்துடன் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் நடத்தப்படும் நான்கு சிறப்பு இல்லங்களில் ஒப்படைக்கப்படுகின்றனர்.

**2016–17 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹37.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.5 பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகங்கள்

பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களுக்கு உதவிடும் பொருட்டு குழந்தை காப்பகங்கள் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பெற்றோர்களின் **0–5** வயதிற்குட்பட்ட குழந்தைகள் இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். குழந்தைகளுக்கு இணை உணவுடன் கல்வியும் இக்காப்பகங்களில் வழங்கப்படுகிறது.

பணிபுரியும் தாய்மார்களுக்கு மட்டுமல்லாது, நோய்வாய்ப்பட்ட மற்றும் வறிய நிலையிலுள்ள குடும்பத்தில் உள்ள தாய்மார்கள் வீட்டிலும் வெளியிடங்களிலும் பல்வேறு பணிகளுக்கிடையில் குழந்தையைப் பராமரிப்பதில் சிரமப்படுவதால், அவர்களுக்கு உதவிடும் வகையில், குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் பகல் நேர பராமரிப்பு சேவை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் குழந்தைத் தொழிலாளர்கள் உருவாவது தடுக்கப்பட்டும், பள்ளிப்படிப்பை இடைநிறுத்தம் இன்றி தொடர்தலும், மருத்துவ மற்றும் சுகாதார உதவிகள் பெறுவதற்கும், பெண் குழந்தைகளின் கல்வி போன்றவற்றிற்கும் பாதுகாப்பாக அமைகிறது. எனவே, அனைத்து அமைப்பு மற்றும் அமைப்புசாரா நிறுவனங்களில் சமூக பொருளாதார நிலைகளில், பின்தங்கியுள்ள மற்றும்

வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களது குழந்தைகளுக்கு உதவிட பகல் நேர குழந்தைகள் காப்பகங்களின் தரத்தினை உயர்த்தி அவர்கள் எளிதில் அணுகிடும் வகையில் பகல் நேர சேவை மையங்கள் ஏற்படுத்துவது உடனடி தேவையாகிறது.

தற்போது, மாநில அரசு மானியத்துடன் 10 குழந்தைகள் காப்பகங்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. 25 குழந்தைகளுடன் இயங்கும் ஒரு காப்பகத்திற்கு, அரசு மானியமாக ஆண்டொன்டிற்கு ₹25,410/– வழங்கப்படுகிறது.

**2016–17 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹3.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.6 குழந்தை திருமண தடைச் சட்டம், 2006

குழந்தைகள் குறிப்பாக பெண் குழந்தைகள் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சட்டவிதிகளின் அடிப்படையில், பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டியவர்கள் மட்டுமின்றி அவர்களே நாட்டின் எதிர்காலமாக திகழ்வதால், அவர்களை நல்ல முறையில் பாதுகாத்து பேணப்பட வேண்டியவர்களாவர். உலகில் உள்ள பிற பகுதிகளிலும் குழந்தைத் திருமணத்தை ஒழிக்க அரசு மற்றும் குடிமுறைச் சமூகத்தால் தொடர் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் குழந்தைத் திருமணம்

இன்னும் ஒரு பொதுவான நிகழ்வாகவே இருந்து வருகிறது. சமூகத்தில் நடைபெற்றுவரும் குழந்தைத் திருமணத்தை ஒழிப்பதற்காக, மத்திய அரசு 1929ல் இயற்றிய குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் நீக்கப்பட்டு குழந்தைத் திருமண தடைச்சட்டத்தினை 2006ஆம் ஆண்டில் இயற்றப்பட்டுள்ளது. குழந்தைத் திருமணத்தை தடுப்பதற்கும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் நிவாரணம் வழங்குவதற்கும் மற்றும் இச்சட்டத்தை மீறி அத்தகைய திருமணங்கள் நடத்துபவர்கள் மற்றும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்பவர்கள் மீது அதிகபட்ச தண்டனையை அளிப்பதற்கு இச்சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

**சட்டத்தை செயல்படுத்துதல்**

குழந்தைத் திருமண தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தமிழக அரசால் மாநில விதிகள் ஏற்படுத்தப்பட்டு 30.12.2009 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்திட ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட சமூகநல அலுவலர்கள் குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தைத் திருமண தடுப்பு அலுவலருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் அவர்கள் குழந்தைத் திருமணம் நடைபெறுவது குறித்த ஏதேனும் தகவல் எவ்வகையில் கிடைக்கப் பெற்றாலும்

புகாரினை ஏற்று அத்தகைய குழந்தைத் திருமணத்தினை இரத்து செய்திட மாவட்ட நீதிமன்றத்தில் புகாரினை பதிவு செய்வதோடு மற்றும் குழந்தைத் திருமணத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பெற்று வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். கிராமப்புறங்களில் நடைபெறும் குழந்தைத் திருமணங்களைத் தடுக்கவும், அது குறித்து தெரிவித்திடவும், ஊராட்சித் தலைவர் அவர்களின் தலைமையில், ஊராட்சி அளவிலான குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**குழந்தைத் திருமணம் இரத்து மற்றும் செல்லாததாக்குதல்**

குழந்தைத் திருமணத்தால் பாதிக்கப்பட்ட குழந்தை 18 வயது எய்தி 2 ஆண்டிற்குள் அத்தகைய திருமணத்தை இரத்து செய்யலாம். குழந்தைத் திருமணத்தைச் செல்லாததாக்கவோ அல்லது இரத்து செய்யவோ பாதிக்கப்பட்ட அக்குழந்தை மட்டுமே அதற்கான புகாரினை தொடரலாம். சில நேர்வுகளில், குழந்தைத் திருமணத்தை நீதிமன்றத்தால் செல்லாததாக அறிவிக்க இயலும்.

*******

## அத்தியாயம் –3

## மகளிர் நலம்

**3.1. 2011–**ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பெண்கள் **49.80%** ஆவர். மாநிலத்தின் வளர்ச்சித் திட்டத்தில் பெண்களின் நலன் மற்றும் திறன் மேம்பாடு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ், பெண்களுக்கான பல்வேறு திட்டங்கள் மற்றும் பாலின சமத்துவ முயற்சிகள், பெண்கள் மேம்பாட்டில் வெற்றி வாகை சூட்டியுள்ளது.

பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்கள், ஆதரவற்றவர்கள், ஏழைப் பெண்கள் மற்றும் ஏழைப் பெற்றோர்களின் சுமைகளைக் குறைத்து, அவர்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு திட்டமாக உள்ளது. இத்திட்டங்கள் நம் நாட்டில் பெண்கள் மேம்பாடு, பெண் கல்வி விகித முன்னேற்றம், பள்ளி செல்லா பெண்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருதல் ஆகியவற்றில் ஒரு நிரந்தர பதிவை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையாகாது.

பிரதான திட்டமான திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ், பட்டதாரி அல்லாதவர்களுக்கு திருமாங்கல்யம்

செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்துடன் நிதியுதவியாக ₹25,000/—மும், பட்டதாரி மற்றும் பட்டயப்படிப்பு படித்தவர்களுக்கு திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்துடன் நிதியுதவியாக ₹50,000/—மும் 17.05.2011 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 4 கிராம் தங்கமானது 23.05.2016 முதல் 8 கிராம் (22 காரட்) தங்கமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பத்தினருக்கு உதவும் வகையில், ஆண்டு வருமானமானது ₹24,000/—லிருந்து ₹72,000/—மாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதரவற்ற பெண்கள் பாதுகாப்பான சூழலில் வசிப்பதற்கும், அவர்களின் வாழ்க்கைக்கு தேவையான கல்வி மற்றும் திறன்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில், அரசால் ஒன்பது சேவை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த சேவை இல்லங்களில் உணவு, கல்வி, திறன் மேம்பாட்டு பயிற்சி போன்றவை ஆதரவற்ற பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், பாதிக்கப்பட்ட பெண்கள் போன்றவர்களுக்கு, அவர்கள் நம்பிக்கையுடன், கண்ணியத்துடன் பொருளாதார ரீதியாக சுதந்திரமாக வாழ்க்கையை எதிர்நோக்க சேவை இல்லங்கள் உதவிகரமாக உள்ளன.

பொருளாதாரத்தில் நலிவடைந்த நிலையிலுள்ள பெண்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து, வருவாயை பெருக்கும் வகையில், தொழிற்கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக சேர்க்கப்பட்டு, உகந்த பயிற்சிகள் அளிப்பதன் மூலம், பள்ளி குழந்தைகளுக்கான நான்கு இணை சீருடைகள் தைக்கும் பணி வழங்கப்பட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட நிலையிலுள்ள மூன்றாம் பாலினத்தவரின் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில், பல்வேறு நலத் திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. இதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்காகவும், பெண்களின் உரிமையைப் பாதுகாக்கவும், பல்வேறு சமூக சட்டங்கள் இத்துறையின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005 வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961 பணி புரியும் இடங்களில் ஏற்படும் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2013 பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் ஒழுங்குமுறை சட்டம்,2014.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த புகார்கள் மற்றும் பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை கவனிப்பதற்கு பெண்களுக்கான மாநில மகளிர் ஆணையம் **1993** முதல் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.2 திருமண நிதி உதவித் திட்டங்கள்

தமிழகத்தில் பல்வேறு சமூகத்தினரால் மணப் பெண்ணிற்கு திருமணத்தின் போது தங்கத்தினால் திருமாங்கல்யம் அணிவது என்பது கலாச்சார பழக்க வழக்கமாகும். திருமணத்தில் ஏனைய செலவுகளுடன் தங்கத்தின் விலை பெற்றோர்களுக்கு ஒரு சுமையாகவே உள்ளது. எனவே, ஏழை பெற்றோர்களுக்கு உதவும் பொருட்டும், அவர்கள் தங்களது மகளுக்கு உரிய வயதில் கல்வியை அளிக்கும் பொருட்டும் திருமண நிதி உதவி திட்டங்கள் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஏழைப் பெற்றோரின் பெண்கள், விதவையரின் மகள், ஆதரவற்ற பெண்கள், கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதியர், மறுமணம் செய்துகொள்ளும் விதவையர் ஆகியோருக்கு உதவிடும் வகையில் தமிழக அரசால் ஐந்து வகையான திருமண உதவித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**2011–2012–ல் 28% ஆக இருந்த பட்டதாரி பயனாளிகளின் எண்ணிக்கை 2015–2016ஆம் ஆண்டில் 49% ஆக அதிகரித்துள்ளது.**

**2015–2016–ஆம் நிதியாண்டில் திருமண நிதி உதவித் திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை 1,61,646ஆகும்.**

### 3.2.1 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்

18 வயது பூர்த்தி அடைந்த ஏழைப் பெண்களுக்கு திருமணத்தின் போது திருமண நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெற பெண்கள் 10–ஆம் வகுப்பும், பழங்குடி இனத்தவராக இருந்தால் 5 ஆம் வகுப்பு வரையும் படித்திருக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ் பட்டதாரியல்லாதோருக்கு ₹25,000 நிதியுதவியும், திருமாங்கல்யம் செய்வதற்காக 23.05.2016 முதல் 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. பட்டம் / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு நிதியுதவியாக ₹50,000 த்துடன் திருமாங்கல்யம் செய்வதற்கு 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. பெற்றோர்கள் இறந்து விட்ட நிலையில் மகளுக்கு இந்நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன் அடைவதற்கு குடும்ப ஆண்டு வருமானம் ₹72,000 க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**2016 – 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹65,170.68 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 3.2.2 டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்

சமூகத்தில் சமுதாய மாற்றத்தையும் மறுமணம் செய்து கொள்ளும் இளம் விதவைகளின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த தமிழக அரசால் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முயற்சி இளம் விதவைகளுக்கு சமூகத்தில் சமூக ஏற்பு மற்றும் கௌரவத்தையும் அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ், பட்டதாரியல்லாதோருக்கு ₹25,000 நிதியுதவியில் ₹15,000 மின்னனு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹10,000 தேசிய சேமிப்பு பத்திரமாகவும், பட்டம் / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000 நிதியுதவியில் ₹30,000 மின்னனு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹20,000 தேசிய சேமிப்பு பத்திரமாகவும் அத்துடன் திருமாங்கல்யம் செய்வதற்காக 23.05.2016 முதல் 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு வருமான வரம்பு மற்றும் கல்வித் தகுதி ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

**2016 – 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹76.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 3.2.3 ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம்

விதவைகள் பெரும்பாலும் தங்கள் வாழ்வில் சமூக நிராகரிப்பு மற்றும் பொருளாதார பிரச்சனைகளை எதிர்கொள்வதால் அதிலிருந்து மீளும் பொருட்டு அவர்கள் பயனடையும் வகையில் அரசால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏழை விதவை தாய்மார்களின் மகள் திருமணத்திற்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசு ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விதவையர் தம் மகளுக்கு திருமணம் செய்ய உதவிடும் வகையில் பட்டதாரியல்லாதோருக்கு ₹25,000 மும், பட்டப் படிப்பு / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000மும், அத்துடன் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது.

**2016 – 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹3771.09 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 3.2.4 அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம்

ஆதரவற்ற ஏழை பெண்களுக்கு பாதுகாப்பான வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்கி அவர்களுக்கு நல்ல முறையில் திருமணம் செய்து கொடுக்கும் பொருட்டு தமிழக அரசு அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. பட்டதாரியல்லாத பெண்களுக்கு திருமண நிதி உதவியாக ₹25,000 மும், பட்டப் படிப்பு / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000 மும், அத்துடன் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு வருமான வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

**2016 – 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹373.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 3.2.5 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்

சமுதாயத்தின் சீர்கேடாக கருதப்படும் சாதி பாகுபாடு சமுதாய வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பெரும் தடையாக

இருந்து வருகிறது. இதனை அகற்றும் பொருட்டு தமிழக அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இது சமுதாயத்தில் சமத்துவம் ஏற்பட உதவுகிறது. இத்திட்டத்தின் கீழ் கலப்புத் திருமணம் செய்யும் தம்பதியரில் பட்டதாரியல்லாதோருக்கு வழங்கப்படும் ₹25,000 நிதி உதவித்தொகையில், ₹15,000 மின்னனு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹10,000 தேசிய சேமிப்பு பத்திரமாகவும், பட்டப் படிப்பு / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000 நிதி உதவித் தொகையில், ₹30,000 மின்னனு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹20,000 தேசிய சேமிப்பு பத்திரமாகவும், அத்துடன் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன் பெற கல்வித் தகுதி மற்றும் வருமான வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

**கலப்புத் திருமணத்தின் வகைகள்**

1. இத்திட்டத்தின் கீழ் பயன் பெற கலப்புத் திருமண தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினர் இனத்தவராகவும், மற்றொருவர் பிற இனத்தை சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இத்திட்டத்தில் பயன் பெற கலப்புத் திருமணம் செய்பவர்களில் ஒருவர் முற்பட்ட (அ) இதர

வகுப்பினராகவும், மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பு / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

**2016 – 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹1000.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**3.3 அரசு சேவை இல்லங்கள்**

விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பொருளாதார ரீதியாக பின் தங்கியுள்ள பெண்கள் மற்றும் குழந்தைத் திருமணத்திலிருந்து மீட்கப்பட்டு, குடும்பத்தினரால் கைவிடப்பபட்ட பெண்கள் ஆகியோருக்கு பராமரிப்பு அளிக்கும் வகையில் தமிழக அரசால் அரசு சேவை இல்லங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை, சேலம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, மதுரை, கிருஷ்ணகிரி மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டத்திற்கு ஒன்று என தமிழகத்தில் 9 அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த சேவை இல்லங்கள், இல்ல உறைவாளர்களுக்கு தங்குமிடம், உணவு, சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவற்றை அளிக்கின்றன. பள்ளிப்படிப்பை இடைநிறுத்தம் செய்த உறைவாளர்கள்

அவ்விடத்திலேயே தொடர்ந்து பயில இயலும். இந்த தன்னிகரற்ற சிறப்பான முயற்சியால் விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர் இச்சேவை இல்லங்களில் தங்களுடன் தங்களது குழந்தைகளையும் உடன் தங்க வைத்து பராமரித்துக் கொள்ள ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு தாய் தன்னுடன் அதிகபட்சமாக மூன்று குழந்தைகளைத் தங்க வைத்துக் கொள்ளலாம். இவர்களில் பெண் குழந்தையாக இருந்தால் 12ம் வகுப்பு வரையிலும், ஆண் குழந்தையாக இருந்தால் 5–ஆம் வகுப்பு வரையிலும் சேவை இல்லங்களிலேயே தங்கி கல்வி பயிலலாம். நிலையான பொருளாதார நிலையை எய்திடும் வகையில் தொழிற்கல்வியும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. வாழ்க்கைத் திறன் முறையே கணினி பயிற்சி, ஆங்கிலம் பேசும் திறன், எதிர்காலத்தில் உயர் கல்வி படிப்பது மற்றும் வேலைவாய்ப்பு குறித்து வழிகாட்டுதல் தொடர்பான ஆலோசனைகளும் இவ்வில்லங்களில் வழங்கப்படுகின்றன. 2015–16ஆம் நிதி ஆண்டில், புதிய முயற்சியாக அரசு சேவை இல்லங்களில் தங்கியுள்ள மகளிர் மற்றும் பெண் குழந்தைளுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் கண்காணிப்பு கேமராக்கள் ₹9.43 இலட்சம் செலவில் பொருத்தப்பட்டுள்ளது.

**2016 – 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹631.48 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**3.4 பெண்களுக்கான உயர்கல்வித் திட்டம்**

அரசு சேவை இல்லங்களில் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து முடித்த பெண் குழந்தைகள் உயர்கல்வி பயின்றிட ஊக்கப்படுத்துவதோடு தொழிற்சார் கல்வி பயின்றிட**₹50,000/–** மற்றும் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு படித்திட **₹30,000/–** என்று நிதியுதவி அரசால் வழங்கப்படுகின்றது.

**2016 – 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹65.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**3.5 இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனம்**

அரசு சேவை இல்லங்கள் மற்றும் அரசு குழந்தைகள் காப்பகத்தில் மேல்நிலைப் படிப்பு முடித்த மாணவிகள் தாம்பரத்தில் உள்ள இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் சேர்க்கப்படுகின்றனர். இந்த இல்லத்தில் ஒவ்வொரு ஆண்டும் **40** மாணவிகள் இரண்டு ஆண்டு ஆசிரியர் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆசிரியர் பயிற்சி மாணவிகளை கல்வி, சுற்றுலா, அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படுவதால்

வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள், அருங்காட்சியகங்கள், அறிவியல் கண்காட்சிகள், உயிரியல் பூங்காக்கள், கேளிக்கைப் பூங்காக்கள் போன்ற இடங்களை பார்வையிட வாய்ப்பு ஏற்படுகிறது. இதன் மூலம் அவர்கள் பல்வேறு இடங்களை பார்த்து பல்வேறு தகவல்களை சேகரிக்கவும் அனுபவ பூர்வமான அறிவை பெறவும் உதவுகிறது. **2014–2015** ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் **80** உள்ளுறைவோர்கள் தங்கிட புதிய துயிற் கூடம் ஒன்று ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. இதனால் அங்கு கல்வி பயிலும் பெண் குழந்தைகள் படிப்பதற்கு கூடுதலாக இட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**2016 – 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹9.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**3.6 பணிபுரியும் மகளிர் விடுதிகள்**

தொழில்மயமாக்கல் மற்றும் நகரமயமாக்கல், நகரம் மற்றும் நகர்ப்புறங்களில் இளம் பெண்களின் வேலைவாய்ப்புக்கு வழிவகை செய்கிறது. இதனால் அவர்கள் தங்கள் இல்லங்களை விட்டு வெளியில் தங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், அவர்களுக்கு இயன்ற வாடகையில் பாதுகாப்பாக தங்கும் விடுதியின் தேவை அதிகரித்துள்ளது. விலைவாசி

உயர்வு மற்றும் வாடகை உயர்வு ஆகியவற்றால், வாழ்வதற்கான செலவு உயர்ந்துள்ளதால் ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த பெண்கள் தங்களுக்கு கிடைக்கும் குறைந்த வருமானத்தில் தாங்கள் பணிபுரியும் புதிய இடங்களில் பொருளாதார ரீதியாக சமாளிக்க மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, பணிபுரியும் பெண்களுக்கு உதவிடும் வகையில் 28 பணிபுரியும் மகளிர் விடுதிகள் 18 மாவட்டங்களில் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் 14 பணிபுரியும் மகளிர் விடுதிகள் 14 மாவட்டங்களில் துவங்கிட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சென்னையில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிபுரியும் மகளிர் அரசு விடுதிகளில் சேர ₹25,000 வரையும், இதர இடங்களில் ₹15,000 வரையும் மாத வருமானம் ஈட்டும் பணிபுரியும் பெண்கள் பயன் பெற தகுதியுடையவராவர். இங்கு அனுமதிக்கப்படும் பெண்கள் மாத வாடகையாக சென்னையில் ₹300 ம் இதர இடங்களில் ₹200 ம் செலுத்த வேண்டும். உணவுக் கட்டணம், மின் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் போன்ற செலவினங்கள் பகிர்ந்தளித்தல் முறையில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த விடுதிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது.

**2016 – 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென₹164.72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 3.7 மகளிரின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள்

தமிழ்நாடு அரசு மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் பல்வேறு சமூக பொருளாதார திட்டங்களை கூட்டுறவு சங்கங்களின் மூலம் செயல்படுத்தி வருகிறது. மகளிருக்கு அதிகார பகிர்வு அளிப்பு என்பது அவர்களுடைய பொருளாதார தேவையினைப் பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல் அவர்கள் சுதந்திரமாக செயல்படுவதற்காக அவர்களது திறன் மற்றும் அறிவினை மேம்படுத்துவது மூலம் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துவதாகும்.

பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு 98 மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் சமூக நல ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது. இவற்றில் 80 மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவ/மாணவியர்களுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்

கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்கும் மற்றும் இதர பள்ளிக் குழந்தைகளுக்கும் 4 இணை சீருடைகள் தைத்து வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் பெண் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் சீருடை தைத்தல் மற்றும் வழங்குதல் பணியானது அவர்களுக்கு நிலையான வருவாயை ஈட்டித் தர வழிவகுத்துள்ளது. 25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழில் கூட்டுறவு சங்கங்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இதர சங்கங்கள், அலுவலகத்திற்கு தேவையான பதிவேடுகள், ஆவணங்கள், சாக்குகட்டிகள் மற்றும் கயிறு தயாரித்தல் போன்ற பணிகளோடு சீருடைகள் தயாரிக்கும் பணிகளையும் கூடுதலாக செய்து வருகின்றன.

தொழிற்கூட்டுறவு சங்க உறுப்பினர்களாக ஆவதற்கு சமுதாயத்தில் உள்ள நலிவுற்ற பிரிவினர், 18 வயதிற்கு மேற்பட்ட வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பெண்கள், விதவை பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர்கள், தையல் தொழில் தெரிந்தவர்கள் தகுதி உடையவர்களாவர். தொழிற்கூட்டுறவு சங்க உறுப்பினர்களாக இருக்கும் பெண்களுக்கு ஆண்டு முழுவதற்கும் நிலையான வருவாயை ஈட்டித்தரும் வகையில்

வேலை வாய்ப்பினை அளிக்கவும் இத்திட்டம் உறுதுணையாக உள்ளது.

நவீன ரக தையல் இயந்திரங்கள் ₹5.40 கோடி அரசு மானியத்தில் மகளிர் தையல் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. நவீன ரக தையல் இயந்திரங்களை வழங்குவதன் மூலம் சங்க உறுப்பினர்களின் தைக்கும் திறன் மற்றும் உற்பத்தி திறன் அதிகரித்து வருகிறது.

12 மாவட்டங்களில் 285 பெண்கள் பயன்பெறும் வகையில் 13 தையல்பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. சேலம் மற்றும் திருவண்ணாமலையில் பழங்குடியின பெண்களுக்கென தையல் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 35 பழங்குடியினப் பெண்கள் தையல் பயிற்சி பெற்று வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டத்தில் பொம்மை தயாரிக்கும் மையம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு 2012–13ஆம் கல்வி ஆண்டு முதல் 4 இணை சீருடைகள் வழங்க ஆணை பிறப்பித்ததைத் தொடர்ந்து, இந்த கல்வியாண்டில் 45.47 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் 4 இணை சீருடைகள் பெற்று பயன்அடைந்துள்ளார்கள். சீருடை தைப்பதற்கான தையல் கூலி 2011–12ஆம் ஆண்டு முதல் இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் சீருடைகள்

தைப்பதற்கு ₹90 கோடி பள்ளிக் கல்வித்துறை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுவருகிறது.

**கூட்டுறவு சங்கங்களின் விவரம் மற்றும் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு**

| வ. எண். | கூட்டுறவு சங்கங்களின் வகைகள் | கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்–களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் | **80** | **73,047** |
| 2. | மகளிர் எழுது பொருள் கூட்டுறவு சங்கங்கள் | **15** | **1,017** |
| 3. | இணை உணவு தயாரிக்கும் பெண்கள் தொழில் கூட்டுறவு சங்கங்கள் | **25** | **1,450** |
| 4. | இதர சங்கங்கள் | **3** | **1,743** |
| | மொத்தம் | **123** | **77,257** |

இந்த சங்கங்கள் மகளிரின் சமூக நிலையை மேம்படுத்தும் மற்றும் நலிவுற்ற நிலையில் உள்ள மகளிரின் பொருளாதார நிலையை உயர்த்தும் சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**3.8 சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்**

விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள், ஆண் / பெண் மாற்றுத் திறனாளிகள், சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோர் சுயமாக தொழில் செய்து தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கு உதவிடும் வகையில் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் மூலம் சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2016–17ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹135.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**3.9 தமிழ் நாடு மாநில மகளிர் ஆணையம்**

பெண்களுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993–ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாணையத்தில் மாநில மகளிர் ஆணையத் தலைவி மற்றும் 9 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், பெண்களுக்கு சமத்துவம் வழங்கவும், பெண்களுக்கெதிரான

அனைத்து வகை இன்னல்களிலிருந்து பாதுகாப்பினை உறுதி செய்யவும் மற்றும் குடும்பத்திலும், சமுதாயத்திலும் எதிர்கொள்ளும் பிரச்சனைகளிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான அதிகாரங்களைப் பெற்ற ஒரு சட்ட ரீதியான அமைப்பாகும். மேலும், மகளிர் ஆணையம் பெண்களின் தனிப்பட்ட பிரச்சனைகளைக் கண்டறிந்து அது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறது. இவ்வாணையம் பெண்கள் சம்பந்தப்பட்ட சட்டங்கள் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**ஆணையத்தின் குறிக்கோள்கள்**

- மகளிரின் நலனை உறுதி செய்து அவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்
- பாலினம் குறித்த விவகாரங்களை கவனித்தல்
- பெண்களின் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக ஆணையத்தின் பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைத்தல்

### 3.9.1 மகளிர் ஆணையத்தின் செயல்பாடுகள்

1. இந்திய அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சட்ட பிரிவுகள், பாதுகாப்புகள் மற்றும் பெண்களுக்கான சட்டங்கள் குறித்தான விவரங்களை கவனித்தல்.

2. பெண்களின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் பல்வேறு நிறுவனங்கள் மூலம் முறையாக செயல்படுத்தப்படாத போது அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லுதல்.

3. பெண்களுக்கு நீதி கிடைக்க தவறும் பட்சத்தில் தேவையான நீதியைப் பெறுவதற்கு உரிய சட்டத்திருத்தம் மேற்கொள்ளஅரசுக்கு பரிந்துரை செய்தல்.

4. பெண்களின் உரிமைகள் மறுக்கப்படும் நிகழ்வுகள் மீது நடவடிக்கை மேற்கொண்டு உரிய அதிகாரம் பெற்ற அலுவலர்கள் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் கண்டுள்ளவாறு பாதுகாப்பிற்கான உத்திரவாதம் வழங்கப்படாத நிலையிலும், பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலும், பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது பிரச்சனைகளுக்குத் தீர்வு காண மகளிர் ஆணையத்தை நேரிடையாக அணுகலாம்.

### 3.10 தமிழ்நாடு சமூக நல வாரியம்

தமிழ்நாடு சமூகநல வாரியம் தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மகளிர் மற்றும் குழந்தைகளின்

முன்னேற்றத்திற்காக தன்னார்வதொண்டு நிறுவனங்கள் மூலம் சேவை அளிக்கும் நோக்கத்தில் 1954 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது.

**தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் முக்கிய நோக்கங்கள்**

1. மகளிர் மற்றும் குழந்தைகள் தொடர்பான தன்னார்வ முயற்சிகளை ஊக்குவித்து மேம்படுத்துதல்.
2. தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து அவற்றின் சேவைகளின் தரத்தையும் மதிப்பையும் உயர்த்துதல்.
3. மாநில மற்றும் மத்திய சமூகநல வாரியங்களின் திட்டங்களையும் மாநில அரசின் திட்டங்களையும் நன்முறையில் செயல்படுத்துவதை கண்காணித்தல்.

தமிழ்நாடு சமூகநல வாரியம் ஒரு தலைவரையும் 30 அலுவலல் சாரா உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. கல்வி மற்றும் பயிற்சி மூலமாக பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், கூட்டு முயற்சி, விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் வாழ்வாதாரத்திற்கு வருவாய் பெருக்கும் நடவடிக்கைகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பை தனது சேவைகளின் மூலம் தமிழ்நாடு சமூக நல வாரியம் ஊக்கப்படுத்தி உதவி செய்கிறது.

**3.10.1 தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் மூலம் 2016–17 ஆம் ஆண்டில் வழங்கப்படும் நிதியுதவி விவரம்**

| நிதியுதவி | தொண்டு நிறுவனங்களின் எண்ணிக்கை | மொத்த அலகுகள் எண்ணிக்கை | மொத்த நிதி ஒதுக்கீடு (இலட்சம்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மாநில அரசு | 206 | 206 | 14.8 | 5,018 |
| மத்திய சமூக நல வாரியம் | 382 | 1,234 | 147.55 | 65,607 |
| **மொத்தம்** | **588** | **1,440** | **162.35** | **70,625** |

**3.10.2 தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் மூலம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் மானியம்**

மகளிர் மற்றும் குழந்தைகள் முன்னேற்றப் பணியில் ஈடுபட்டுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்கள். சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் (அ) பொது அறக்கட்டளை சட்டத்தின் கீழ் பதிவு செய்து, குறைந்த பட்சம் மூன்று வருடங்கள் சிறப்பாக செயல்படும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுகின்றன. பயிற்சி உபகரணங்கள் மற்றும் குழந்தைகளின் விளையாட்டு சாதனங்கள் போன்றவைகள் வாங்குவதற்கு ஒவ்வொரு தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கும் ₹5,000/– அரசு மானியமாக ஒரு முறை மட்டும்

வழங்கப்படுகிறது. அத்தொகையுடன் அந்நிறுவனத்தின் பங்களிப்பாக **₹5000/–** சேர்த்து (50:50) செலவினம் மேற்கொள்ளப்படுகிறது. **200** தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தில் தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் கீழ் பயன்பெறுகின்றன. இத்திட்டத்திற்கென **2016–17**ஆம் நிதியாண்டிற்கு **₹10.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.11 குடும்ப ஆலோசனை மையம்**

குடும்பங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரிய நேரிடும் தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்கவும், தம்பதிகள் இருவரும் இணைந்து வாழ்வதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கவும் குடும்ப ஆலோசனை மையம் என்ற திட்டம் உருவாக்கப்பட்டது. இம்மையம் வரதட்சணை கொடுமை, தம்பதிகளுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகள், குடிப்பழக்கத்தால் ஏற்படும் குடும்பப் பிரச்சனைகள் மற்றும் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு தகுந்த ஆலோசனையும் வழங்கி வருகின்றது. தற்போது **6** குடும்ப ஆலோசனை மையங்கள், சென்னை,திருவள்ளூர், விழுப்புரம், திருவாரூர், தேனி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. **2016–17**ம் ஆண்டிற்கு **₹4.80** இலட்சம் மாநில அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மாநில அரசு நிதியுதவி மூலம் நடத்தப்படும் 6 குடும்ப ஆலோசனை மையங்களின் சேவையை அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் பயன்படுத்தி, அதன் மூலம் குடிபழக்கம், போதை பழக்கம், வரதட்சணை கொடுமை மற்றும் இதர குடும்ப பிரச்சனைகள் முறையான ஆலோசனை மூலம் சுமூகமாக தீர்க்கப்படுவதோடு, பாதிக்கப்பட்ட பெண்கள் குடும்பத்தில் உரிய மதிப்போடு வாழ்வதற்கு ஏதுவாக ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. இதற்காக குடும்ப ஆலோசகர்களுக்கு கூடுதல் மதிப்பூதியமாக ஆலோசகர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ₹3,500/– என்ற வகையில் ஆறு ஆலோசகர்களுக்கு செலவினம் மாநில அரசால் கூடுதலாக மேற்கொள்ளப்படுகிறது.

## 3.12 தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியம்

மூன்றாம் பாலினத்தவர்கள் பெரும்பாலும் சமூகத்தால் மிகவும் ஒதுக்கப்பட்டும் அவர்களின் சொந்த குடும்பங்களை விட்டு துரத்தப்படுகிறார்கள். அவர்கள் தவறான வழியிலும், இழப்பு மற்றும் பல்வேறு பாரபட்சத்திலும் தள்ளப்படுகிறார்கள். மேலும் அவர்கள் பள்ளிகளிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்படுவதால், பெரும்பாலானோர் படிப்பறிவு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். எந்த வேலைக்கும் வாய்ப்பு மற்றும் பாதுகாப்பு கிடைக்காமலும், எல்லா பகுதிகளிலிருந்தும்

பாகுபாட்டினை எதிர்கொள்கிறார்கள். எனவே, அவர்கள் நாடோடி வாழ்க்கைக்கு தள்ளப்பட்டு பணத்திற்காக பிச்சையெடுக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். குடும்பத்தை விட்டு வெளியேறும் மூன்றாம் பாலினத்தவர்கள் பெரும்பாலும் இன்றியமையா ஆவணங்கள் குறிப்பாக பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் மற்றும் பிற அத்தியாவசிய ஆளறி அடையாள அட்டைகளான குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்றவைகளை வைத்திருப்பதில்லை. உச்சநீதிமன்றத்தின் வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பின்படி திருநங்கைகள் மூன்றாம் பாலினமாக அங்கீகரிக்கப்படவேண்டும்.

மூன்றாம் பாலினத்தவர்களின் பிரச்சனைகளைப் பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் தீர்வு செய்வதற்காக அரசு, மூன்றாம் பாலினத்தவர்களுக்கான நல வாரியத்தை அமைத்துள்ளது. தமிழ்நாடு மூன்றாம் பாலின நலவாரியம் மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், 11 அலுவல் உறுப்பினர்கள் மற்றும் 9 அலுவல் சாரா உறுப்பினர்களைக் (மூன்றாம் பாலினத்தவர்கள்) கொண்டது.

மூன்றாம் பாலினத்தவர் தங்களது வாழ்வாதாரத்திற்காக ஒழுக்கமும் மதிப்புமிக்க வகையில் தொழில் ஒன்றை அமைத்துக் கொள்வதே அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களில்

முதன்மையானதாகும். மூன்றாம் பாலினத்தவர் தங்களது வாழ்வாதாரத்தை, பொருளாதார ரீதியாக உயர்த்திக் கொள்ளும் பொருட்டு வருவாய் ஈட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ள அவர்களின் சுய உதவிக்குழுக்களுக்கு 25 சதவிகித மானியத்துடன் ₹15.00 இலட்சம் வரை வங்கிக் கடன் அளிக்கப்படுகிறது. மளிகை கடை அமைத்தல், பசுமாடுகள் வளர்த்தல், சிற்றுண்டி உணவகம் அமைத்தல், சோப்பு உற்பத்தி செய்தல், அணை ஆடை உற்பத்தி செய்தல், பால் பொருட்களை உற்பத்தி செய்தல், பயணிகள் ஆட்டோ, சரக்கு ஆட்டோ ஓட்டுதல் மற்றும் துணி வியாபாரம், அரிசி வியாபாரம் போன்ற பல்வேறு பொருளாதார செயல்பாடுகளை மூன்றாம் பாலினத்தவர் சுய உதவிக் குழுக்கள் மூலம் செய்து வருகின்றனர். பல்வேறு திட்டங்களுக்காக, 442 உறுப்பினர்களைக் கொண்ட 51 சுய உதவிக் குழுக்களுக்கு ₹2.20 கோடி மொத்த உதவித் தொகையில் 25 சதவிகித மானியமாக ₹55.00 இலட்சமும், வங்கிக் கடனாக ₹1.65 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினத்தவர்களுக்கு உதவிடும் வகையில், மாதாந்திர ஓய்வூதியம் ₹1000/– வழங்கும் திட்டத்தை துவக்கி

வைத்தார்கள். இத்திட்டத்தின் கீழ் தற்போது 954 மூன்றாம் பாலினர் மாதந்திர ஒய்வூதியம் பெற்று வருகின்றனர்.

**மூன்றாம் பாலினரின் நலத் திட்டத்திற்காக 2016–17 ஆம் நிதியாண்டில் ₹220.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 3.13 பெண்களுக்கான நலச் சட்டங்கள்

கீழ்க்காணும் சமூக நல சட்டங்கள் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையை முகமையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. குடும்ப வன்முறையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005
2. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961.
3. பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2013.
4. தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014 மற்றும் தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகள், 2015.

### 3.13.1 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005

இச்சட்டம் சமுதாயத்தில் வன்முறை இல்லாத குடும்பத்தில் பெண்கள் வசிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சிறப்பு அம்சங்கள் உள்ளடக்கிய சட்டமாகும். இச்சட்டம் பெண்கள் புகுந்த வீட்டில் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்கிறது. மேலும் இச்சட்டம் உரிமையியல் மற்றும் குற்றவியல் பிரிவுகளைக் கொண்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் அளித்த 60 நாட்களுக்குள் தீர்வுபெற முடியும். இச்சட்டத்தின் கீழ் குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தனது கணவர் மற்றும் கணவரைச் சார்ந்த உறவினர்கள் மீதும் மற்றும் திருமணம் போன்ற உறவில் வாழும் ஆண் நபரை எதிர்மனுதாரராக சேர்த்து நிவாரணம் கோரி வழக்கு தொடருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- ❖ பிரிவு 17ன் கீழ் பெண்கள் தனது புகுந்த வீட்டில் வசிப்பதற்கான உரிமையை உறுதி செய்தல்.
- ❖ பொருளாதார வன்முறைக்கு எதிராக நிவாரணம் பெறுவதை உறுதி செய்தல்.
- ❖ வார்த்தைகள் மற்றும் மனரீதியான கொடுமைகளை கண்டறிதல்.
- ❖ பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது குழந்தைகளைத்

தற்காலிகமாக தன்னுடன் வைத்துக் கொள்வதற்கான பாதுகாப்பு வழங்குதல்.

❖ வழக்கு பதிவு செய்த 60 நாட்களுக்குள் நீதிமன்ற தீர்ப்பினை பெற்று வழங்குதல்.

❖ ஒரே வழக்கில் பல தீர்ப்புகளை பெற இச்சட்டம் வழிவகை செய்துள்ளது.

❖ பாதிக்கப்பட்ட நபர்களுக்கிடையே மற்ற வழக்கு விசாரணைகள் நிலுவையிலிருந்த போதிலும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005ன் கீழ் வழக்கு பதிவு செய்யலாம்.

❖ மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் மேல் முறையீடு செய்யலாம்.

### 3.13.2 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005ன் கீழ் கிடைக்கும் நிவாரணங்கள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| பிரிவு 18 | – | பாதுகாப்பு ஆணை |
| பிரிவு 19 | – | கணவர் வீட்டில் தங்குவதற்கான வசிப்பிட ஆணை |
| பிரிவு 20 | – | பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் அவர் தம் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பொருள் உதவி ஆணை |

| | | |
|---|---|---|
| பிரிவு **21** | – | குழந்தைகளைத் தற்காலிகமாக தங்களுடன் வைத்துக் கொள்வதற்கான பாதுகாப்பு ஆணை |
| பிரிவு **22** | – | வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான இழப்பீட்டு ஆணை |

### 3.13.3 பாதுகாப்பு அலுவலர்கள்

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது கணவர் அல்லது கணவர் போன்ற உறவுமுறையிலான ஆண்களுக்கு எதிராக நிவாரணம் கோரி அணுகும் பெண்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசால் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், **2005–**ன் கீழ் பாதுகாப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். பாதுகாப்பு அலுவலர்கள் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இலவச சட்ட உதவி அளித்து, நீதிமன்றத்தின் மூலம் தக்க நிவாரணம் பெறுவதற்கு உதவியாக இருப்பார். மேலும் நீதிமன்றத்தினால் வழங்கப்படும் ஆணைகளை காவல்துறையின் உதவியோடு செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பார். பாதிக்கப்பட்ட பெண்கள் இச்சட்டத்தின் கீழ் நேரடியாக நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலோ அல்லது சேவை அளிக்கும் நிறுவனத்திலோ அல்லது அருகிலுள்ள காவல் துறையிலோ புகார் மனு அளிக்கலாம்.

### 3.13.4 சேவை அளிப்பவர்கள்

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் **2005**ன் கீழ் அறிவிப்பு செய்யப்பட்டுள்ள தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த நபர்கள் சேவை அளிப்பவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இச்சட்டத்துடன் தொடர்புடைய அரசு அலுவலர்களுடன் இணைந்து பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதித்துறையின் மூலம் நிவாரணம் பெற்றுத்தர உதவி செய்து வருகின்றனர். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு குடும்ப நிகழ்வு அறிக்கை பதிவு செய்வதில் உதவுதல், பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது குழந்தைகளுடன் தங்குவதற்கு பாதுகாப்பான குறுகிய கால உறைவிடம் பெற்றுத் தருதல், ஆலோசனை மற்றும் தேவையெனில் மருத்துவ வசதி வழங்குதல் போன்ற உதவிகளை செய்கின்றனர். மேலும் பாதிக்கப்பட்ட பெண்கள் சுயமாக சம்பாதித்து வருமானம் ஈட்டுவதற்கு ஏதுவாக தொழிற்பயிற்சி பெறவும் உதவி செய்கின்றனர். தமிழக அரசால் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் எனவும், சென்னை மாவட்டத்திற்கு மட்டும் **2** நபர்கள் என மொத்தம் **33** சேவை அளிப்பவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### 3.13.5 பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் மருத்துவ வசதிகள்

தமிழகத்தில் 98 பாதுகாப்பு இல்லங்கள் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம்,2005ன் கீழ் அறிவிக்கை செய்யப்பட்டவாறு செயல்படுகின்றன. மேலும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவிடும் வகையில் அரசு மருத்துவமனைகளுடன் சேர்த்து மொத்தம் 1,849 மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், தொழிலாளர் காப்பீட்டு நிறுவன மருந்தகங்கள் ஆகியன மருத்துவ வசதி மையங்களாக அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

### 3.14 வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961

1961ஆம் ஆண்டு வரதட்சணை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டு அதற்கான சட்ட விதிகள் 2004ஆம் ஆண்டு தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டது. வரதட்சணை தடுப்பு விதிகளின்படி மாவட்ட சமூக நல அலுவலர்கள் வரதட்சணை தடுப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் மூலம் இச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இச்சட்டத்தினை சிறப்பான முறையில் செயல்படுத்த அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கும் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. வரதட்சணை தொடர்பாக மாவட்ட

சமூக நல அலுவலர்களால் நேரடியாக பெறப்படும் புகார் மனுக்கள் மற்றும் காவல் துறையின் மூலம் பரிந்துரை செய்து பெறப்படும் வழக்குகள் வரதட்சணை தடுப்பு அலுவலரால் விசாரிக்கப்படுகிறது. புகாரின் உண்மைத் தன்மை அறியப்பட்டு, அதன்அடிப்படையில் வரதட்சணை தடுப்புச் சட்டம்,1961ன் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மாவட்ட சமூக நல அலுவலர்களால் காவல்துறைக்கு / நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் நவம்பர் 26–ஆம் நாள் வரதட்சனை தடுப்பு தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. அன்றைய தினம் மாவட்ட சமூக நல அலுவலர்கள் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து வரதட்சணை தடுப்புச் சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

### 3.15 தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014.

வீட்டை விட்டு வெளியில் தங்கியுள்ள குழந்தைகள், பெண்கள், பணிபுரியும் மகளிர் ஆகியோர்களின் பாதுகாப்பினை அதிகப்படுத்தவும், அவர்களுக்கு எதிரான வன்முறை செயல்களை தடுக்கவும், வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குவதற்காகவும் குழந்தைகள், வளர் இளம் பெண்கள்

மற்றும் பெண்கள் தங்கும் இடங்களான இல்லங்கள், விடுதிகள் மற்றும் ஏனைய பிற நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்காக தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014 மற்றும் தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகள், 2015 இயற்றப்பட்டதுடன், தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையும் செய்யப்பட்டுள்ளது. இது போன்ற இல்லங்கள் மற்றும் விடுதிகளை பதிவு செய்யும் அதிகாரி மாவட்ட ஆட்சியரே ஆவார். தேவையின்றி குழந்தைகளை இல்லத்தில் வைத்திருப்பதை குறைப்பதும், விடுதிகளில் தங்கி பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும் இச்சட்டத்தின் நோக்கமாகும்.

**3.16 மாநில பெண்கள் வள மையம் (SRCW)**

மாநிலங்களில் பெண்களின் ஒட்டுமொத்த திறன் மேம்பாட்டினை முதன்மை நோக்கமாக கொண்டு பெண்கள் மேம்பாட்டிற்கான மாநில பெண்கள் வள மையத்தை தேசிய அளவிலான அமைப்பு உருவாக்கியுள்ளது.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் முன்னோடித் திட்டங்களை மறு ஆய்வு செய்து, கண்காணிக்கும் பொருட்டு

ஏற்கனவே மாநிலங்களில் செயல்பட்டு வரும் அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து மாநில பெண்கள் வள மையம் செயல்பட்டு வருகின்றது. இந்திய அரசின் கீழ்க்காணும் பல்வேறு திட்டங்களை பெண்களுக்காக மாநில பெண்கள் வள மையம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

## 1. சகி - (ஒன் ஸ்டாப் கிரைசஸ் சென்டர்) Sakhi - (One Stop Crisis Centre)

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான ஒருங்கிணைந்த உதவிகளைப் பெற்றுத் தருவது இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கான உடனடி தேவைகளை கவனித்தல், மனநல மேம்பாடு, சட்ட, மருத்துவ சேவை ஆகியவற்றை பொது மற்றும் தனியார் அமைப்புகளுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

## 2. பெண்களுக்கான கட்டணமில்லா தொலைபேசி உதவித் திட்டம் (Women Help Line)

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவசர உதவி தேவைப்படும் போது உதவிக் கரம் நீட்டும் வகையில் **24** மணி நேரம் செயல்படும் பெண்களுக்கான கட்டணமில்லா தொலைபேசி உதவித் திட்டம் (Women Help Line) ஆரம்பிக்கப்பட உள்ளது. இவ்வுதவித் திட்டத்தில், அவர்களுக்கு தேவையான மீட்பு மற்றும் பரிந்துரையை உரிய நிறுவனங்களான

காவல் துறை/ மருத்துவம்/ விரைவு ஊர்தி சேவை/ மாவட்ட சட்ட ஆணைக்குழு / பாதுகாப்பு அலுவலர் ஆகியோர் மூலம் உதவியும் தகவலும் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், தகுந்த தேவையான ஆதரவு தரக்கூடிய பணிகளை தேர்ந்தெடுக்கவும், அரசாங்கத் திட்டங்கள் மற்றும் பணிகளை, பாதிக்கப்பட்ட பெண்கள் அவர்கள் இருக்கும் இடம் மற்றும் பணிபுரியும் இடத்திலேயே பெற்றுக் கொள்வதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம், சகி (ஒன் ஸ்டாப் கிரைசஸ் சென்டர்) உடன் இணைந்து செயல்பட உள்ளது.

## 3. கிராம ஒருங்கிணைப்பு மற்றும் சேவைகளை எளிதாக்கும் திட்டம் (VCFS)

மாநிலத்தில் அனைத்து துறைகளிலும் மகளிருக்கு முழுமையாக அதிகாரமளிப்பதற்கு பாடுபடுவது இதன் முக்கிய நோக்கமாகும். இது, மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்களை முனைப்புடன் ஒருங்கிணைப்பதன் வாயிலாக பாலின உணர்வு குறித்த திட்டங்கள், சட்டங்கள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதற்கு, மகளிருக்கு அதிகாரமளிக்கும் விவகாரங்களில் ஈடுபடும் அரசுக்கும், ஏனைய பொறுப்பாளர்களுக்கும் உதவுகிறது. தமிழ்நாட்டில் கிராம ஒருங்கிணைப்பு மற்றும் சேவைகளை எளிதாக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கு கடலூர் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**4. பூர்ண சக்தி கேந்திரா (Poorna Sakthi Kendra)**

அடித்தட்டு அளவில் உள்ள பெண்களுக்கு சேவைகளை வழங்குவதும், தரத்தினை ஊக்குவிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் பெண்களின் மேம்பாட்டிற்கு தேசிய அமைப்பின் கீழ் சேலம் மாவட்டத்தில் 10 பஞ்சாயத்துக்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## 3.17 விருதுகள்

உலக மகளிர் தினமான மார்ச் 8ஆம் தேதி அன்று, சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில், இந்தத் துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து, அவ்வையார் விருது எனும் உயரிய விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இவ்விருது பெறுபவருக்கு 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், ₹1.00 இலட்சம் காசோலை, சால்வை மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகிறது.

சிறந்த சமூக சேவகி மற்றும் சிறந்த நிறுவனத்திற்கு சுதந்திர தின விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. சிறந்த சேவகிக்கு 10 கிராம் எடையுள்ள 22 காரட் தங்கப்பதக்கம், சான்றிதழ் மற்றும் சால்வை ஆகியவை வழங்கப்படுகின்றன. சிறந்த நிறுவனத்திற்கு மேற்கூறியவற்றுடன் ₹50,000 ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது.

*******

## அத்தியாயம் – 4

# புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம்

4.1 சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே ஒரு முதன்மை மாநிலமாக திகழ்கிறது. உணவளிப்பதன் மூலம் பள்ளிக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், மாணவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வருவதை உறுதிசெய்திடவும், குழந்தைகளின் ஊட்டச்சத்தினை அதிகரிக்க வேண்டியும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் 1982ல் தொடங்கப்பட்டது. பசியோடு உள்ள குழந்தையாலும், ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தையாலும் படிப்பின் மீது கவனம் செலுத்த இயலாது என்ற காரணியின் அடிப்படையில், அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், சர்வ சிக்ஷ அபியான் திட்டத்தின் கீழ் செயல்படும் சிறப்பு பயிற்சி மையங்கள், மதரசாக்கள் மற்றும் மக்தப்களில் பயிலும் துவக்கபள்ளி குழந்தைகளுக்கும், மற்றும் உயர்துவக்கப்பள்ளிகளில் 10ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் மூலம் இலவச மதிய உணவு வழங்கப்படுகிறது.

## 4.2 இத்திட்டத்தின் அடிப்படை கோட்பாடுகள்

1. அனைவருக்கும் ஆரம்ப கல்வியினை உறுதி செய்திடும் பொருட்டு, பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல் மற்றும் இடை நிற்றலை குறைத்தல்

2. கிராமப்புறங்களில் வறுமையால் வாடும் குழந்தைகளுக்கும் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்தினை வழங்குதல்

3. ஏழ்மையில் வாடும் பின்தங்கிய சமூகத்தைச் சார்ந்த குழந்தைகள் பள்ளிக்கு வருவதை முறைப்படுத்தவும் மற்றும் முறையான கல்வி பெற்றிடவும்

4. வேலைவாய்ப்பு வழங்குவதன் மூலம் பெண்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்திடவும்

## 4.3 சத்துணவுத் திட்டத்தின் கால முறை முன்னேற்றம்

**01.07.1982** புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டமானது ஊரகப் பகுதிகளிலுள்ள குழந்தைகள் மையங்களில் முன்பருவக் கல்வி பயிலும் 2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 5 முதல் 9 வயதிற்குட்பட்ட ஆரம்பப்பள்ளி பயிலும் குழந்தைகள் ஆகியோர் பயன்பெறும் வகையில் துவக்கப்பட்டது.

| | |
|---|---|
| **15.09.1982** | நகர்ப்புறப் பகுதிகளுக்கு விரிவுப்படுத்தப்பட்டது. |
| **15.09.1984** | 10 வயது முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகள் பயனடையும் வகையில் விரிவுப்படுத்தப்பட்டது. |
| **03.06.1989** | பள்ளி செல்லும் அனைத்து குழந்தைகளுக்கும் இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு முட்டை வழங்குவது அறிமுகப்படுத்தப்பட்டது |
| **12.09.2001** | பயிறு வகைகள் – கொண்டைக் கடலை / பச்சைப் பயிறு மற்றும் வேக வைத்த உருளைக் கிழங்கு அறிமுகப்படுத்தப்பட்டது. |
| **20.03.2013** | ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு முன்னோடி வட்டாரத்தில் புதிய வகை கலவை சாதம் மற்றும் நான்கு வகை மசாலா முட்டை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. |
| **15.08.2014** | புதிய வகை கலவை சாதம் மற்றும் நான்கு வகை மசாலா முட்டை வழங்கும் திட்டம் மாநிலத்திலுள்ள அனைத்து வட்டாரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. |

## 4.4 நிர்வாகக் கட்டுப்பாடு

ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலுள்ள பள்ளி சத்துணவு மையங்கள், சமூக நல இயக்குநரகத்தின் நிர்வாகக்

கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை மாவட்டங்களில் செயல்படுத்தும் மாவட்ட அலுவலர்கள், ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்தவர்கள். 2 முதல் 5+ வயது வரையிலான குழந்தைகளுக்கான முன்பருவ கல்வி சத்துணவு மையங்கள், இயக்குநர் / குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள், அவர்களது நிர்வாக கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றது.

### 4.5 அங்கன்வாடியில் பயன்பெறும் பயனாளிகள்

| வ. எண் | பயனாளிகளின் வகைப்பாடு | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | அங்கன்வாடி மையங்களில் 2 முதல் 5+ வயது வரையுள்ள குழந்தைகள் (25 முதல் 72 மாதங்கள் வரை) | 54,439 | 13,97,465 |
| 2. | சத்துணவுப் பெறும் முதியோர் ஓய்வூதிய பயனாளிகள் | | 127 |
| | மொத்தம் | 54,439 | 13,97,592 |

## 4.6 பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் பயனாளிகள்

| வ. எண் | நிலை | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | துவக்கப்பள்ளி (1 முதல் 5 ஆம் வகுப்பு வரை) | 26,780 | 26,88,345 |
| 2. | உயர் துவக்கப்பள்ளி (6 (முதல் 8 ஆம் வகுப்பு | 15,993 | 21,10,620 |
| | உயர்நிலைப்பள்ளி (9 மற்றும் 10 ஆம் வகுப்பு) | | 6,98,066 |
| 3. | தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் | 274 | 8,816 |
| | மொத்தம் | **43,047** | **55,05,847** |

## 4.7. மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை

| வ.எண் | பயனாளிகளின் வகை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அங்கன்வாடி மையங்கள் (2 முதல் 5 + வயது வரை) | 13,97,465 |
| 2. | பள்ளி சத்துணவு மையங்கள் (தேசிய குழந்தை தொழிலாளர் திட்டப் பயனாளிகள் உட்பட) | 55,05,847 |
| 3. | சத்துணவு பெறும் முதியோர் ஓய்வூதியப் பயனாளிகள் | 127 |
| | மொத்தம் | 69,03,439 |

## 4.8 பயனாளிகளின் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல்

மாவட்ட ஆட்சித் தலைவர்களால், ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும், ஒவ்வொரு மையத்திற்கான பயனாளிகளின் எண்ணிக்கை, பள்ளிக்கு வந்து மதிய உணவு உட்கொள்ளும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை ஆகியவை சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அனுப்பும் அறிக்கைகளின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டு 3 மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகிறது. இருப்பினும், கல்வி உரிமைச் சட்டம் 2009ன் படி, பள்ளிகளில் பயிலும் அனைத்து குழந்தைகளையும் முழுமையாக இத்திட்டத்தின் கீழ் கொண்டு வர தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தால் எடுக்கப்பட்டு வருகிறது.

## 4.9 திட்டத்தின் உட்கூறுகள்

i. 5 முதல் 9 வயதிற்குட்பட்ட துவக்கப்பள்ளி குழந்தைகள் மற்றும் 10 முதல் 15 வயது வரையிலான உயர் துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும், வாரத்திற்கு 5 நாட்கள் வீதம் ஆண்டிற்கு 220 நாட்கள், பள்ளி வளாகத்திற்குள்ளேயே சூடான, சமைத்த ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வழங்கப்பட்டு வருகிறது.

ii. தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் சென்னை ஆகிய 16 மாவட்டங்களில் உள்ள தேசிய குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும் சூடான சமைத்த ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வருடத்தில் 312 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

iii. 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு, நாளொன்றுக்கு 100 கிராமும், 6 முதல் 10–ம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு 150 கிராமும் என்ற அளவில் சத்துணவு சமைப்பதற்காக அரிசி பயன்படுத்தப்படுகிறது.

iv. பதிவுபெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் சூடான சமைத்த ஊட்டச்சத்து மிக்க கலவை சாதத்துடன் குறைந்தபட்சம் 46 கிராம் எடையுள்ள ஒரு முட்டை அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு 46 கிராம் எடையுள்ள முட்டையில் 6.12 கிராம் புரதமும், 80 கிலோ கலோரி சக்தியும் கிடைக்கிறது. முட்டைக்கான செலவினம் முழுவதும் மாநில அரசே ஏற்கிறது.

v. முட்டை உண்ண விருப்பமில்லாத குழந்தைகளுக்கு, மாற்றாக 100 கிராம் எடையுள்ள வாழைப்பழம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 1.2 கிராம் புரதமும், 116 கிலோ கலோரி சக்தியும் கிடைக்கிறது.

vi. ஒவ்வொரு குழந்தைக்கும், மாதத்தின் முதல் மற்றும் மூன்றாவது வாரங்களில் வரும் செவ்வாய் கிழமைகளில் 20 கிராம் கருப்பு 'கொண்டைக்கடலை, புலவுடன் சேர்த்து கொண்டைக்கடலை புலவாக வழங்கப்படுவதால் குழந்தைகளுக்கு 72 கிலோ கலோரி சக்தியும் 3.42 கிராம் புரதமும் கிடைக்கிறது.

vii. ஒவ்வொரு குழந்தைக்கும், மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது வாரங்களில் வரும் வியாழக் கிழமைகளில் 20 கிராம் பச்சைப்பயறு 'சுண்டலாக' வழங்கப்படுவதால் குழந்தைகளுக்கு 67 கிலோ கலோரி சக்தியும் 4.80 கிராம் புரதமும் கிடைக்கிறது.

viii. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் குழந்தைகளுக்கு மாவு சத்தின் (கார்போஹைட்ரேட்) அளவினை அதிகரிக்கும் வகையில் 20 கிராம் உருளைக்கிழங்கு மிளகாய்பொடி தூவி வறுத்து வழங்கப்படுவதால் 19.04 கிலோ கலோரி சக்தியும், 0.32 கிராம் புரதமும்

கிடைக்கிறது. 20 கிராம் உருளைக்கிழங்கிற்கான கொள்முதல் தொகையினை 16 பைசாவிலிருந்து 40 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

ix. சுகாதார தலையீட்டின் ஒரு பகுதியாக, அயோடின் மற்றும் இரும்புச்சத்துக் குறைபாட்டினை களையும் பொருட்டு இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு, சத்துணவில் பயன்படுத்தப்படுவதால் அயோடின் குறைபாடு நீக்கப்பட்டு முன்கழுத்து கழலை நோய் வருவது தடுக்கப்படுகிறது.

x. முக்கியமான சிறப்பு நாட்களின் போது, வெல்லம் மற்றும் நெய் பயன்படுத்தி செய்யப்பட்ட இனிப்பு பொங்கல் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

## 4.10 புதிய கலவை சாதம் திட்டம்

2013 ஆம் வருடம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு முன்னோடி வட்டாரத்தில் 13 வகையான புதிய வகை கலவை சாதம் மற்றும் 4 வகையான மசாலா முட்டைகள் இத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் வெற்றிகரமான துவக்கத்தினைத் தொடர்ந்து அனைத்து சமையலர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கு, படிப்படியாக, விரிவான பயிற்சிகள் அளிக்கப்பட்டு திட்டத்தினை வலுப்பெறச் செய்யப்பட்டது. 15.08.2014 முதல் இத்திட்டம் மாவட்டங்களில் உள்ள அனைத்து

வட்டாரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. பல்வகை கலவை சாத உணவு வகைகள் பின்வருமாறு:

| நாட்கள் | வழங்கப்பட்டு வரும் உணவு வகை | |
|---|---|---|
| | முதல் மற்றும் மூன்றாம் வாரம் | இரண்டாவது மற்றும் நான்காவது வாரம் |
| திங்கட் கிழமை | வெஜிடபிள் பிரியாணி + மிளகு முட்டை | சாம்பார் சாதம் (பிஸிபேளாபாத்) + வெங்காயம் தக்காளி மசாலா முட்டை |
| செவ்வாய் கிழமை | கருப்பு கொண்டைக்கடலை புலவு + தக்காளி மசாலா முட்டை | மீல்மேக்கர் மற்றும் காய்கறி கலந்த வெஜிடபிள் சாதம் + மிளகு முட்டை |
| புதன் கிழமை | தக்காளி சாதம் + மிளகு முட்டை | புளி சாதம் +தக்காளி மசாலா முட்டை |
| வியாழக்கிழமை | சாதம், சாம்பார்+வேகவைத்த முட்டை | எலுமிச்சை சாதம் + சுண்டல் + தக்காளி முட்டை |
| வெள்ளிக் கிழமை | கருவேப்பிலை / கீரை சாதம், மசாலா முட்டை+மிளகாய்பொடி தூவி வறுத்த உருளைக்கிழங்கு | சாதம் + காய்கறியுடன் சாம்பார், வேக வைத்த முட்டை மற்றும் வறுத்த உருளைக்கிழங்கு |

பணியாளர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில், ஊட்டச்சத்து, சுகாதாரம், நகம் வெட்டுதல், சமைப்பதற்கு மற்றும்

பரிமாறுவதற்கு முன் சோப்பால் கை கால் சுத்தம் செய்தல் போன்ற தன் சுத்தம் பேணுதல் தொடர்பாகவும், சமைக்கும் மற்றும் பரிமாறும் பாத்திரங்களை சுத்தம் செய்வது, உணவுப் பொருட்களைச் சேமிப்பது மற்றும் சுற்றுப்புறத்தைப் பாதுகாப்பாக வைத்திருப்பது போன்றவற்றில் தகுந்த பயிற்சி அளிக்கப்படுகிறது. அனைத்து சத்துணவுப் பணியாளர்களுக்கும் சமையற்கலை வல்லுநர்களால் புதிய பலவகை கலவை சாதங்கள் தயாரிப்பது தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 4.11 உணவு பொருட்கள் மேலாண்மை

- **1**ம் வகுப்பு முதல் **8**ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மைய அரசால் இலவச அரிசி ஒரு மெட்ரிக்டன் **₹5,650/–** என்ற விலையில் வழங்கப்படுகிறது. மேலும் அருகாமையிலுள்ள இந்திய உணவு கழக கிடங்கிலிருந்து அரிசியை எடுத்து வருவதற்கு போக்குவரத்து செலவினத்திற்காக **₹750/–** வழங்கப்படுகிறது. தரமான நல்ல அரிசியை வழங்க வேண்டியது இந்திய உணவு கழகத்தின் பொறுப்பாகும். குறைந்தபட்சம், Fair Average Quality (FAQ) தரத்திலான அரிசி வழங்கப்படவேண்டும்.
- இத்திட்டம் மாநில அரசால் **9** மற்றும் **10**ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுப்படுத்தப் பட்டுள்ளது.

இதற்காகும் முழு செலவினமும் மாநில அரசால் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு பயன்படுத்தப்படும் அரிசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் ஒரு மெட்ரிக்டன் ₹10,318/– என்ற விலைக்கு மையங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

- சத்துணவு திட்டத்திற்கு தேவையான உணவுப் பொருட்களைக் (பருப்பு, எண்ணெய், கருப்புக் கொண்டைக்கடலை மற்றும் பச்சைப்பயறு போன்றவற்றை) விநியோகம் செய்வதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஒருங்கிணைப்பு நிறுவனமாக செயல்படுகிறது. மைய அரசால் ஒதுக்கப்பட்ட அரிசி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் இந்திய உணவு கழகத்திடமிருந்து எடுக்கப்பட்டு, பின்னர் மாவட்ட அலுவலரின் தேவைப்பட்டியலின் அடிப்படையில் சத்துணவு மையங்களுக்கு நேரடியாக விநியோகம் செய்யப்படுகிறது.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பினை தமிழ்நாடு உப்பு கழகத்திடமிருந்து கொள்முதல் செய்து சத்துணவு

மையங்களுக்கு விநியோகம் செய்கிறது. இவ்வாறு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் உள்ள தொடரமைப்பின் காரணமாக சத்துணவு மையங்களுக்கு நிலையான உணவுப் பொருட்கள் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது.

- சத்துணவு அமைப்பாளர்களது வங்கி கணக்கில் மின்னணு பரிமாற்றம் (ECS) மூலமாக வரவு வைக்கப்படும் முன்பணத் தொகையினை பயன்படுத்தி சத்துணவு தயாரிப்பதற்கு தேவையான காய்கறிகள் மற்றும் தாளிதப்பொருட்களை உள்ளூரிலேயே வாங்கி செலவினம் மேற்கொள்ள சத்துணவு அமைப்பாளர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் விதிகளை பின்பற்றி மாநில அளவில் அக்மார்க் ‘A’ குறியீட்டான நடுத்தர முட்டைகள் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒவ்வொரு முட்டையும் குறைந்த பட்சம் 46 கிராம் முதல் அதிகபட்சமாக 52 கிராம் வரை எடையுள்ள முட்டைகள் அனைத்து சத்துணவு மையங்களுக்கும் நேரடியாக விநியோகம் செய்யப்படுகிறது. திருட்டினைத் தடுக்கும் பொருட்டு, உணவு தரம் வாய்ந்த வண்ணங்களைக் கொண்டு

முட்டைகளின் மேல் முத்திரை பதிக்கும் வழக்கம் நடைமுறையில் கொண்டுவரப்பட்டுள்ளது.

- வாழைப்பழம் சத்துணவு அமைப்பாளர்களால் உள்ளூர் சந்தைகளில் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

## 4.12 தேசிய மதிய உணவுத் திட்டம்

- 1995ம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாளன்று மத்திய அரசால் ஆரம்பக் கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம் தொடங்கப்பட்டது. 1997–1998ஆம் ஆண்டு, நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டது. அக்டோபர் 2007 ஆம் ஆண்டு முதல், 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, ஆரம்பக்கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து ஆதரவுத் திட்டம் என்ற பெயர், பள்ளிகளில் “**தேசிய மதிய உணவுத் திட்டம்**” என மாற்றம் செய்யப்பட்டது.

- இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மத்திய அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் ஒட்டுமொத்த நிதியில் 60 சதவிகிதம் மைய அரசின்

பங்காகவும் 40 சதவிகிதம் மாநில அரசின் பங்காகவும் வழங்கப்பட வேண்டும் என 2015–2016 ஆம் ஆண்டு முதல் நிதி அமைப்பு மைய அரசால் திருத்தப்பட்டுள்ளது. அதன்படி உணவூட்டுச் செலவினம் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் மைய மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அரிசி அதற்கான போக்குவரத்து செலவினம் மற்றும் மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு இனங்களுக்காக வழங்கப்படும் நிதி 100% மைய அரசால் வழங்கப்படுகிறது.

- குழந்தைகள் உட்கொள்ளும் மதிய உணவின் ஊட்டச்சத்து அளவினை, துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு 450 கலோரியுடன் 12 கிராம் புரதச்சத்து கொண்டதாக இருக்க வேண்டும் எனவும், உயர்துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு 700 கலோரியுடன் 20 கிராம் புரதச்சத்து கொண்டதாக இருத்தல் வேண்டும் என மைய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் குழந்தைகளின் நலனில் அக்கறை கொண்ட மாநில அரசால் கூடுதல் செலவினம் மேற்கொண்டு துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு 553.30 கிலோ கலோரிகளும், 18.12 கிராம் புரதமும், உயர்துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு 733.86 கிலோ

கலோரிகளும், **21.64** கிராம் புரதமும் கொண்ட மதிய உணவினை இலவசமாக வழங்கி வருகிறது.

- **1** முதல் **8** ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அரிசி இலவசமாக மத்திய அரசால் வழங்கப்படுகிறது. மேலும் ஒரு மெட்ரிக் டன் அரிசிக்கு போக்குவரத்து செலவினமாக **₹750** மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

- இத்திட்டத்தின் கீழ் **1** முதல் **5**ம் வகுப்பு வரை பயிலும் ஒவ்வொரு பயனாளிக்கும் ஆகும் தினசரி உணவூட்டுச் செலவினம் **₹4.13** என நிர்ணயித்துள்ளது (மத்திய அரசு **₹2.48** மற்றும் மாநில அரசு **₹1.65**). **6**ம் வகுப்பு முதல் **8**ம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு, **₹6.18** என நிர்ணயித்துள்ளது. (மத்திய அரசு **₹3.71** மற்றும் மாநில அரசு **₹2.47**). இருப்பினும் மாநில அரசு தனது பங்கீட்டான **40** சதவிகிதத்தைவிட கூடுதலாக துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு **₹2.65**ம், உயர் துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு கூடுதலாக **₹0.70**ம் செலவினம் மேற்கொள்கிறது

### 4.13 வைப்பறையுடன் கூடிய சமையலறை

**2006–2007**ஆம் ஆண்டு முதல் வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டுவதற்கு மையம் ஒன்றுக்கு **₹60,000/–** என

நிர்ணயம் செய்து, 100 சதவிகித பங்கினை மைய அரசே வழங்கி வந்தது. 2009 ஆம் ஆண்டு முதல் வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டுவதற்கு மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் பரப்பளவு மற்றும் கட்டுமான செலவினத்தினை அடிப்படையாக கொண்டு பகிர்வு அடிப்படையில் நிதி நிர்ணயம் செய்யப்பட்டது. 100 குழந்தைகள் வரை உள்ள பள்ளிகளில் 20 சதுர மீட்டரும், ஒவ்வொரு 100 கூடுதல் குழந்தைகளுக்கு, கூடுதலாக 4 சதுர மீட்டர் பரப்பளவு அனுமதிக்கப்பட்டுள்ளது.

2006–2007 முதல் 2012–2013 வரை 28,856 சமையல் கூடங்கள் கட்டுவதற்கு ₹59,035.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.06.2016 வரை 18,213 கட்டடங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதி கட்டடங்களை முடிப்பதற்கு உண்டான பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசு உதவி பெறும் பள்ளிகளில் வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டுவதற்கு திருத்திய நிதி பகிர்மான அடிப்படையில், கட்டிடம் கட்டுவதற்கு தேவையான தொகையில், மத்திய அரசு 60 சதவிகித பங்கும் மற்றும் பள்ளி மேலாண்மை 40 சதவிகித பங்களிக்க முன்வரும் பட்சத்தில் கட்டிடம் கட்ட மைய அரசு நிதி ஒதுக்கீடு வழங்கும்.

## 4.14 சத்துணவு மையங்களை நவீனமயமாக்குதல்

உகந்த சூழல் மற்றும் வசதிகளை ஏற்படுத்த, சத்துணவு மையங்களில் எரிவாயு இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மையம் ஒன்றுக்கு எரிவாயு இணைப்பிற்காக ₹22,350/– வீதம் மாநில அரசின் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. எரிவாயு அடுப்புகளை கையாள்வது குறித்த பயிற்சிகள் அந்தந்த எரிவாயு முகவர்கள் மூலம் சத்துணவு பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

## 4.15 சமையல் உபகரணங்கள்

அனைத்து சத்துணவு மையங்களுக்கும் போதுமான சமையல் உபகரணங்களான மூடியுடன் கூடிய சமையல் பாத்திரம், கரண்டி மற்றும் இன்டோலியம் கடாய் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. ஒரு சத்துணவு மையத்திற்கு சமையல் உபகரணங்கள் வாங்குவதற்கு மத்திய அரசால் ₹5000/– ஒரு முறை நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் சிறப்பு நிதியிலிருந்து அனைத்து சத்துணவு மையங்களுக்கும் கலவை இயந்திரம் (Mixie) வழங்கப்பட்டுள்ளன. மத்திய மற்றும் மாநில அரசின் நிதியிலிருந்து எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் சத்துணவுப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 4.16 சில்லரை செலவினம்

சத்துணவு மையங்களை சுத்தம் செய்ய தேவையான சோப்பு, துடைப்பம், பினாயில் போன்ற பொருட்கள் வாங்குவதற்கென மையம் ஒன்றுக்கு ₹50/– வீதம் சில்லரை செலவினமாக வழங்கப்பட்டு வருகின்றன.

## 4.17 கண்காணிப்பு அமைப்பு

- அனைத்து சத்துணவு மையங்களிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் கணக்கு காட்டும் பொறுப்பினை உறுதி செய்யும் பொருட்டு தகவல் பலகை ஒவ்வொரு மையத்திலும் வைக்கப்பட்டுள்ளது. அத்தகவல் பலகையில் பின்வரும் தகவல்கள் அளிக்கப்படுகின்றன:
    i. பள்ளி குழந்தைகளின் வருகை.
    ii. சத்துணவு உண்ணும் குழந்தைகளின் எண்ணிக்கை.
    iii. தினசரி வழங்கப்படும் உணவு.
    iv. துவக்கப்பள்ளி மற்றும் உயர்துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்படும் பொருட்களின் அளவு.
- சத்துணவு மையங்களை திடீர் ஆய்வு மேற்கொள்ள, ஒவ்வொரு அலுவலர்களுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் சமைத்து வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் அளவு, உண்ணும் மாணவர்களது எண்ணிக்கை, கையிருப்பில் உள்ள உணவுப் பொருட்கள், பதிவேடுகள் பராமரிப்பது போன்றவற்றையும் கண்காணிப்பு செய்திட வேண்டும்.

- தலைமைச் செயலர் அவர்களின் தலைமையிலான, மாநில அளவிலான வழிப்படுத்தும் மற்றும் கண்காணிப்பு குழு ஒன்று மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் கண்காணிப்பு குழுக்கள் அமைத்து தனித்தனியே கண்காணிக்கப்படுகிறது.
- சமுதாய பங்கேற்பினை ஊக்கப்படுத்த வேண்டி, சிறப்பு நேர்வாக **2013** ஆம் ஆண்டு முதல் சத்துணவுத் திட்டத்தில் சமுதாயத் தணிக்கை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை, அதாவது, ஜனவரி **26** மற்றும் ஆகஸ்டு **15**ஆம் நாளன்று கிராம சபையில் இத்திட்டம் குறித்த சமுதாயத் தணிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் மாணவர்கள், ஆசிரியர்கள், தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த உத்வேகத்துடன் கலந்து கொண்டு திட்ட செயலாக்கம் பற்றி விரிவாக கலந்துரையாடப்படுகிறது.
- குழந்தைகளுக்கு மதிய உணவு பரிமாறுவதற்கு முன்னர் அரைமணி நேரத்திற்கு முன்னதாக சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களால் உணவினை ருசிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர்கள்

"ருசி பதிவேடு" ஒன்றையும் இது தொடர்பாக பராமரித்து வருகின்றனர்.

- தேசிய மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பயன் பெறும் மதிய உணவு உண்ணும் பயனாளிகளின் விவரம், சத்துணவு மையங்களின் விவரம், வைப்பறையுடன் கூடிய சமையலறை, நவீன மயமாக்கப்பட்ட சத்துணவு மையங்கள், தண்ணீர் வசதி, தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் பொருட்கள், பட்டியல்கள் தயாரித்தல் மற்றும் நிவர்த்தி செய்தல், சமையல் உதவியாளர்களின் விவரம் போன்றவை வட்டாரம் மற்றும் மாவட்டம் வாரியாக பதிவேற்றப்படுகிறது.

## 4.18 குறை தீர்க்கும் முறை

- குறைகள் ஏதேனும் இருப்பின், அதனை சீராக்கும் பொருட்டு, 28 மாவட்டங்களில் கட்டணமில்லா இலவச தொலைபேசி செயல்பாட்டில் உள்ளது.

- திட்டத்தில் ஏதேனும் முன்னேற்றம் தேவைப்படின் அதன் பொருட்டு பள்ளிகளில், புகார் / பரிந்துரை பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

- குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை சரிசெய்யும் பொருட்டு மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (ச.உ.தி) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குறை தீர்க்கும் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### 4.19 பள்ளி சுகாதார திட்டத்துடன் இணைந்து செயல்படுதல்

குழந்தைகளின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை நோக்கமாக கொண்டு, அனைத்து பள்ளிகளிலும் சுகாதாரத் துறையின் மூலம், மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. பள்ளி சுகாதார திட்டத்தின் உட்கூறுகள் பின்வருமாறு:–

i. இரத்தசோகை, பொது சுகாதாரம் மற்றும் இதர சுகாதார பிரச்சனைகளை திரையிடல் – சுகாதார கவனம் மற்றும் தொடர் சிகிச்சை

ii. நோய்த் தடுப்பு, கண் மற்றும் குறிப்பாக பல் பரிசோதனை

iii. நுண் ஊட்டச்சத்துக்களான இரும்பு சத்துடன் கூடிய போலிக் அமிலம் (IFA), மாத்திரைகள் மருந்துகள் வழங்குதல்

iv. குடற்புழு நீக்கம் செய்யும் மருந்துகள்

v. அனைத்து குழந்தைகளுக்கும் தனிப்பட்ட சுகாதார அட்டைகள் பராமரித்து அவர்களின் சுகாதார நிலையினை கண்காணித்தல்.

## 4.20 சத்துணவுப் பணியாளர்கள்

ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை உள்ள 55.05 இலட்சம் பயனாளிகள் இத்திட்டத்தில் பயனடைவதற்காக 43,047 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் சத்துணவு அமைப்பாளர், சமையலர் / சமையல் உதவியாளர் என மூன்று பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 500 பயனாளிகளுக்கு மேல் உள்ள பள்ளி சத்துணவு மையத்தில் ஒரு சமையல் உதவியாளர் கூடுதலாக நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசு குறித்துள்ள வழிமுறையின்படி 25 பயனாளிகளுக்கு ஒரு சமையல் உதவியாளர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி பங்கீடு (60:40) பகிர்வின் அடிப்படையில் மதிப்பூதியமாக ₹1000/– வழங்கப்படுகிறது. ஆனால், தமிழக அரசு, குழந்தைகளுக்கு சுவையான, சத்தான, பாதுகாப்பான உணவுகளை வழங்கும் பொருட்டு மையம் ஒன்றுக்கு சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் என மூன்று பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 42,423 சத்துணவு அமைப்பாளர், 42,852 சமையலர், 42,855 சமையல் உதவியாளர் என மொத்தம் 1,28,130 பணியிடங்கள்

தோற்றுவிக்கப்பட்டுள்ளன. சத்துணவுப் பணியாளர்களின் பணி நேரம் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை ஆகும்.

சத்துணவுப் பணியாளர்கள் "பகுதி நேர நிரந்தரப் பணியாளர்கள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு கால முறை ஊதியம் பின்வருமாறு :-

| **வ. எண்.** | **பதவி** | **காலமுறை உதியம்** | **பெற்று வரும் குறைந்த பட்சம் – அதிக பட்சம் ஊதியம்** |
|---|---|---|---|
| 1. | சத்துணவு அமைப்பாளர் | ₹2500-5000 + தர ஊதியம் ₹500 | ₹7530 – ₹10,478 |
| 2. | சமையலர் | ₹1300-3000 + கா ஊகியம் ₹300 | ₹4380 – ₹5,055 |
| 3. | சமையல் உதவியாளர் | ₹950 – 2000 + தர ஊதியம் ₹200 | ₹3368 – ₹4,380 |

**சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் இதர சலுகைகள் பின் வருமாறு :-**

**சிறப்பு மாதாந்திர ஓய்வூதியம்**

ஓய்வு பெற்ற சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு சிறப்பு மாதாந்திர ஓய்வூதியமாக முறையே **₹700/–**, **₹600/–**, மற்றும் **₹500/–** என வழங்கப்பட்டது. ஆனால், **01.04.2013** முதல் அவர்களுக்கு சிறப்பு மாதாந்திர ஓய்வூதியம் ஒரே சீராக **₹1000/–** ஆக உயர்த்தப்பட்டது. இத்தொகை **01.02.2016** முதல் **₹1500/–**ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**ஒட்டு மொத்த தொகை**

சத்துணவு அமைப்பாளர்களுக்கு **₹50,000/–**, சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு **₹20,000/–** என அவர்கள் ஓய்வு பெறும்பொழுது ஒட்டு மொத்த தொகையாக வழங்கப்பட்டு வந்ததை பிப்ரவரி **2016** முதல், சத்துணவு அமைப்பாளர்களுக்கு **₹60,000/–**, சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு **₹25,000/–** ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**பண்டிகை முன்பணம்**

ஒவ்வொரு வருடமும் சத்துணவுப் பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணமாக **₹5000/–** வழங்கப்பட்டு வருகிறது.

இத்தொகை 10 தவணைகளில் அவர்களுடைய மாத சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

**பொங்கல் போனஸ்**

சத்துணவுப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு வருடமும், ஜனவரி மாதத்தில் பொங்கல் போனஸாக ₹1000/– வழங்கப்படுகிறது.

**மலைவாழ் படி மற்றும் குளிர்கால படி**

மலைப்பகுதிகளில் உள்ள சத்துணவுப் பணியாளர்களுக்கு மலைவாழ் படி மற்றும் குளிர்கால படி 2015ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. வருடம் முழுவதும் மலைவாழ்படி 20 சதவிகிதம் அடிப்படை ஊதியம் + தர ஊதியத்திலும், மற்றும் வருடத்தில் 4 மாதங்கள் குளிர்காலப்படி 5 சதவிகிதம் அடிப்படை ஊதியத்திலும் வழங்கப்படுகிறது.

**சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம்**

மாதம் ஒன்றுக்கு ₹20/– வீதம் 148 தவணைகளில் ₹2,960/– பிடித்தம் செய்யப்பட்டு சத்துணவுப் பணியாளர்கள் ஓய்வு பெறும் போது மேற்படி தொகை மற்றும் அத்தொகைக்கான வட்டியுடன் அரசின் பங்கீடாக ₹10,000/– சேர்த்து சிறப்பு சேம நல நிதியாக வழங்கப்படுகிறது.

**சத்துணவு அமைப்பாளர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் படி**

சத்துணவு அமைப்பாளர்கள் கூடுதலாக சத்துணவு மையங்களை கண்காணிக்க அவர்களுக்கு ₹10/– கூடுதல் பொறுப்புப்படியாக வழங்கப்பட்டு வந்ததை, ஏப்ரல் 2015ம் ஆண்டு முதல் ₹20/– ஆக நாளொன்றுக்கு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**குடும்ப நல நிதி**

நிரந்தர பணியாளர்களைப் போல, சத்துணவுப் பணியாளர்களுக்கும் பணிக்காலத்தில் இறந்தால் அவர்களுக்கு ₹1.50 இலட்சம் வழங்கப்படுகிறது. இதற்காக அவர்களுடைய மாதச் சம்பளத்தில் இருந்து ₹30/– மாதச் சந்தாவாக பிடித்தம் செய்யப்பட்டது. இத்தொகை ₹3.00 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கென ₹60/– வீதம் சந்தா தொகையாக மாதச் சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

**பணியிடையே காலமான சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் உடனடி நிவாரணம்**

பணியிலிருக்கும் போது இறக்கும் சத்துணவுப் பணியாளர்களது ஈமச்சடங்கிற்காக ஏற்கெனவே வழங்கப்பட்டு

வந்த ரூ.5000/–னை, பிப்ரவரி 2016 முதல் ₹25,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்தொகை குடும்ப நல நிதி ₹3.00 இலட்சத்திலிருந்து சரிகட்டப்படும்.

**புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்**

புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 2012–ன்படி சத்துணவுப் பணியாளர்களுக்கு (சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்) 01.07.2012 முதல் 30.06.2016 வரையிலான 4 ஆண்டு தொகுப்பு காலத்திற்கு ₹4.00 இலட்சம் வரை நிர்ணயித்து மாத சந்தாவாக ₹150/– வீதம் அவர்களுடைய மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. மே 2015 முதல் ஆண்டு வருமானம் ₹72,000/–க்கும் குறைவாக உள்ளவர்களுக்கு மாத சந்தாவான ₹150/– பிடிப்பதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மேலும் “புதிய சுகாதார காப்பீட்டுத் திட்டம் 2016” என்ற பெயரில் 01–07–2016 முதல் 4 ஆண்டு தொகுப்பு காலத்திற்கு விரிவுப்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பொது வருங்கால வைப்பு நிதி**

சத்துணவுப் பணியாளர்களுக்கு 01.08.2015 முதல் பொது வருங்கால வைப்புநிதி சந்தாவாக அவர்களது அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 12 சதவிகிதம் பிடித்தம்

செய்யப்படுகிறது. அவர்களுக்கு 9 இலக்கங்களைக் கொண்ட வைப்பு நிதி கணக்கு எண் “சத்துணவு திட்டம்” என்ற பின் இணைப்புடன் கூடிய பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு துவங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரங்கள் அரசு தகவல் தொகுப்பு மையம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது

**தற்செயல் விடுப்பு**

சத்துணவுப் பணியாளர்களுக்கு வருடத்திற்கு 12 நாட்கள் தற்செயல் விடுப்பு வழங்கப்படுகிறது.

**மகப்பேறு விடுப்பு**

மே 2015 முதல் திருமணமான பெண் சத்துணவுப் பணியாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு 90 நாட்களிலிருந்து 180 நாட்களாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**விருப்ப ஓய்வு**

சத்துணவுப் பணியாளர்களை, அவர்களுக்கான ஓய்வூதிய பலன்களுடன் மருத்துவ காரணங்களுக்காக தன் விருப்ப ஓய்வில் செல்ல ஏப்ரல் 2015 முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**கருணை அடிப்படையிலான பணி நியமனம்**

தகுதியுள்ள ஆண் மற்றும் பெண் சத்துணவு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியரே கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்து கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விதி தளர்வு தேவைப்படும் இனங்களுக்கு மட்டும் விண்ணப்பங்கள் அரசிற்கு அனுப்பப்பட்டு அரசாணைகள் வெளியிடப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் செயலாக்கத்தினை தொடர்ந்து மூன்று அளவுருக்களில் நேர்மறையான மாற்றம் அதாவது பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை, மாணவர்கள் பள்ளி இடைநிற்றலை குறைத்து, முறையாக பள்ளிக்கு வருவதை உறுதி செய்துள்ளது. மேலும் முக்கியமாக கிராம புறங்களில் உள்ள மாணவர்களின் ஊட்டச்சத்து நிலை மேம்படுத்தப்பட்டுள்ளதால் அவர்களின் கற்றல் திறன் அதிகரித்துள்ளது. அதன்மூலம் அவர்கள் வகுப்பறையில் அதிக கவனமுடன் கல்வி கற்க வழிவகை செய்துள்ளது. மேலும் சத்துணவு திட்டத்தின் செயல்பாடுகள் மூலம் பாலின வேறுபாடுகள் களையப்பெற்று பெண் குழந்தைகளின் கல்வி, உணவு மற்றும் வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக மாநில அரசால் **2016–17** ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் **₹1644.52** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**********

## அத்தியாயம் –5

# முதியோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலன்

**5.1** மனிதனின் வாழ்நாள் அதிகரித்து வருவதால் மக்கள் தொகையில் மூத்த குடிமக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதில் 80 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. எனவே, மூத்த குடிமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், அவர்கள் பாதுகாப்பான, மதிப்பு மிக்க வாழ்க்கையினை வாழ்வதற்காகவும், தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை அவர்களது நலனுக்காக செயல்படுத்தி வருகிறது.

### 5.2 முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள்

2011–12ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கிடையே அன்பையும் பாசத்தையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் மாநிலத்தின் ஒவ்வொரு வட்டாரத்திலும் அமைக்கப்படும் என்றும், இத்திட்டம் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களின் உதவியுடன் அவர்களது தார்மீக சமூகக் கடமைகளின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகத்திலும் முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு சிறந்த பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மேலும், அவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் குறைப்பதற்கு ஏதுவாக பாதுகாப்பான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகமும் 25 குழந்தைகள் மற்றும் 25 முதியோர்கள் தங்கும் வசதியுடன் செயல்படுகிறது. 2015–16 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 52 ஒருங்கிணைந்த வளாகங்களில் 1,262 குழந்தைகள் மற்றும் 1,185 முதியோர்கள் பயனடைந்து வருகின்றனர்.

2015–16 ஆம் ஆண்டில் 29 மாவட்டங்களில் செயல்படும் 52 ஒருங்கிணைந்த வளாகங்களுக்கு செலவினமாக ₹658.04 இலட்சம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இத்திட்டத்திற்கென 2016–17ஆம் நிதியாண்டில் ₹782.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.3 மாநில அரசின் மானியம் பெற்று தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள்

60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆதரவற்ற முதியோர் மற்றும் தங்கள் குடும்பங்களால் கைவிடப்பட்ட மற்றும் வசிப்பிடமற்ற முதியோர்களின் வாழ்வைப் பாதுகாக்கும் பொருட்டு மாநில அரசு, தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பெறும் முதியோர் இல்லங்களுக்கு பராமரிப்பு மானியம்

அளித்து வருகிறது. இவ்வில்லங்களில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஆதரவற்ற முதியோர்களுக்கு உணவு, உறைவிடம், உடை, மருத்துவ உதவி, பாதுகாப்பு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் போன்றவை அளிக்கப்பட்டு வருகின்றன.

40 முதியோர்களை பராமரிக்கும் பொருட்டு ஒரு இல்லத்திற்கு ஆண்டொன்றிற்கு ₹2.00 இலட்சம் மானியமாக அளிக்கப்படுகிறது. 20 மாவட்டங்களில் செயல்படும் 22 முதியோர் இல்லங்களில் மொத்தம் 735 முதியோர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

**இத்திட்டத்திற்கென 2016–17ஆம் நிதி ஆண்டில் ₹64.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.4 பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களை பராமரிப்பதற்கும், அவர்கள் நலன் காக்கவும் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் உத்தரவாதமும், அங்கீகாரமும் அளித்து உறுதி செய்யப்பட்டுள்ளவாறு, சட்டரீதியான பாதுகாப்பை அளிக்கக்கூடிய பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 இம்மாநிலத்தில் 29.09.2008 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மூத்த குடிமக்கள்

மற்றும் பெற்றோர் பராமரிப்பு மற்றும் நல விதிகள் உருவாக்கப்பட்டு, **31.12.2009** அன்று அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

தனது வாரிசுதாரர்களிடமிருந்து பராமரிப்புத் தொகை கோரி பெற்றோர் மற்றும் மூத்தகுடிமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை விரைந்து தீர்வு செய்ய ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும், வருவாய் கோட்டாட்சியரைத் தலைவராகக் கொண்ட உட்கோட்ட தீர்ப்பாயம் ஒன்று இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. **81** தீர்ப்பாயங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட சமூக நல அலுவலர்கள் இச்சட்டத்தின் கீழ் பராமரிப்பு அலுவலர்களாகவும், சமரச அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தீர்ப்பாயத்தின் ஆணைக்கெதிராக மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவரைத் தலைவராகக் கொண்டு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகள்**

ஒரு பெற்றோர் அல்லது மூத்த குடிமகன் தன்னுடைய வருமானத்திலிருந்தோ அல்லது தன்னுடைய சொத்துக்களிலிருந்து வரும் வருவாயிலிருந்தோ தன்னைப்

பராமரித்துக் கொள்ள இயலாத நிலையில் இருந்தால் தன்னுடைய குழந்தைகளிடமிருந்து அல்லது சட்டபூர்வ வாரிசுகளிடமிருந்து பராமரிப்புத் தொகையைக் கேட்டுப்பெற இச்சட்டத்தின் பிரிவு **5–**ன் கீழ் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- இச்சட்டத்தின் கீழ் பராமரிப்புத் தொகை கோரி பெறப்படும் மனுக்களுக்கு **90** நாட்களுக்குள் தீர்வு காணப்படவேண்டும்.

- மூத்த குடிமக்களின் வாரிசுகள் அல்லது உறவினர்கள் தீர்ப்பாயத்தின் ஆணையைச் செயல்படுத்த தவறினால் அபராதம் மற்றும் சிறைத்தண்டனை முழுவதுமாகவோ அல்லது ஒவ்வொரு மாத பராமரிப்புச் செலவுக்கு ஏற்றாற்போன்றோ வழங்க தீர்ப்பாயம் ஆணையிடலாம் அல்லது ஒரு மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது அத்தொகையைச் செலுத்தும் காலம் வரை சிறைத்தண்டனை அளிக்கப்படும்.

- பராமரிப்புத் தொகை ஒரு மாதத்திற்கு ₹10,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

- விசாரணை நிலுவையில் இருக்கும் பட்சத்தில், மூத்த குடிமக்களைப் பராமரிப்பதற்காக மாதாந்திர பராமரிப்புத்

தொகையினை அளிக்கக் கோரி அவர்களின் வாரிசுகள் அல்லது உறவினர்களுக்கு தீர்ப்பாயம் இடைக்கால உத்தரவிடலாம்.

- மூத்த குடிமக்களின் பாதுகாப்பான பராமரிப்பிற்கு பொறுப்பான நபர், அம்மூத்த குடிமக்களை எங்காவது நிராதரவாக விட்டுச் சென்றால், அந்நபருக்கு 3 மாத சிறைத்தண்டனை அல்லது ₹5,000 வரை அபராதத் தொகை அல்லது இரண்டும் சேர்ந்தோ தண்டனையாக அளிக்கப்படும்.

## 5.5 முதியோர் இல்லங்களுக்கான குறைந்தபட்ச அத்தியாவசிய தரம் நிர்ணயம்

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்களில் பராமரிக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச / அத்தியாவசியமான தரம் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## 5.6 சர்வதேச முதியோர் தினவிழா கொண்டாடுதல்

முதியோர்களின் சேவைகளை அங்கீகரிக்கவும், அவர்களிடம் உள்ள அனுபவம், அறிவு ஆகியவற்றை வெளிக்கொணரவும், முதியோர்களின் நலன் காக்க ஐக்கிய

நாடுகள் சபை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை நிறைவேற்றும் பொருட்டும், தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் நாள் அன்று மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சர்வதேச முதியோர் தின விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள், மூத்த குடிமக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மாவட்ட அளவிலான அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். மூத்த குடிமக்களுக்கு ஏற்ற உணவு பற்றிய கண்காட்சி நடத்தப்படுகிறது. இவ்விழாவில் கலந்து கொள்பவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மூத்த குடிமக்களின் நலன் தொடர்பான துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

இவ்விழாவின்போது மூத்த குடிமக்களின் தேவைகள் மற்றும் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 குறித்து பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பள்ளி மற்றும் கல்லூரிகளில் கருத்தரங்குகள் மற்றும் போட்டிகள் நடத்தப்படுகின்றன. முதியோர்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனையும் நடத்தப்படுகிறது.

இவ்விழாவின் போது முதியோர்களின் நலனுக்காக சேவை புரியும் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் சமூகப் பணியாளர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். மேலும், இவ்விழாவில் முதியோர்களுக்குத் தேவையான உதவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

2015–16 ஆம் ஆண்டில், மாநில அளவில் சர்வதேச முதியோர் தினம் சென்னையில் கொண்டாடப்பட்டது. அவ்விழாவின் போது 90 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

**2016–17 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ₹5.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.7 முதியோர் நலனுக்கான மாநில மற்றும் மாவட்டக் குழுக்கள்**

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007ஐ மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சிறப்பாகவும், இணைந்தும் செயல்படுத்துவதற்கான ஆலோசனை வழங்குவதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் மாநில அளவில் தலைமைச் செயலரைத் தலைவராகவும் கொண்டு 15 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 7 அலுவல் சாரா உறுப்பினர்களையும்

கொண்டு உயர்மட்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது போன்று, மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு **3** அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் **2** மூத்த குடிமக்கள் உட்பட **4** அலுவல் சாரா உறுப்பினர்களை கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு **3** மாதங்களுக்கு ஒரு முறை கூடி மூத்த குடிமக்கள் தொடர்பான பிரச்சனைகளை ஆய்வு செய்கிறது.

**********

## அத்தியாயம் – 6

# ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்

தமிழக அரசு பல்வேறு முற்போக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு தற்கால சூழலுக்கேற்ப ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தை மறு சீரமைப்பதற்காகவும், பலப்படுத்துவதற்காகவும், ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் தாய்மார்களுக்கு ஏற்படும் ஊட்டச்சத்து சவால்களை திறம்பட கையாண்டு வருகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஒரு மைய பகுதியாக விளங்கி தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டுக்காக வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறையில் தொடர்ந்து கவனிப்பு அளிப்பதற்கான ஒட்டுமொத்த வழிமுறைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு, “நிறைவான ஊட்டச்சத்து நிலையினை” எய்துவதில் முன்னோடி மாநிலமாக செயல்படுவதோடு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வரும் மாநிலங்களில் மிகச்சிறந்த மாநிலமாகவும் திகழ்கிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் **35.10** இலட்சம் பயனாளிகள் நேரடியாகவும்

(ஊட்டச்சத்து) **40.45** இலட்சம் பயனாளிகள் சுகாதாரப் பணிகள், எடை எடுத்தல், ஆலோசனை பெறுதல் என்ற வகையில் மறைமுகமாவும், **434** குழந்தை வளர்ச்சி திட்டங்களில் உள்ள **54,439** குழந்தை மையங்கள் **(49,499** முதன்மை அங்கன்வாடி மையங்கள், **4,940** குறு மையங்கள்) வாயிலாக பயன் பெறுகின்றனர்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதால், மாநில ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், மார்ச் **2016** புள்ளி விவரங்களின்படி, திட்டத்தில் பயன்பெறும் **0–3** வயதுடைய **24.15** இலட்சம் இதர பயனாளிகள் உள்ளடக்கி மொத்த குழந்தைகளில் **87.70% (21.18** இலட்சம்) குழந்தைகள் இயல்பு நிலையிலும், **12.21% (2.95** இலட்சம்) குழந்தைகள் மிதமான எடை குறைவுடனும் **0.08% (1885)** குழந்தைகள் மட்டும் கடுமையான எடை குறைவுடனும் (SUW) உள்ளனர்.

**6.1 புதிய அங்கன்வாடி மையம் திறப்பதற்கான வழிமுறைகள்**

- கிராம மற்றும் நகர திட்டப் பகுதிகளில் அங்கன்வாடி மையம் அமைப்பதற்கான மக்கள் தொகை விதிமுறைகள்

  — முதன்மை அங்கன்வாடி மையத்திற்கு **400** முதல் **800** மக்கள் தொகையும்

— குறு அங்கன்வாடி மையத்திற்கு 150 முதல் 400 மக்கள் தொகையும்

- மலைப் பகுதியில் அங்கன்வாடி மையம் அமைப்பதற்கான மக்கள்தொகை விதிமுறைகள்

— முதன்மை அங்கன்வாடி மையத்திற்கு 300 முதல் 800 மக்கள் தொகையும்

— குறு அங்கன்வாடி மையத்திற்கு 150 முதல் 300 மக்கள் தொகையும் அளவு கோலாக பின்பற்றப்படுகிறது

தமிழகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் 387 கிராமப்புறம் மற்றும் 47 நகர்ப்புறம் உள்ளடக்கி 434 திட்டங்களாக, 49,499 முதன்மை மையங்கள் மற்றும் 4,940 குறு மையங்கள் என 54,439 அங்கன்வாடி மையங்களின் வாயிலாக செயல்படுகிறது.

**6.2 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் தொலைநோக்கு பார்வை மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் குறிக்கோள்கள்:–**

i. ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முழுமையான உடல், மன, அறிவு மற்றும் மன எழுச்சி வளர்ச்சி கிடைத்தல்

ii. மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு, குழந்தைநேயம், அதிக கவனத்துடன் சரியான ஆரம்ப கால பராமரிப்பு, வளர்ச்சி மற்றும் கற்றல்

iii. ஆண்–பெண் சமநிலையை மேம்படுத்தும் குடும்பம், வளரிளம் பெண்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் திட்டங்களை செயல்படுத்துதல்

**6.3 குழும இயக்ககத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்**

12–ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012–2017) கீழ் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் செயல்திட்டம், மேலாண்மை மற்றும் நிறுவன சீரமைப்பு பணிகளைப் படிப்படியாக செயல்படுத்த மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, அங்கன்வாடி மையங்கள் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துக் கல்வி அளிக்கும் முதல் நிலை இருப்பிடமாக இயங்கிட, ‘‘**எழுச்சி மிகு முன் பருவ குழந்தை வளர்ச்சி மையமாக**’’, மாற்றிட கூடுதல் மனிதவள ஆற்றலையும் அடிப்படை வசதிகளையும் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநில திட்டக் குழும வழிகாட்டுக்குழு, மாநில அளவிலான அதிகார திட்டக்குழு மற்றும் மாநில

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட குழுமம், மாநில மற்றும் மாவட்ட குழந்தை வளர்ச்சித் திட்ட சங்கம் அவற்றின் ஆட்சிக் குழு மற்றும் செயற்குழு ஆகியவற்றை மாநில அரசு அமைத்துள்ளது.

2016–2017 ஆம் ஆண்டு ₹1207.37 கோடிக்கு ஆண்டு திட்ட செயலாக்க கருத்துரு (APIP) மாநில அதிகார திட்டக் குழுவின் ஒப்புதல் பெற்று மத்திய அரசிற்கு 07.03.2016 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

2016–2017 ஆம் ஆண்டு தமிழகத்தின் நிதிப்பங்களிப்பு மட்டும் ₹553.78 கோடியாகும். அதில் ₹100.00 கோடி இணை உணவுக்காகவும், ₹453.78 கோடி அங்கன்வாடிப் பணியாளர்களுக்கான ஊதியம், பிற பணப்பயன், ஒட்டுமொத்தத் தொகை மற்றும் சிறப்பு ஓய்வூதியம் ஆகியவற்றிற்காகவும் பயன்படுத்தப்படவுள்ளது.

2016–2017–ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதி மதிப்பீடு பின்வருமாறு:–

(₹ கோடியில்)

| மொத்த திட்ட செலவினம் | மொத்த நிதி | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மாநிலத்தின் முழு பங்கு | மாநிலத்தின் மொத்த பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| 1761.75 | 1207.37 | 665.21 | 542.16 | 553.78 | 1095.94 |

**2016–2017** ஆம் ஆண்டுக்கான மாநில அரசின் பங்கு **62**% மற்றும் மத்திய அரசின் பங்கு **38**%.

## 6.4 தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் அமைப்பு

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

↓

மாநில ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்

(குழும இயக்குநர்)/ குழந்தை வளர்ச்சி சங்கம்

↓

மாவட்ட திட்ட அலுவலகம் / குழந்தை வளர்ச்சி சங்கம்,

**32** மாவட்டங்கள்

↓

குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் – **434** திட்டங்கள்

**(387** ஊரகம், **47** நகரம்**)**

↓

அங்கன்வாடி மையங்கள் **54,439**

**(**முதன்மை மையங்கள்=**49,499** மற்றும் குறு மையங்கள் = **4,940)**

## 6.5 நோக்கங்கள் மற்றும் வழிமுறைகள்:–

- அனைத்து நிலைகளிலும் அத்தியாவசிய பணிகளை நெறிப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்துதல்.

  — ஊட்டச்சத்துக் குறைபாட்டைத் தடுத்தல், குழந்தைகள் வாழ்க்கையை நல்லமுறையில் துவங்க தேவையானவற்றை உறுதி செய்தல், மூன்று வயதிற்குட்பட்ட ஆரம்ப கால குழந்தைகளின் கவனிப்பு மற்றும் கற்கும் சூழ்நிலைக்கு சிறப்பு கவனம் அளித்தல் போன்றவற்றிற்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தைக் குழும இயக்ககத்தின் கீழ் செயல்படுத்துதல்.

- அனைத்து நிலைகளிலும் செயல்திறனை அதிகரித்தல்.

  — திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் சாதனைகளை எய்த அனைத்து களப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு குழு செயல்பாட்டின் அடிப்படையில் பணிபுரிய பயிற்சிகள் அளித்தல்.

- துறைகளுக்கு இடையேயான சரியான ஒருங்கிணைப்பை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்தல்.

  — தரமான நலப்பணிகள் மக்களைச் சென்றடைய சுகாதாரத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வசதி ஆகிய துறைகளுடனான ஒருங்கிணைப்பை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்தல் மற்றும் பலப்படுத்துதல்.

- சமுதாய விழிப்புணர்வையும், பங்களிப்பையும் அனைத்து நிலைகளிலும் மேம்படுத்துதல்.

  — பயனாளிகள் மற்றும் பொது மக்களிடையே குழந்தை வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் அளிக்கப்படும் நான்கு அடிப்படை குழந்தை வளர்ச்சிப் பணிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல். அதற்கான தன்னார்வ ஈடுபாட்டையும், சமுதாய ஆதரவையும் மேம்படுத்துதல்.

- குழந்தை வளர்ச்சிப் பணிகளுக்கான தகவல் தளம் மற்றும் அறிவு சார் தளத்தை அமைத்தல்.

    — ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட மேலாண்மை தகவல் அமைப்பை பலப்படுத்துதல். அடிப்படை தகவல் அமைப்புக்காக தகவல் தொடர்புக்கான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல். தகவல்களைப் பரப்ப, பகிர்ந்து கொள்ள வசதிகளை ஏற்படுத்துதல், ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல்.

## 6.6 மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டக் குழுமத்தின் கீழ் வழங்கப்படும் நலப்பணிகள்

அ. ஆரம்ப நிலை குழந்தைகள் கவனிப்பு, கல்வி மற்றும் வளர்ச்சி

- இணை உணவு வழங்கல்
- முன்பருவக் கல்வி அளித்தல்

ஆ. ஊட்டச்சத்து ஆலோசனை மற்றும் கவனிப்பு

- பச்சிளம் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள்.

- மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறையை சமுதாய அளவில் மேலாண்மை செய்தல்.

இ. சுகாதாரப் பணிகள்

- மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசி வழங்குதலை உறுதி செய்தல்.
- மருத்துவப் பரிந்துரை செய்தல்

ஈ. சமுதாய பங்கேற்பு, விழிப்புணர்வு, ஆதரவு திரட்டுதல், தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் அளித்தல்.

**6.7 இணை உணவு**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் பயனாளிகளான **6** மாதம் முதல் **36** மாதம் வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ராஜீவ்காந்தி வளரிளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பயனடையும் வளரிளம் பெண்கள், ஜப்பானிய மூளை காய்ச்சல் பாதிப்புள்ள ஐந்து மாவட்டங்களில் உள்ள **37** மாதங்கள் முதல் **60** மாதங்கள் வரையுள்ள மிதமான / கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகள் ஆகியோர்க்கு இணை உணவு (சத்து மாவாக) ஒரு வருடத்தில்

300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. அங்கன்வாடி மையங்கள் வாயிலாக வழங்கப்படும் இணை உணவானது, அன்றாடம் உட்கொள்ளும் உணவு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட உணவு இவற்றிற்கு இடையே ஏற்படும் புரதச் சத்து குறைப்பாட்டினை சரிசெய்ய ஏதுவாகவுள்ளது.

### 6.7.1 இணை உணவில் அடங்கியுள்ள பொருட்கள் மற்றும் அதன் அளவு

| வரிசை எண் | பொருட்கள் | கிராம் |
|---|---|---|
| 1. | கோதுமை / சோளம் / கம்பு | 52 |
| 2. | தூள் வெல்லம் | 30 |
| 3. | கொண்டைக்கடலை | 12 |
| 4. | முளைக்கட்டிய கேழ்வரகு | 5 |
| 5. | தாதுக்கள் (ம) வைட்டமின் கலவை | 1 |
| | மொத்தம் | 100 |

## 6.7.2 வார உணவு அட்டவணை

| வயது | வழங்கப்படும் உணவு | இணைஉணவு / சத்துணவு வழங்கப்படும் அளவு மற்றும் செலவினம் | பயனாளி–களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 6 மாதம் முதல் 1 வயதுடைய குழந்தைகள் | இணை உணவு | இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைக்கு 130கி / நாளொன்றுக்கு ₹8.30 செலவில் இணைஉணவு மற்றும் கடும் எடைக் குறைவுடைய குழந்தைக்கு நாளொன்றுக்கு 190கி / நாளொன்றுக்கு ₹12.14 செலவில் வழங்கப்படுகிறது | 3,57,807 |
| 1 முதல் 2 வயதுடைய குழந்தைகள் | இணை உணவு + வாரத்திற்கு ஒரு வேக வைக்கப்பட்ட முட்டை (புதன் கிழமை) | இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைக்கு 130கி / நாளொன்றுக்கு ₹8.30 செலவில் இணைஉணவு மற்றும் கடும் எடைக் குறைவுடைய குழந்தைக்கு நாளொன்றுக்கு 190கி / நாளொன்றுக்கு ₹12.14 செலவில் வழங்கப்படுகிறது | 6,97,234 |

| | | | |
|---|---|---|---|
| 2 முதல் 3 வயதுடைய குழந்தைகள் | இணை உணவு + சத்துணவு + 20 கிராம் கருப்பு கொண்டைக்கடலை அல்லது பச்சைப்பயறு (செவ்வாய் கிழமைகளில்) + வேகவைத்த உருளைக் கிழங்கு (வெள்ளிக் கிழமை) + வாரத்திற்கு 3 வேக வைத்த முட்டைகள் (திங்கள், புதன், வியாழன்) முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் | இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைக்கு 130கி / நாளொன்றுக்கு ₹8.30 செலவில் இணைஉணவு மற்றும் கடும் எடைக் குறைவுடைய குழந்தைக்கு நாளொன்றுக்கு 190கி / நாளொன்றுக்கு ₹12.14 செலவில் + சத்துணவு (விதவிதமான கலவை சாதம்) ₹4.34 செலவில் வழங்கப்படுகிறது. | 7,07,763 |
| 3 முதல் 5 வயதுடைய குழந்தைகள் | சத்துணவு (விதவிதமான கலவை சாதம்) + 20 கிராம் கருப்பு கொண்டைக்கடலை அல்லது பச்சைப்பயறு (செவ்வாய் கிழமைகளில்) + வேகவைத்த உருளைக் கிழங்கு (வெள்ளிக்கிழமை) + வாரத்திற்கு 3 வேக வைத்த முட்டைகள் (திங்கள், புதன், வியாழன்) | ₹4.34 செலவில் நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு சத்துணவு (விதவிதமான கலவை சாதம்) வழங்கப்படுகிறது. | 6,89,702 |

| | | | |
|---|---|---|---|
| | முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் | | |
| கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | இணை உணவு | நாளொன்றுக்கு ₹10.22 செலவில் **160**கிராம் இணை உணவு வழங்கப்படுகிறது | **6,55,427** |
| வளரிளம் பெண்கள் | இணை உணவு | நாளொன்றுக்கு ₹8.30 செலவில் **130**கிராம் இணை உணவு வழங்கப்படுகிறது | **4,01,885** |
| ஓய்வூதியம் பெறும் முதியோர்கள் | சூடான சத்துணவு | நாளொன்றுக்கு **200**கிராம் வழங்கப்படுகிறது | **127** |
| | | **மொத்தம்** | **35,09,945** |

### 6.7.3. ஜப்பானிய மூளைக்காய்ச்சல் பாதிப்பு அதிகமான பகுதிகளில் உள்ள ஊட்டச்சத்துக் குறைவான குழந்தைகளுக்கு இணை உணவு வழங்குதல்

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் ஒரு வைரஸ் தொற்று நோயாகும். ஊட்டச்சத்து குறைவான குழந்தைகளுக்கே ஜப்பானிய மூளைக்காய்ச்சல்/ கடுமையான மூளைக்காய்ச்சல் தாக்குதல் ஏற்படும். எனவே, மிகவும் அபாயகரமான பகுதிகளில்

ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுப்பது அவசியமாகிறது.

சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை அமைச்சகம் மாநிலத்தில் கரூர், மதுரை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 5 மாவட்டங்களை மிகவும் கவனம் தேவைப்படும் மாவட்டங்களாக கண்டறிந்துள்ளது. அம்மாவட்டங்களில் உள்ள 37 முதல் 60 மாதமுடைய மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 கிராம் வீதம் நாளொன்றுக்கு ₹5.11 செலவினத்தில் ஆண்டுக்கு 300 நாட்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் இணை உணவு (சத்துமாவு) வழங்கப்பட்டு வருகிறது. ஐந்து மாவட்டங்களிலுள்ள 32,541 பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்றுள்ளார்கள்.

### 6.7.4 அங்கன்வாடி மையங்களில் விதவிதமான கலவை சாதம்

2 முதல் 5 வயதுடைய அங்கன்வாடி குழந்தைகளுக்கு அவர்களின் ஜீரண சக்தி மற்றும் சிறப்பு ஊட்டச்சத்து தேவைகளைக் கருத்தில் கொண்டு பின்வரும் விதவிதமான சத்துணவு வகைகள் வழங்கும் திட்டம் 20.03.2013 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு வட்டாரத்தில் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் அதனுடைய வரவேற்பினைத்

தொடர்ந்து **15.08.2014** முதல் இத்திட்டம் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

| **கிழமை** | **உணவு வகைகள்** |
|---|---|
| திங்கள் | தக்காளி சாதம் + வேகவைத்த முட்டை |
| செவ்வாய் | கலவை சாதம் + கருப்பு கொண்டைக்கடலை/பச்சைப் பயறு |
| புதன் | காய்கறி புலவு + வேகவைத்த முட்டை |
| வியாழன் | எலுமிச்சை சாதம் + வேகவைத்த முட்டை |
| வெள்ளி | பருப்பு சாதம் + வேகவைத்த உருளைக்கிழங்கு |
| சனி | கலவை சாதம் |
| ஞாயிறு | உலர் உணவுப் பொருட்களாக (Dry Ration) |

### 6.7.5 அங்கன்வாடி மையங்களுக்கு பாத்திரங்கள் வழங்குதல்

**54,439** அங்கன்வாடி மையங்களுக்கும் பாத்திரங்கள் வழங்குவதற்கென **2014–2015** ஆம் ஆண்டு **₹ 9.28** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு **8,57,609** எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள், **50,476** இண்டோலியம் கடாய்கள், **33,000** எவர்சில்வர் கரண்டிகள் மற்றும் **1,096** எவர்சில்வர் சேமிப்புக்கலன்கள் அங்கன்வாடி மையங்களுக்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

### 6.7.6 மின் கலவை இயந்திரங்கள்(மிக்சி) வழங்குதல்

**2015–2016** ஆம் ஆண்டில் மின்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு கலவை இயந்திரங்கள் (மிக்ஸி) வாங்கி வழங்க **₹ 2.17** கோடி நிதி ஒதுக்கீடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் **20,558** கலவை இயந்திரங்கள் வாங்கி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 6.8 ஆரம்ப நிலை குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில், ஆரம்ப நிலை குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி என்பது சுகாதாரம், ஊட்டச்சத்து, விளையாட்டு மற்றும் கற்றல் ஆகியவற்றை பாதுகாப்பான மற்றும் வளர்ச்சிக்கு ஊக்குவிக்கும் சூழலை உள்ளடக்கியதாகும். இது முன்பருவக் கல்வி மேம்பாட்டுக்கு மிக முக்கிய அடித்தளம் அமைத்து வாழ்நாள் முழுவதுமான வளர்ச்சி மற்றும் கற்றலை மேம்படுத்தும்.

இத்திட்டத்தின் கீழ், அங்கன்வாடி மையம் எழுச்சிமிகு குழந்தைகள் மையமாக மாற்றப்பட்டு இனிமையான கற்றல் சூழலைத் தரக்கூடிய குழந்தை நேய மையமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்ப நிலை குழந்தைகளுக்கு

பராமரிப்பு மற்றும் கல்வி அளித்தல், குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கான கவனிப்பு, ஆரம்பகால தூண்டுதல் செயல்பாடுகள் / உரையாடுதல் போன்றவற்றை 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும், 3–6 வயது குழந்தைகளின் வளர்ச்சிக்கான முன் பருவக் கல்வியையும், 5–6 வயது குழந்தைகளைப் பள்ளிக்குச் செல்ல ஆயத்தப்படும் வகையில் முன்பருவக் கல்வியையும், திட்டமிட்ட அர்ப்பணிப்புடன் 4 மணி நேரத்திற்கு அளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

தமிழ்நாட்டில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மூலம் புதிய முயற்சியாக, தேசிய முன்பருவக் கல்வி திட்ட கொள்கை 2013 அடிப்படையில், முன்பருவக் கல்விக்கான, குழந்தைகளின் வயது மற்றும் வளர்ச்சிக்கேற்ற புதிய பாடத்திட்டமான **'ஆடிப்பாடி விளையாடு பாப்பா''** என்ற பாடமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இப்பாடத் திட்டம் 11 மாதத்திற்கான செயல்பாடுகளை குழந்தைகளுக்கு வழங்கும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. 12வது மாதம் மீள்பார்வை (revision) ஒதுக்கப்பட்டுள்ளது.

### 6.8.1 முன்பருவக் கல்வி பயிற்சி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில், முன்பருவக் கல்வி சேவை மிக முக்கியமானதாகும். இது குழந்தையின் முழு வளர்ச்சியினை குறிக்கோளாக

கொண்டுள்ளது. இப்பயிற்சியானது, அங்கன்வாடி பணியாளர்களிடையே முன்பருவக் கல்வி பற்றிய கருத்து, கொள்கை மற்றும் முன்பருவக் கல்வி பாடத்திட்டத்தை சிறப்புற நடத்திட அவர்களுக்கு போதிய பயிற்சி அளிக்கப்பட்டு, குழந்தைகள் கற்கும் சூழல் வாய்ப்புகளை ஊக்குவிக்கும் திறன் மேம்படுத்தப்படுகிறது. இப்பயிற்சியானது, மூன்றடுக்கு முறையில் முறையே, மாநில, மாவட்ட மற்றும் தொகுதி அளவில் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு நடத்தப்படுகிறது. இப்பயிற்சியில், ஆடிப்பாடி விளையாடு பாப்பா பாடத் திட்டத்தை சிறப்பாக குழந்தைகளுக்கு கற்பித்தல், குழந்தை வளர்ச்சி மதிப்பீடு அட்டைகள் மற்றும் செயல்பாட்டுப் புத்தக பயன்பாடுகள் குறித்து பயிற்சி வழங்கப்படுகிறது.

**2016–2017ஆம் ஆண்டிற்கான திட்ட செயலாக்கத்தில் இப்பயிற்சிக்கென ₹ 15.47 கோடி செலவினம் மேற்கொள்ளப்படவுள்ளது.**

**6.9 முன்பருவக் கல்விக்கான விளையாட்டு உபகரணங்கள்**

ஒரு குழந்தை தனது வயதுக்கேற்ற திறனை வெளிப்படுத்த உரிய முன் பருவக் கல்வி விளையாட்டு உபகரணங்கள் மூலம் நிறம், வடிவம் போன்ற கூறுகள் மேம்படுத்திட வேண்டும்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் பின்பற்றப்படும் முறைசாரா முன்பருவக் கல்வித் திட்டத்தின் கீழ் குழந்தைகளின் சமூக, அறிவு, மனம், உடல் மற்றும் கற்பனைத் திறன் வளர்ச்சி ஆகியவற்றினை மேம்படுத்துவதற்கு ஏற்ற கற்றல் சூழலை வழங்குவதற்காக ஒவ்வொரு முதன்மை அங்கன்வாடி மையத்திற்கும் ₹ 3,000 மதிப்பிலும், ஒவ்வொரு குறு அங்கன்வாடி மையத்திற்கு ₹ 1,500 மதிப்பிலும் முன்பருவ கல்வி உபகரணங்கள் 2014–2015 ஆண்டு வரையிலும் வழங்கப்பட்டு வந்தது. மத்திய அரசின் வழிகாட்டுதல்களின் படி, 2015–2016 ஆம் ஆண்டில், ஆரம்ப நிலை குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி பயிற்சியின் செயல்பாட்டினை முன்பருவக் கல்வி உபகரணங்கள் என்ற தலைப்பின் கீழ் ₹15.59 கோடி செலவில் செயல்படுத்திடவும் மற்றும் முன்பருவக் கல்வி உபகரணங்கள் வாங்கி வழங்கிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் முன்பருவக் கல்விக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்காகவும் மற்றும் ஆரம்ப நிலை குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி செயல்பாட்டிற்காகவும் 2016–2017 ஆம் ஆண்டு திட்ட செயலாக்கத்தில் ₹15.59 கோடி செலவினம் மேற்கொள்ளப்படும்.

### 6.10 அங்கன்வாடி குழந்தைகளுக்கு வண்ணச் சீருடைகள்

குழந்தைகளைக் கவரும் விதத்திலும், பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையத்திற்கு அனுப்பிட ஊக்குவிக்கும் வகையிலும், குழந்தைகளுக்கு ஒரு சீருடை ₹125 வீதம், இரண்டு இணை சீருடைகள் சென்னை, வேலூர், தேனி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர், நாகப்பட்டினம், மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில் ₹9.30 கோடி செலவில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக 2015 – 2016 ஆம் ஆண்டில் 3,66,268 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தினை நடப்பு நிதியாண்டில் 3,74,243 குழந்தைகள் பயன்பெறும் வகையில் ₹9.36 கோடி செலவில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.11 சுகாதாரப் பணிகள்


#### 6.11.1 எடையைக் கண்காணித்தல்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ், 0–5 வயதுடைய குழந்தைகளின் எடை கண்காணிக்கப்பட்டு மாதந்தோறும் இக்குழந்தைகளின் கண்டறியப்பட்ட எடை, உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்த

பதிவேடுகளிலும் மற்றும் தாய் சேய் நல பாதுகாப்பு அட்டைகளிலும் பதிவு செய்யப்படுகிறது. குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையானது பதிவேடுகளில் உள்ள வளர்ச்சிக் குறிப்பில் இருந்து அறியப்பட்டு ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.


கடந்த ஆண்டுகளில், கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் மிதமான ஊட்டச்சத்துக்குறைபாடு சதவிகிதம் இறங்கு முகமாக திகழ்கிறது. கடந்த ஓர் ஆண்டு புள்ளி விவரத்தின்படி, உலக சுகாதார நிறுவன நிர்ணய அளவுகோளின் அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டதில், ஏப்ரல் 2013–இல், 78.9% ஆக இருந்த 0–5 வயதான குழந்தைகளின் இயல்பு நிலை மார்ச் 2016–இல், 91.1% மேம்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் 2013–இல் 21.0% ஆக இருந்த மிதமான எடைக்குறையுடைய குழந்தைகளின் எண்ணிக்கை மார்ச் 2016–இல் 8.9% ஆக குறைந்துள்ளது. கடும் எடைக்குறையுடைய குழந்தைகளின் எண்ணிக்கை சதவிகிதம் கடந்த ஏப்ரல் 2013–இல், 0.167%ஆக இருந்த நிலை மார்ச் 2016 –இல், 0.050% ஆக குறைந்துள்ளது.

**0–5 வயதான, இயல்பு நிலை குழந்தைகளின் சதவிகிதம் ஏப்ரல் 2013–இல், 78.9 % லிருந்து மார்ச் 2016–இல், 91.1 % ஆக உயர்ந்துள்ளது.**





மூலம் : ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்
புள்ளி விவரம் மார்ச் 2016

**மிதமான எடை குறைவுடைய குழந்தைகளின் சதவிகிதம் ஏப்ரல் 2013–இல், 21.0% லிருந்து மார்ச் 2016–இல், 8.9% ஆக குறைந்துள்ளது.**




மூலம் : ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் புள்ளி விவரம் மார்ச் 2016

**கடுமையான எடை குறைவுடைய குழந்தைகளின் எண்ணிக்கை ஏப்ரல் 2013–இல், 0.167% லிருந்து மார்ச் 2016–இல், 0.050% ஆக குறைந்துள்ளது.**




மூலம் : ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் புள்ளி விவரம் மார்ச் 2016

குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை குறித்து மாவட்ட திட்ட அலுவலர்கள் அளிக்கும் மாதாந்திர புள்ளி விவரங்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத் துறையின் கீழ் உள்ள கண்காணித்தல் மற்றும் முறைப்படுத்துதல் பிரிவு மூலம் சரிபார்க்கப்படுகிறது.

### 6.11.2 மருந்துப் பெட்டிகள் வழங்குதல்

குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசி, இரும்புச்சத்து மாத்திரை, வைட்டமின்–ஏ வழங்குதல்,

மருத்துவப் பரிந்துரை செய்தல் ஆகிய சுகாதாரச் செயல்பாடுகள் கவனமுடன் திட்டமிடப்பட்டு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப் பணியாளர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மருந்துப்பெட்டியில், எளிதான முறையில் கையாளக்கூடிய காய்ச்சல், வயிற்றுப்போக்கு, தோல் தொற்று போன்ற பொதுவான நோய்களுக்கான மருந்துகள் அடங்கியுள்ளன.

ஒவ்வொரு ஆண்டிலும் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் ₹5.19 கோடி மதிப்பில் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலம் மருந்து பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**2016–2017 ஆம் ஆண்டிற்கு அங்கன்வாடி மையங்களுக்கு மருந்துப் பெட்டிகள் வழங்கிட ₹5.19 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.12 வளர் இளம் பெண்களுக்கான திட்டங்கள்**

**6.12.1 கிஷோரி சக்தி யோஜனா**

இத்திட்டம் 23 மாவட்டங்களை உள்ளடக்கிய 295 வட்டாரங்களில் 11 முதல் 18 வயதுடைய பள்ளி செல்லா வளர்

இளம் பெண்களின் வாழ்க்கைத்தரம், தொழிற்திறன் மற்றும் ஆளுமைத் திறனை மேம்படுத்துவதற்காகவும், தன்சுத்தம், சுகாதாரம், ஊட்டச்சத்து, சட்ட உரிமைகள், குடும்ப நலன் மற்றும் மன அழுத்த மேலாண்மை ஆகிய தகவல்கள் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 16 முதல் 18 வயதான வளர் இளம் பெண்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மூலம் 4,380 வளர் இளம் பெண்கள் பயன்பெறும் வகையில் ஆடை வடிவமைப்பு, ஜர்தௌசி வேலைப்பாடு, செயற்கை ஆபரணங்கள் தயாரிப்பு, கோழி வளர்ப்பு, அலைபேசி பழுதுநீக்கச் சேவை, அலங்கார மீன்கள் வளர்ப்பு, வீட்டு உபயோகப் பொருட்கள் மின்பழுது நீக்கம் மற்றும் அடிப்படை மின்சார சேவைகள் போன்ற துறைகளில் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், அடிப்படை பயிற்சிக்கான செலவுத் தொகை, பயணப்படி தொகை, தங்கும் வசதி மற்றும் உணவிற்கான செலவுத் தொகை, ஆய்விற்கான செலவினம் போன்றவை, இத்திட்டத் தொகையுடன் சேர்த்து, கூடுதலாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு வட்டாரத்திற்கு ₹1.10 இலட்சம் வீதம் 10 மாவட்டங்களில் உள்ள 146 வட்டாரங்களுக்கு மொத்தம் ₹1.60 கோடி 2015–2016–ம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது.

2016–2017ம் வருடத்திற்கான திட்ட செயலாக்கத்தில் ₹3.24 கோடி செலவினம் மேற்கொள்ளப்படவுள்ளது.

**6.12.2 ராஜீவ்காந்தி வளர் இளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம் (சப்லா)**

வளர் இளம் பெண்களின் பல்வேறு பரிமாணங்களில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வு காணும் நோக்கில் இத்திட்டம் (2011–2012ல்) அறிமுகப்படுத்தப்பட்டு, சென்னை, கோயம்புத்தூர், கடலூர், மதுரை, இராமநாதபுரம், சேலம், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் கன்னியாகுமரி ஆகிய 9 மாவட்டங்களில் உள்ள 139 வட்டாரங்களில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், இணை உணவு வழங்குதல் மற்றும் இணை உணவு அல்லாத பிற பணிகள் என இரண்டு பிரிவுகளின் கீழ் நலப்பணிகள் வழங்கப்படுகின்றன. அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்யப்பட்ட 11 முதல் 18 வயதான பள்ளி செல்லாத வளர் இளம் பெண்கள் மற்றும் 15 முதல் 18 வயதான இதர அனைத்து வளரிளம் பெண்களுக்கும் வீட்டுக்கு எடுத்து சென்று பயன்படுத்தும் வகையில் வருடத்தில் 300 நாட்களுக்கு, தலா ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 130 கிராம் இணை உணவு வழங்கப்படுகிறது. இணை உணவிற்கென 2015–2016–ம் ஆண்டிற்கு ₹77.92 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் 4.02 இலட்சம் வளர் இளம் பெண்கள்

பயனடைந்துள்ளனர். வளர் இளம் பெண்களுக்கான இணை உணவு அல்லாத பிற பணிகளின் கீழ், இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரை வழங்குதல், வாழ்க்கைத் திறன் கல்வி, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக்கல்வி அளித்தல், வளரிளம் பெண்களை கல்வி பயில ஊக்குவித்தல், ஆலோசனை வழங்குதல், உடல் பரிசோதனை செய்தல், தொழிற்பயிற்சி அளித்தல் போன்ற நலப்பணிகள் அளிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் **16** முதல் **18** வயதுடைய வளர் இளம் பெண்கள் சமூக பொருளாதார மேம்பாடு அடைவதற்காக அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலமாகவும், பதிவு செய்யப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலமாகவும், அழகுக்கலைப் பயிற்சி, வீட்டு உபயோகப்பொருட்கள் பழுதுநீக்கும் பயிற்சி, அடிப்படை கணினி பயிற்சி, தையற்பயிற்சி, அடிப்படை மின்சாரப் பணிகள் பயிற்சி, கைவினைப் பொருட்கள் செய்யும் பயிற்சி என பல பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் **2015–2016**ம் ஆண்டில் ஒரு திட்டத்திற்கு **₹1.90** இலட்சம் வீதம் **₹2.64** கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2016–2017**ஆம் ஆண்டிற்கு, வளர் இளம் பெண்களுக்கு இணை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் **₹98.26** கோடியும், இணை உணவு அல்லாத பிற பணிகளுக்கு **₹5.28** கோடி செலவினம் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 6.13 இந்திராகாந்தி மகப்பேறு நல உதவித்திட்டம்

2011–2012 ஆம் ஆண்டு தமிழகத்தில் முன்னோடித் திட்டமாக கடலூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்திரா காந்தி மகப்பேறு நல உதவித் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் வாயிலாக தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்துடன் இணைந்து கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களை ஊக்குவிக்கும் பொருட்டு நல உதவியாக ஒரு பயனாளிக்கு ₹4,000 வீதம் வழங்கப்பட்டு வந்தது.

தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013–ன் படி, 2013–ஆம் ஆண்டு ஜீலை மாதம் முதல் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு ₹6,000 வீதம் இரு தவணைகளாக நிதி உதவி வழங்க வேண்டும் என்று திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. 2015–2016 ஆம் ஆண்டில், 43,198 தாய்மார்கள் முதல் தவணையும் 29,659 தாய்மார்கள் இரண்டாவது தவணையும் உதவி பெற்றுள்ளார்கள். இதற்காக, ₹23.65 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 6.14 அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப் வசதிகளை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து மேம்படுத்துதல்

### 6.14.1. அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல்

அங்கன்வாடி மையங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சிறிய மற்றும் பெரிய பழுது நீக்கல், மின் வசதி, குழந்தை நேய கழிப்பிடம் கட்டுதல், புதிய அங்கன்வாடி மையங்கள் கட்டுதல் ஆகியவை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து தொடர் நடவடிக்கையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக **15,313** அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதன்படி ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பேரூராட்சி துறை மற்றும் சென்னை மாநகராட்சி ஆகிய துறைகளின் மூலம் அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்களை படிப்படியாக கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டு ஒருங்கிணைந்து தொடர் நடவடிக்கையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை

6,908 மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

2016–2017–ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் ஒருங்கிணைப்பு மூலம் ஒரு புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் தலா ₹7.00 இலட்சம் மதிப்பில் 5,000 அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 6.14.2 அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்துதல்

அங்கன்வாடி மையங்களில் புகையில்லாத சுற்றுச் சூழலை உருவாக்குவதற்காகவும், சக்தியுடன் கூடிய சுகாதாரமான உணவினை வழங்குவதற்காகவும் அங்கன்வாடி மையங்களுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்பு (ஒரு பர்னர்), சமையல் மேடை, அடுகலன் (பிரஷர் குக்கர்) ஆகியன வழங்கப்பட்டுள்ளன. இதுவரை மொத்தமுள்ள 54,439 அங்கன்வாடி மையங்களில் 47,446 அங்கன்வாடி மையங்கள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 6,993 மையங்களை நவீனப்படுத்தவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 6.14.3 அங்கன்வாடி மையங்களை தரம் உயர்த்துதல்

அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளின் வருகையை அதிகரிக்க கூடுதல் வசதிகள் அளித்து குழந்தையை ஈர்க்கும்

பொருட்டு உகந்த சூழ்நிலையினை உருவாக்கிடும் வகையில் அங்கன்வாடி மையங்களின் தரத்தினை மேலும் உயர்த்தும் பொருட்டு 211 மையங்களில் கூடுதலாக ஓர் அறை கட்டுதல், குழந்தை நேய கழிப்பிடங்கள் கட்டுதல், தண்ணீர் தொட்டி அமைத்தல், கை கழுவும் தொட்டி அமைத்தல், வெளிப்புற விளையாட்டு கருவிகள் அமைத்தல், சமையறையில் பாத்திரம் கழுவும் தொட்டி அமைத்தல், காலணி அலமாரி, குடிநீர் வடிகட்டி, சாய்வு நாற்காலிகள், குழந்தைகளுக்கு புத்தகப்பை மற்றும் தண்ணீர் பாட்டில், குழந்தைகளுக்கு அடையாள அட்டை, மையங்களுக்கு வர்ணம் அடித்தல் மற்றும் சிறு பழுதுகளை பழுதுபார்த்தல் ஆகியவற்றிற்காக ஒரு மையத்திற்கு ₹1,00,000 செலவில் மொத்தம் ₹55.65 கோடி செலவில் 5,565 மையங்கள் 2014–2015 ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

### 6.14.4 அங்கன்வாடி மையங்களில் மின் வசதி ஏற்படுத்துதல்

அங்கன்வாடி மையங்களில் வருகை புரியும் குழந்தைகளை கோடைக் காலங்களில் ஏற்படும் வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டு மையங்களுக்கு மின் இணைப்பு வழங்கி மின்விசிறி மற்றும் மின் விளக்கு போன்றவை பொருத்தப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 54,439 அங்கன்வாடி மையங்களில் 35,678 அங்கன்வாடி மையங்கள் மின் வசதியுடன் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 18,761 அங்கன்வாடி

மையங்களுக்கும் படிப்படியாக மின் வசதி ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 6.14.5 அங்கன்வாடி மையம் மற்றும் மழலையர் பராமரிப்பகம் தோற்றுவித்தல்

நகர்ப்புறங்களில் உள்ள பெற்றோர்கள் தங்களது குடும்பத்தின் அத்தியாவசிய தேவைகளுக்காக பணிக்கு செல்லும் போது, அவர்களின் 5 வயது வரையுள்ள குழந்தைகளை பாதுகாப்பான இடத்தில் மாலை 6.00 மணி வரை பராமரிப்பதற்கென "மழலையர் பராமரிப்பகம்" 2014–2015–ஆம் ஆண்டில் தொடங்க ஆணையிடப்பட்டது. அதன்படி முதற் கட்டமாக சென்னை, கோயம்புத்தூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம், திருநெல்வேலி, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட 13 மாவட்டங்களில் நகர்புறங்களில் செயல்படும் 211 மையங்களில் "மழலையர் பராமரிப்பகங்கள்" ₹2.31 கோடி செலவில் தொடங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 2,593 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

### 6.14.6 நெகிழ்வு நிதி

அங்கன்வாடி மையங்களில் ஏற்படும் எதிர்பாரா / அவசர செலவினத்திற்காக ஓர் ஆண்டிற்கு ஒரு மையத்திற்கு ₹1,000 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை அங்கன்வாடி பணியாளரின் வங்கி சேமிப்புக் கணக்கில் நேரடியாக மின்னணு பண பரிமாற்றம் மூலம் செலுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக 2016–2017 ஆம் ஆண்டில் ₹5.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.15 பயிற்சி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பணியாளர்களின் திறனை மேம்படுத்தச் செய்வதிலும், அவர்களுடைய செயல்திறன்பாட்டின் தரத்தினை உறுதி செய்வதிலும், பயிற்சி முக்கிய பங்கு வகிக்கிறது. சமுதாய வளர்ச்சியில் மக்களை ஒருங்கிணைத்து செல்லும் உத்திகளை திறமையாக கையாள தகுதியுள்ள பணியாளர்களால் மட்டும் இயலும் என்பதால் இத்தகைய திறனை வளர்ப்பது பயிற்சியின் தலையாய நோக்கமாகும். எனவே, தெளிவான அறிவும், செயல்திறனும் வளர்த்துக் கொள்ளத்தக்க வகையில் பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்படுகிறது. குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகளில் களப்பணியாளர்கள் இத்திட்டப் பயன்களை சமூகத்தின்

கடைநிலைவரை கொண்டு செல்வதில் முக்கியப் பங்காற்றுவதோடு, சமூக மக்களிடையே நல்ல பழக்கவழக்கங்கள் மற்றும் மனமாற்றங்களை ஏற்படுத்தும் முகவர்களாக கருதப்பட்டு, அனைத்து களப்பணியாளர்களுக்கும் இத்திட்டம் குறித்த தெளிவான அறிவு, திறன் மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்தக் கூடிய வகையில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே பரவலாக்கப்பட்ட பயிற்சி முறை அனைத்துக் களப்பணியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. இப்பயிற்சி முறை பலதரப்பினராலும் பாராட்டப்படும் சிறப்பான முறையாகும். இப்பயிற்சியானது திறன்மிக்கது, செலவு குறைவானது, பொருளாதார பயனுள்ளது. அதுமட்டுமின்றி பயிற்சியின் மதிப்பீடு, பயிற்சி அளிக்கப்படும் போதும், மேற்பார்வையாளர்களின் கள ஆய்வின் போதும் ஆய்வு செய்ய தேவையான வழிகாட்டுதலை அளிக்கிறது. ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் களப்பணியாளர்களுக்கு பணிப்பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு பயிற்றுநர் பணிபுரிந்து வருகிறார்.

மாநில அளவில் இடைநிலை அளவில் மற்றும் திட்ட அளவில் பல்வகைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் விவரம்:-

| வ. எண். | பயிற்சியின் பெயர் | பயிற்சி நடைபெறும் இடம் | பயிற்சி பெறுபவர்கள் |
|---|---|---|---|
| 1. | பணி மற்றும் புத்தாக்கப் பயிற்சி | மாநில பயிற்சி மையம், தரமணி, சென்னை–113 | குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் |
| 2. | பணி / புத்தறிவு மற்றும் புத்தாக்கப் பயிற்சி | | வட்டார அளவில் உள்ள பயிற்றுநர்கள் |
| 3. | பணி மற்றும் புத்தாக்கப் பயிற்சி | இடைநிலை பயிற்சி மையம், இந்திய குழந்தைகள் நலச் சங்கம், சென்னை | மேற்பார்வையாளர்கள் (நிலை–2) |
| 4. | பணி மற்றும் புத்தாக்கப் பயிற்சி | வட்டார அளவில் | அங்கன்வாடிப் பணியாளர்கள் |
| 5. | பணி / புத்தறிவு மற்றும் புத்தாக்கப் பயிற்சி | | அங்கன்வாடி உதவியாளர்கள் |

மேற்கண்ட பயிற்சிகள் தவிர 'பிற பயிற்சி' என்கிற பிரிவின் கீழ் மாநில அளவில் தேவைக்கேற்ப அதிக கவனம் தேவைப்படும் இனங்களுக்கான புதிய / நவீன பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து, திட்டம் வடிவமைத்து பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு மன அழுத்தத்தைக் கையாளுதல் மற்றும்

யோகா கற்பித்தல் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் செயலாற்றல் திறன் மிக்கவர்களாக மேம்படுத்தப்படுகிறார்கள்.

எனவே, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பயிற்சி முக்கிய அடிப்படை அம்சமாக அமைகிறது. சமுதாயத்தில் குழந்தை பராமரிப்பு முறைகளை மேம்படுத்துவதற்கு பிறதுறையினருடன் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் திட்டத்தின் இலக்குகளை எளிதாக அடைய முடியும். இவ்வாறு இலக்குகளை அடைவது என்பது, களப்பணியாளர்களின் செயல்திறமையை பொறுத்தே அமைகிறது.

**இதற்காக 2016–2017 ஆம் ஆண்டில் ₹12.39 கோடி செலவினம் மேற்கொள்ளப்படவுள்ளது.**

**6.16 தகவல், கல்வி , தொடர்பு மற்றும் விழிப்புணர்வு பணிகள்**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் அளிக்கப்படும் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகள், திட்ட பயனாளிகளான, தாய்மார்கள், வளரிளம் பெண்கள் மற்றும் சமுதாயத்தை சென்றடையவும், அவர்களிடையே திட்ட பணிகளின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஊட்டச்சத்து மற்றும் சுகாதார பழக்க வழக்கங்களில் தேவையான மனமாற்றத்தை கொண்டு வரவும் தகவல், கல்வி

மற்றும் தொடர்பு பணிகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

“சமுதாய வளைகாப்பு”, “புதுமணத் தம்பதியினருக்கான பணியரங்கம்”, “பச்சிளம் குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளுக்ககான உணவூட்டும் முறைகள் குறித்து தாய்மார்கள் மற்றும் குழந்தை பேணுவோருக்கான பணியரங்கம்”, “வானொலியில் திட்டம் பற்றிய விளம்பரப்படுத்துதல்”, போன்ற பல்வேறான தகவல் தொடர்புப் பணிகளை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

திட்டம் குறித்த தகவல்கள் மக்களையும் பணியாளர்களையும் சென்றடைய ‘‘சிட்டுக்குருவி சேதி தெரியுமா ?’’ என்ற இதழ் இருமாதங்களுக்கு ஒருமுறை அச்சிடப்பட்டு அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. சுகாதாரம், ஊட்டச்சத்து, குழந்தை வளர்ச்சி குறித்தான பல்வேறு தகவல் தொடர்பு கையேடுகள் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

“பச்சிளம் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள்” குறித்து பல்வேறான தகவல் தொடர்பு முனைப்பு இயக்கங்கள் மாவட்டம் மற்றும் வட்டார அளவில் நடத்தப்பட உள்ளன.

**2016–2017ஆம் ஆண்டிற்கு தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகளுக்காக ₹7.93 கோடி செலவினம் மேற்கொள்ளப்படவுள்ளது.**

**6.17 கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்**

வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வை அமைப்புகள் அனைத்து நிலைகளிலும் திட்டமிடுதலுக்காகவும் மற்றும் உள்ளீடுகள், செயல்முறைகள், வெளியீடுகள் மற்றும் விளைவுகள் உள்ளடக்கிய மாநிலம் சார்ந்த சிறப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் நிறுவப்பட்டுள்ளது. திட்ட செயல்பாடுகள் குறித்த மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகள் தொகுதி அளவில் அங்கன்வாடி மையங்களில் மேற்பார்வையாளர்களாலும், வட்டார அளவில் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களிலும், மாவட்ட அளவில் மாவட்ட திட்ட அலுவலகங்களிலும் மற்றும் மாநில அளவில் தலைமையிடத்திலும் தொகுக்கப்பட்டு அறிக்கைகள் பல்வேறு படிவங்களில் மத்திய மற்றும் மாநில அரசு மற்றும் தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன. மாநில அளவில் மையப்படுத்தப்பட்ட (Centralised) வடிவமைப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி வழிமுறைகளை பின்பற்றி தேவையான பதிவேடுகள் அச்சிடப்பட்டு அங்கன்வாடி மைய பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன.

434 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கு மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகளை அனுப்பும் பொருட்டு ஒரு திட்டத்திற்கு ₹11,790 வீதம் ₹51.17 இலட்சம் செலவில் அகன்ற அலைவரிசை (Broadband) இணைய இணைப்புகள் ஏற்படுத்துவது குறித்து மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் அவர்களால் 31.8.2015 அன்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. பாரத் சஞ்சார் நிறுவனம் மூலம் இணைய இணைப்புப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இடைப்பட்ட காலத்தில் 434 வட்டார அலுவலகங்களில் இணைய இணைப்புகள் பி.எஸ்.என்.எல். சிம்முடன் கூடிய தரவு அட்டை (Data Card) மூலம் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் திருத்திய தகவல் மேலாண்மை திட்டம் வலைதளம் மூலமாக முறைப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசின் புதிய விரைவான அறிக்கை அமைப்பு முழுமையாக செயல்படுத்தப்படுவதால் திட்ட செயல்பாடு, கண்காணிப்பு, தரம் மற்றும் உபயோகம் மேம்படுத்தப்படுவதுடன் அனைத்து நிலையிலும் பொறுப்புடன் பங்காற்றிட வகை செய்யப்படும்.

**6.18 குழந்தைகள் குறித்து தகவல் தொகுப்பினை உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல் முறை மென்பொருள்**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் அவர்களால் **31.8.2015** அன்று சட்டப்பேரவையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஈரோடு மற்றும் கடலூர் மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக **₹13.34** இலட்சம் செலவில் குழந்தைகள் குறித்த தகவல் தொகுப்பினை உருவாக்குதல் தொடர்பாக அறிவிப்பு வெளியிடப்பட்டது. அண்ணா பல்கலைக்கழக ஆராய்ச்சி மையத்துடன் குழந்தைகள் குறித்து தகவல் தொகுப்பினை உருவாக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்திடப்பட்டுள்ளது. இது தொடர்பான வலை பக்கம் (Web Portal) வடிவமைக்கப்பட்டுள்ளது. எல்காட் நிறுவனம் மூலம் சர்வர் வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2016–2017ஆம் ஆண்டில் கண்காணித்தல் மற்றும் முறைப்படுத்துதல் பணிகளுக்காக ₹5.44 கோடி செலவினம் மேற்கொள்ளப்படவுள்ளது.**

**6.19 அங்கன்வாடி மைய பணியாளர்களின் நலன்**

தமிழகத்தில் உள்ள **54,439** அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் அங்கன்வாடிப் பணியாளர்கள், குறு அங்கன்வாடிப்

பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி மற்றும் ஆண்டொன்றிற்கு 3 சதவிகிதம் ஊதிய உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் உதவியாளர் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது ஒட்டுமொத்த தொகையாக அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ₹50,000மும், அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ₹20,000மும் வழங்கப்பட்டு வந்ததை 01.02.2016 முதல் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ₹60,000 மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ₹25,000 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. அங்கன்வாடிப் பணியாளர், குறு அங்கன்வாடிப் பணியாளர், அங்கன்வாடி உதவியாளர் ஆகியோருக்கு சிறப்பு ஓய்வூதியமாக 01.04.2013 முதல் வழங்கப்பட்டு வந்த ₹1,000 ஐ 01.02.2016 முதல் ₹1,500 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு இரண்டு இணை புடவைகள் சீருடையாக வழங்கப்படுகின்றன.

அனைத்து நிலைகளிலும் நெகிழ்வுத் தன்மையுடன் செயல்பட்டு குழந்தைகளின் உயர்தரமான முழு வளர்ச்சிப் பணிகளை ஊக்குவித்து உறுதி செய்யும் வகையிலும், அதன் மூலம் சமுதாயம் மற்றும் அரசியல் பங்களிப்புடன் அனைத்து

நிலையில் உள்ள மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்து அவற்றை மேம்படுத்தி முழு பங்கேற்புடன் நலப்பணிகள் சென்றடையும் வகையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட குழும இயக்ககம் செயல்பட்டு வருகிறது.

**********

## அத்தியாயம் – 7

## சமூகப் பாதுகாப்பு

**7.1** இந்திய அரசாங்கத்தால் ஒப்புக் கொண்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள, குழந்தை உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் உடன்படிக்கையில் குழந்தைகளுக்கு வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை, வளர்ச்சிக்கான உரிமை மற்றும் பங்கேற்பு உரிமை ஆகியவை அடிப்படை உரிமைகள் என குறிப்பிடப்பட்டுள்ளது. இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 குழந்தைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பல்வேறு நடைமுறைகள் மற்றும் பல்வேறு வகையான குழந்தைகள் இல்லங்கள் நிறுவுவதற்கு வழிவகை செய்துள்ளது. தமிழ்நாடு அரசு ஒவ்வொரு குழந்தையின் ஒட்டு மொத்த வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்ய, சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்த உறுதிபூண்டுள்ளதால், சமூகத்தில் குழந்தைகள் தற்போது பாதுகாப்பான சூழ்நிலையில் உள்ளனர்.

துயருறும் சூழலில் உள்ள சிறார்கள் மற்றும் பெண்களுக்கு சேவை புரிவதிலும் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதிலும் மற்ற மாநிலங்களைவிட முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. ஆதரவற்ற, கைவிடப்பட்ட,

தங்குமிடமில்லாத மற்றும் தொலைந்துபோன குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 1887 ஆம் ஆண்டில், சீர்திருத்தப் பள்ளி ஒன்று செங்கல்பட்டில் துவங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக சிறார்களின் பராமரிப்பு, பாதுகாப்பிற்காக மற்றும் குழந்தைகளுக்கான நிறுவனங்களை நிருவகிப்பதற்காக 1920ஆம் ஆண்டில், 'மெட்ராஸ் குழந்தைகள் சட்டம்' இயற்றப்பட்டது. இதன் மூலம், இந்தியாவிலேயே சிறார்களுக்கென தனிச் சட்டம் இயற்றிய முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

குழந்தைகளுக்கான, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 மற்றும் பெண்களுக்கான, ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956 ஆகிய இரு முக்கிய சட்டங்களை சமூக பாதுகாப்புத் துறை மாநிலத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழ் வரும் குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களான வரவேற்பு இல்லங்கள், குழந்தைகள் இல்லங்கள் மற்றும் கூர்நோக்கு இல்லங்கள் ஆகியவை நேரடியாக அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சிறப்பு இல்லங்கள் மற்றும் பிற்காப்பு நிறுவனங்கள் ஆகியவை அரசால் மட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1956ஆம் ஆண்டின், ஒழுக்கநெறி

பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குழந்தைகளைத் திறம்படவும் சிறப்பாகவும் பாதுகாப்பதற்கான கூறுகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டத்தினையும், இத்துறை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

## 7.2 இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015

பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள் ஆகியோருக்காகச் செயற்திறனுள்ள சட்ட விதிகளை ஏற்படுத்தி செயல்படுத்துவதே 2015ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பின்வரும் இரண்டு வகையான குழந்தைகளுக்கு தனித் தனியான வழிவகைகளை இச்சட்டம் வகுத்துள்ளது:–

1. பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள்.

2. சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள்.

## 7.3 பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள்

பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் இல்லாத, உற்றார் உறவினர் எவரும் இல்லாத, எந்தவொரு வாழ்வாதாரமே இல்லாத குழந்தைகள், தெருவோர குழந்தைகள், குழந்தை தொழிலாளர்கள், கொடுமைப்படுத்தப்பட்ட சுரண்டலுக்குள்ளான, எளிதில் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய குழந்தைகள், இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஆகியோர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் பிரிவின் கீழ் அடங்குவர்.

### 7.3.1 குழந்தை நலக் குழுக்கள்

குழந்தை நலக் குழுக்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் தொடர்பான வழக்குகளைத் தீர்வு செய்து வருகின்றது. தமிழக அரசு, மாநிலத்தின் 32 மாவட்டங்களிலும் குழந்தை நலக் குழுக்களை நிறுவியுள்ளது.

இந்த குழுவிற்கு, 1973ம் ஆண்டின் குற்றவியல் நடைமுறை விதிகளின்படி, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் ஆகியோருக்கு உள்ள அதிகாரத்திற்கு ஒத்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. குழந்தை நலக் குழும நடைமுறைகள் ஒரு நீதிமன்றம் நடப்பது போன்ற தோற்றம் இல்லாமல் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் குழந்தை நேய சூழலுடன் நடத்தப்பட்டு வருகிறது.

**2016–2017 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹490.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**7.3.2 சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள்**

குழந்தைப் பாராமரிப்பு நிறுவனங்களை செம்மையாக நிர்வகிக்கவும், சிறந்த சேவையளிக்கவும் சமூக நல இயக்குநரகத்தின் கீழ் இயங்கி வந்த **26** அரசு குழந்தைகள் இல்லங்கள் மற்றும் **122** தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் இல்லங்களையும் சமூக பாதுகாப்புத் துறை இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் தமிழக அரசு கொண்டு வந்துள்ளது. அதன் காரணமாக **36** குழந்தைகள் இல்லங்கள் நேரடியாக அரசு மூலமாகவும் **139** இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் அரசின் நிதி பெற்று நடத்தப்பட்டு வருகின்றன.

சென்னையில் இரண்டு குழந்தைகள் இல்லங்களும் மற்றும் மயிலாடுதுறையில் ஒரு இல்லமும், சிறப்பு பராமரிப்புத் தேவைப்படும் மன நலம் மற்றும் உடல் நலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

இக்குழந்தைகளுக்கு அடிப்படை வசதிகளான உணவு, உடை மற்றும் படுக்கை வசதியுடன் கூடிய உறைவிடம், போதுமான தண்ணீர் வசதி, மின் இணைப்பு வசதிகள் மற்றும் கழிப்பிட வசதி போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

**2016–2017 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹5196.49 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7.3.3 நகர்ப்புறம் மற்றும் புறநகர் பகுதிகளில் பராமரிப்புத் தேவைப்படும் சிறார்களுக்கான திறந்தவெளி புகலிடங்கள்

ஆதரவற்ற / கைவிடப்பட்டவர்கள், பிச்சை எடுப்பவர்கள், சாலையோரத்தில் வசிப்பவர்கள், வேலை செய்யும் சிறார்கள், குப்பைப் பொறுக்குபவர்கள், நடைபாதைவாசிகள், சாலையோர விற்பனையாளர்கள், கழைக் கூத்தாடிகள், கைவிடப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள், வீட்டை விட்டு வெளியேறியவர்கள், இடம் பெயர்ந்தவர்களின் குழந்தைகள் மற்றும் ஆபத்திற்குள்ளாகக்கூடிய பிற வகை சிறார்கள் போன்ற பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகளுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய தற்காலிக தங்குமிட வசதி வழங்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் 14 திறந்தவெளிப் புகலிடங்கள் நகரங்களிலும், புறநகரங்களிலும்

செயல்படுகின்றன. ஒரு குழந்தைக்கு மாதம் ₹2000/–வீதம் பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டு வருவதுடன், வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**2016–2017ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹265.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 7.4 சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள்

குற்றம் புரிந்ததாகக் கூறப்படும் நாளன்று, பதினெட்டு வயது நிறைவடையாத, சட்டத்திற்கு முரணானச் செயல்களைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட குழந்தைகள், 'சட்டத்துக்கு முரணாகச் செயல்பட்ட குழந்தைகள்' என்ற பிரிவின் கீழ் அடங்குவர்.

### 7.4.1 இளைஞர் நீதிக் குழுமங்கள்

சட்டத்திற்கு முரணாகச் செயல்படும் குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்வு செய்வதற்காக தமிழக அரசு மாநிலத்தின் 32 மாவட்டங்களிலும் இளைஞர் நீதிக் குழுமங்களை நிறுவியுள்ளது.

இளைஞர் நீதிக் குழுமமானது, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் மற்றும் இரண்டு சமூகப் பணியில் ஆர்வமுள்ள உறுப்பினர்கள் (ஒரு பெண் உறுப்பினர்) ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவாகச் செயல்படுகிறது.

இளைஞர் நீதிக் குழும நடைமுறைகளும் குழந்தை நலக் குழும நடைமுறைகள் போன்றே ஒரு நீதிமன்றம் நடப்பது போன்ற தோற்றம் இல்லாமல் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் குழந்தைநேய சூழலுடன் நடத்தப்படுகிறது.

இக்குழுமங்கள், திங்கள் முதல் வெள்ளி வரை மாதத்திற்கு 20 அமர்வுகளுக்கு மிகைப்படாமல் கூடுகின்றன.

**2016–2017 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹254.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

**7.4.2 கூர்நோக்கு இல்லங்கள்**

இளைஞர் நீதிக் குழுமங்களின் முன் நிறுத்தப்படும் சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்களின் விசாரணையை எதிர்நோக்கி குழந்தைகளைத் தற்காலிகமாக தங்கவைப்பதற்கான இல்லங்களே கூர்நோக்கு

இல்லங்கள் ஆகும். தமிழ்நாட்டில் தற்போது அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் 7 கூர்நோக்கு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் அடிப்படை வசதிகளான உணவு, உடை, உறைவிடம் மருத்துவ வசதி மற்றும் முறைசாராக் கல்வி ஆகியவற்றோடு ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதலும் வழங்கப்படுகின்றன.

மேலும், இக்குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் மற்றும் அவர்களை உன்னிப்பாக கண்காணிப்புச் செய்வதற்கு ஏதுவாகவும் முதற்கட்டமாக 6 அரசினர் கூர்நோக்கு இல்லங்களில் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக் கருவிகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன.

**2016–2017 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹250.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7.4.3 சிறுவர் மற்றும் சிறுமியருக்கான சிறப்பு இல்லங்கள்

இளைஞர் நீதிக் குழுமத்தில் உரிய சட்ட விதிகளின்படி, விசாரணைக்குப்பின் குற்றம் உறுதி செய்யப்பட்ட சிறார்களின் மறுவாழ்விற்காக சிறப்பு இல்லங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இச்சிறார்கள் மூன்றாண்டுகளுக்கு மிகாமல் இவ்வில்லங்களில் தங்கலாம். சிறுமியர்களுக்காக சென்னையில் ஓர் அரசினர்

சிறப்பு இல்லமும், சிறுவர்களுக்காக செங்கல்பட்டில் ஓர் அரசினர் சிறப்பு இல்லமும் இயங்கி வருகின்றன. இவர்களது சுயசார்பிற்கான திறன்களை வளர்க்கவும் சமூகத்துடன் ஒன்றி வாழ்ந்திடும் பொருட்டு, இவர்களுக்கு, இவ்வில்லங்களில் கல்வி, தொழிற்கல்வி, ஆற்றுப்படுத்துதல் மற்றும் இணைக் கல்வி செயல்பாடுகள், போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் மற்றும் உன்னிப்பாக கண்காணிக்கவும், அரசினர் சிறப்பு இல்லங்களுக்கு கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்களும், தடையில்லா மின்சேவை அளிக்க 100 KVA திறன் கொண்ட தானியங்கி டீசல் மின்னாக்கியும் வழங்கப்பட்டுள்ளன.

**2016–2017 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹190.19 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7.4.4 அரசினர் பிற்காப்பு நிறுவனங்கள்

குழந்தைகள் இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்களில் மறுவாழ்விற்கான திட்டங்களை முடித்த பின், சிறார்களின் 18 வயது முடிவுற்ற பின்பு நிறுவன பராமரிப்புத் தேவைப்படின், அத்தகைய இளைஞர்கள் பிற்காப்பு நிறுவனங்களில் தங்க

வைக்கப்படுகின்றனர். பிற்காப்பு இல்லங்களில் பல்வேறு காரணங்களால் வீடேக முடியாத இளைஞர்கள் அல்லது கல்வியைத் தொடரும் குழந்தைகள் அல்லது பயிற்சியை எடுத்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் அனுமதிக்கப்படுகின்றனர். இளைஞர்களுக்கான இரண்டு பிற்காப்பு நிறுவனங்கள் ஒன்று ஆத்தூர், செங்கல்பட்டு (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றொன்று மதுரையிலும் இயங்கி வருகின்றன. பெண்களுக்காக வேலூரில் ஒரு பிற்காப்பு நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இது தவிர மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்காகத் தொழிற்பயிற்சியுடன் கூடிய புகலிடம் அரசு உதவியுடன் சென்னையில் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் செயல்பட்டு வருகிறது.

**2016–2017 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹133.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7.4.5 திட்டமுன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு

குழந்தைகள் நலத் திட்டங்களைக் (அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்) கண்காணிக்க யூனிசெப்

நிறுவனத்தின் உதவியுடன் **1991** ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத் துறை ஆணையரகத்தில் திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. துயருறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் குறித்து கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதோடு, அரசு மற்றும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் இல்லங்கள் அனைத்தையும் இப்பிரிவு ஆய்வு செய்து வருகிறது. குழந்தைகள் நலத் திட்டங்களை காலமுறையாக ஆய்வு செய்து அறிக்கையினை வளர்ச்சிக்கான காரணிகளுடன் தெரிவிப்பது, இப்பிரிவின் கடமையாகும்.

### 7.4.6 அரசால் மேற்கொள்ளப்பட்ட பிறவகையிலான நடவடிக்கைகள்

#### 7.4.6.1 மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலகங்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

பல்வேறு குழந்தைகள் பாதுகாப்புச் சட்டங்கள் / திட்டங்கள் சீரிய முறையில் மாவட்டங்களில் செயல்படுத்தவும் குழந்தைகள் குறித்த ஆவணங்கள் மற்றும் அறிக்கையினை சமர்ப்பிக்கவும் **₹16.00** இலட்சம் செலவில் மாவட்டத்திற்கு தலா ஒரு மடிக்கணினி வீதம் **32** மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலர்களின் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**7.4.6.2 குழந்தைப் பாராமரிப்பு நிறுவனங்களுக்கு ஊர்தி வழங்குதல்**

ஈரோடு, இராணிப்பேட்டை, விழுப்புரம், தஞ்சாவூர் மற்றும் காரைக்குடியில் செயல்பட்டு வரும் ஆண்களுக்கான அரசு குழந்தைகள் இல்லங்கள், சென்னை–10ல் சிறுமியருக்காக செயல்படும் அரசு குழந்தைகள் இல்லம், சேலத்தில் செயல்படும் சிறுமியருக்கான அரசு கூர்நோக்கு இல்லம், கடலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் செயல்படும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான அரசு கூர்நோக்கு இல்லங்கள், செங்கல்பட்டில் செயல்படும் சிறுவர்களுக்கான சிறப்பு இல்லம் மற்றும் மதுரையில் செயல்படும் அரசு பிற்காப்பு நிறுவனம் ஆகிய இடங்களில் ₹61.00 இலட்சம் செலவில் 12 ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.

**7.4.6.3 குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் பாதுகாப்பு வசதிகள் செம்மைப்படுத்துதல்**

**7.4.6.3.1 திருநெல்வேலி, அரசு கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் 3 இளைஞர் நீதிக் குழுமங்களில் காணொலி ஒளிக்காட்சி வசதி ஏற்படுத்துதல்**

அரசு கூர்நோக்கு இல்லங்களிலிருந்து இல்லவாசிகளை அழைத்து செல்வதிலுள்ள பாதுகாப்புமின்மையைத் தவிர்க்கவும், பயணம் மற்றும் பாதுகாப்பு ஏற்பாட்டு செலவினைச் சேமிக்கவும் மேலும் வழக்குகளில் தொடர்புடைய இல்லவாசிகளின்

தனிப்பட்ட சொந்த வாழ்க்கையின் விவரங்களைப் பேணவும் திருநெல்வேலியிலுள்ள அரசு கூர்நோக்கு இல்லம் மற்றும் சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள இளைஞர் நீதிக் குழுமங்களில் காணொலி ஒளிக்காட்சி வசதிகளை ₹38.90 இலட்சம் செலவில் அரசு அமைத்துள்ளது.

### 7.4.6.3.2 குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களுக்கு கண்காணிப்பு கேமரா கருவிகள் வழங்குதல்

சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் இல்லங்களான சென்னை, இராணிப்பேட்டை, விழுப்புரம், தஞ்சாவூர், காரைக்குடி, மல்லிப்புதூர், தட்டப்பாறை, பஞ்சப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய 9 இடங்களில் உள்ள அரசினர் குழந்தைகள் இல்லங்களிலும், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் உள்ள அரசினர் கூர்நோக்கு இல்லங்களிலும், திருச்சி, சேலம், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள அரசினர் மகளிர் காப்பகங்களிலும், வேலூரில் உள்ள அரசினர் வரவேற்பு இல்லம், அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனம் மற்றும் ஆடைகள் செய்யும் பயிற்சி நிறுவனம், வேலூர், ஆத்தூர் (செங்கல்பட்டு) மற்றும் மதுரையிலுள்ள அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனங்கள் ஆகிய 21 இல்லங்களில் ₹32.00 இலட்சம் செலவில் கண்காணிப்பு கேமிரா கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 7.4.6.4 கட்டமைப்பு வசதிகள்

மதுரையிலுள்ள சிறுவர்களுக்கான கூர்நோக்கு இல்லம் மற்றும் சிறுமியருக்கான கூர்நோக்கு இல்லம் ஆகியவற்றிற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கும் மேலும் அவ்வாளகத்திலுள்ள மையக் கட்டடத்தைப் புதுப்பித்து அலுவலகமாகவும் மற்றும் இளைஞர் நீதிக் குழும அலுவலகமாகவும் மாற்றுவதற்கு அரசால் ₹6.04 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 7.4.6.5 மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்

இளைஞர் நீதி அமைப்பில் உள்ள கட்டாயக் கடமைகளைச் செயல்படுத்துவதற்கும், முழுமையான சேவை எளிதாக சென்றடைய, மாவட்ட அளவிலான அமைப்பினை மேற்பார்வை மற்றும் கட்டுப்படுத்த அரசு 32 மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலர் பணியிடங்களை முழு நேர அடிப்படையில் காலமுறை ஊதியத்தில் ஏற்படுத்தியுள்ளது.

## 7.5 வள மையங்கள்

பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாகச் செயல்படும் குழந்தைகளுக்கு சமூக உளவியல் ரீதியான உதவிகளும், வழிகாட்டுதல்களையும்

வழங்குமிடமாக வள மையங்கள் இயங்குகின்றன. அரசு உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் இவ்வள மையங்கள், இளைஞர் நீதிக் குழுமம், குழந்தை நலக் குழுக்கள் மற்றும் குழந்தைகள் இல்ல கண்காணிப்பாளர் மூலம் பரிந்துரைக்கப்படும், குழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு, ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் 18 மாவட்டங்களில் வள மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**2016–2017 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹7.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7.6 கல்வி வசதிகள்

அரசு குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள், குழந்தைகள் தன்னுரிமை மிக்கவர்களாக்க, அவர்களுக்கு கல்வி அளிப்பதில் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றன. மேல்படிப்பு படிப்பதற்கு விருப்பம் உள்ள குழந்தைகள் கல்வியைத் தொடர்வதற்காக வெளியிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். தொழிற்கல்வியில் ஆர்வமுள்ள குழந்தைகளுக்கு அவரவர்களின் விருப்பத்திற்கேற்ப தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

முறையான கல்வி வழங்குவதற்காக பெரும்பாலான குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் வளாகத்திலேயே பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு, வளாகத்திலேயே பள்ளிகளற்ற குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். தற்காலிகமாக தங்க வைக்கப்படும் குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களான கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் வரவேற்பு பிரிவுகளில் முறைசாரா கல்வி அளிக்கப்பட்டுவருகிறது.

**2016–2017 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹4.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**7.7 நவீன தொழிற் பயிற்சி**

துறையின் கீழியங்கும் நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு மறுவாழ்வு வழங்கும் நோக்குடன் பயிற்சிபெற்ற ஆசிரியர் மற்றும் தொழில் ஆசிரியர் மூலம் தையல், மரவேலை மற்றும் புத்தகம் கட்டுதல் போன்ற திறன் அடிப்படையிலான தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவை தவிர தனியார் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கீழ்க்காணும் குறுகிய கால தொழிற் பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன:–

- ஹேண்டி மேன்–பிளம்பிங் / எலக்ட்ரிகல்/தச்சு
- வீடியோகிராபி /புகைப்படம் எடுத்தல்
- ஆடை தயாரித்தல்/ எம்பிராய்டரி தையல்
- பேப்ரிக் பெயிண்டிங் / புத்தகம் கட்டுதல்
- கைவினைப் பொருட்கள் / கலைப் பொருட்கள் தயாரித்தல் / வண்ணம் தீட்டுதல்
- மென்பொம்மைகள்/காகிதப்பை/தட்டுகள் தயாரித்தல் / செயற்கை நகைகள் தயாரித்தல் / துணி மற்றும் சுவர்களில் வர்ணம் தீட்டுதல்
- கணினி / DTP பயிற்சி / உருப்படம் எடுத்தல்
- அழகுக்கலை பயிற்சி / மருதாணி இடுதல்
- உணவு பதப்படுத்தல்

**2016–2017 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹31.19 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 7.8 குழந்தைகளுக்கான கட்டணமில்லா தொலைபேசி உதவித்திட்டம் (Child line) 1098

துன்புறும் சூழலில் உள்ள குழந்தைகள் மற்றும் உடனடியாக உதவி தேவைப்படும் குழந்தைகள் அல்லது அவ்வகையான குழந்தைகளை காண நேரிடும் நபர், உடனடி உதவி பெற **1996** ஆம் ஆண்டு **சைல்ட் லைன் இந்தியா**

**ப்வுண்டேசன்** என்ற அமைப்பினால், **(Childline India Foundation),** துவங்கப்பட்ட ‘**சைல்ட் லைன் –** என்ற கட்டணமில்லா தொலைபேசி உதவி திட்டத்தின் மூலம் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். நாடு முழுவதும் இத்தொலைபேசி சேவைக்கான பொது எண்ணாக **‘பத்து ஒன்பது எட்டு’ (1098)** உள்ளது. இச்சேவை, தனியார் தொண்டு நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டாலும், இதற்கான நிதியுதவி இந்திய அரசினால் வழங்கப்படுகிறது. இத்தொண்டு நிறுவனங்கள் மீட்பு மற்றும் தலையீட்டுச் சேவைகளை அளித்து வருகின்றன.

தமிழ்நாட்டில், அரியலூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களைத் தவிர்த்து இத்தொலைபேசி சேவை அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது.

### 7.9 ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டம்

குழந்தை பாதுகாப்பிற்காக மாநிலத்தில் இளைஞர் நீதி நிர்வாகத்தினை சிறப்பாக மேம்படுத்துவதற்கு மைய அரசின் நிதியுதவியுடன், ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. துயருறும் சூழலில் உள்ள குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை அரசு மற்றும் பொது மக்களின் பங்களிப்போடு ஏற்படுத்த ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டம் முனைந்துள்ளது.

**குறிக்கோள்கள்**

இத்திட்டம் இளைஞர் நீதிச் சட்டத்தினைச் செம்மையாகச் செயல்படுத்துவதையும், துயருறும் சூழலில் உள்ள குழந்தைகளின் நலனுக்காகப் பங்களித்தலையும், சமுதாயத்தில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியவற்றோடல்லாமல், குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை, சுரண்டல், புறக்கணித்தல், கைவிடப்படுதல் மற்றும் பெற்றோர்களிடமிருந்து பிரிதல், போன்றவற்றை ஏற்படுத்தக் கூடிய துன்பச் சூழல்களைத் திறம்பட குறைத்து, குழந்தைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேற்கூறிய நோக்கத்தை அடைய கீழ்க்காணும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன:—

- குழந்தைகள் பாதுகாப்புச் சேவைகளின் தரம் மற்றும் பயன்பாட்டினை மேம்படுத்துதல்.
- இந்தியாவில் தற்போது நிலவும் குழந்தை உரிமைகள் மற்றும் குழந்தைப் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- குழந்தைகள் பாதுகாப்பிற்கான கடமையையும், பொறுப்புணர்வையும் ஏற்படுத்துதல்.

- குழந்தைகள் பாதுகாப்பு குறித்த தகவல் மேலாண்மைத் திட்டம், காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடிக்கும் திட்டம் மற்றும் குழந்தைப் பாதுகாப்புச் சேவை கண்காணிப்பு ஆகியவற்றை உருவாக்குதல்.
- அனைத்து பிரிவுகளுக்கிடையே எல்லா அளவிலும் தகுந்த செயல்பாட்டை உறுதிப்படுத்துதல்.

### 7.9.1 ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் செயல்படும் அமைப்புகள்

ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த, கீழ்க்காணும் நிறுவன கட்டமைப்புகளை அரசு உருவாக்கியுள்ளது:-

- i மாநில குழந்தைப் பாதுகாப்புச் சங்கம்
- ii மாவட்ட குழந்தைப் பாதுகாப்புச் சங்கங்கள் / அலகுகள்
- iii மாநில தத்தெடுப்பு வள முகமை
- iv சிறப்புத் தத்தெடுப்பு முகமைகள்
- v இளஞ்சிறார்களுக்கான சிறப்புக் காவல் பிரிவு

அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் சைல்ட் லைன் திட்டம், போன்றவற்றால் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகள் ஆகியோர் நேரடியாக பயனடைகிறார்கள். ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வாயிலாக சமூகத்திலுள்ள அனைத்து குழந்தைகளும் பயன்பெற்று வருகின்றனர்.

**2016–2017 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹2016.03 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7.9.2 அனைத்து குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களையும் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015ன் கீழ் பதிவு செய்தல்

இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், **2015**ன் கீழ் அனைத்து குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களும் கட்டாயமாகப் பதிவு செய்யப்படவேண்டும். பதிவு செய்யபடாமலிருந்தால் சட்டப்படி அதற்கான தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லங்களை பதிவு செய்வதன் மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து இல்லங்களின் உண்மையான நிலை, அடிப்படை வசதிகள், போன்றவற்றை பகுப்பாய்வு செய்வதற்கு உதவிகரமாக உள்ளது.

மேலும் மாநிலத்திலுள்ள அனைத்து குழந்தைகளின் விவரங்களை பெற்று, குழந்தை பராமரிப்பு இல்லங்களிடையான சேவைகளை ஒருங்கிணைக்க இல்லங்களை பதிவு செய்தல் உதவுகிறது. மாநிலத்தில் செயல்படும் **1,467** குழந்தை பராமரிப்பு இல்லங்களில் இதுவரை **767** இல்லங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 7.10 குழந்தைகளின் பின்தொடர் முறைமை

காணாமல் போன குழந்தைகள், வீட்டை விட்டு வெளியேறிய குழந்தைகள் மற்றும் கடத்தப்படும் குழந்தைகள், சுரண்டல்கள் மற்றும் பல்வேறு பாலியல்/உடல் ரீதியான கொடுமை மற்றும் மனித உரிமை மீறல் போன்ற சூழல்களுக்கு எளிதாக இலக்காகக் கூடியவர்கள் இவ்வகையான குழந்தைகளை முன் கூட்டியே கண்டறிந்து அவர்களை குடும்பத்துடன் சேர்ப்பதே அவர்களது வாழ்க்கையை மீண்டும் பெறுவதற்கும் பாதுகாப்பு வழங்குவதற்குமான சிறந்த தலையீட்டு சேவையாகும்.

**காணாமல் போன குழந்தைகளின் பின் தொடர் முறைமை** என்ற தேசிய இணையத்தினை காணாமல் போன குழந்தைகளை கண்டுபிடிப்பதற்காக மத்திய அரசு தேசிய தகவல் மையம் (NIC) மூலம் அமைத்துள்ளது. மேற்படி தேசிய

இணையத்தின் மூலம் காணாமல் போன குழந்தைகளைக் கண்டறியவும் நிறுவனங்களிலுள்ள குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்காணிக்கவும் நேரலை தகவல் தொகுப்பு பயன்படுகிறது.

தமிழ்நாட்டில் "குழந்தை பின்தொடர் முறைமை" சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணினி இணைப்பின் மூலம் மாநிலத்தின் உள்ளார்ந்த பகுதிகளில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்கள், தொடர்புடைய துறைகளின் மாவட்ட அலுவலகங்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகங்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையே இணைப்பை ஏற்படுத்தியதன் மூலமும், பங்களிப்பினருக்கும், பணியாளர்களுக்கும் காலமுறையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டதின் மூலமும் இது சாத்தியமாகியுள்ளது. காணாமல் போன குழந்தைகளின் பின்தொடர் முறைமையின் கீழ், தேசிய தகவல் தளத்தில் தகவல்களைப் பதிவு செய்வதற்கான மென்பொருள்களை உபயோகப்படுத்துதல் குறித்துப் பயிற்சி திட்டங்களை சமூகப் பாதுகாப்புத் துறை வகுத்துப் பயிற்சி வழங்கியுள்ளது.

## 7.11 ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956

### 7.11.1 ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956ன் நோக்கமும் குறிக்கோள்களும்

(i) பெண்கள் மற்றும் சிறுமியர்களை வணிக நோக்கிலான பாலியல் சுரண்டலுக்கும், கடத்தலுக்கும் உள்ளாக்குவதைத் தடுத்தல்

(ii) ஆள்கடத்தலில் ஈடுபடுபவர்கள், பாலியல் தொழிலில் அவர்களை ஈடுபடுத்துபவர்கள் மற்றும் பாலியல் தொழில் சந்தையை ஏற்படுத்துபவர்களை நீதியின் முன் நிறுத்துதல்.

(iii) பாலியல் தொழிலிலிருந்து மீட்கப்பட்ட பெண்கள், சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைந்து வாழ்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.

### 7.11.2 மகளிர் காப்பகங்கள் /பாதுகாப்பு இல்லங்கள்

**1956–**ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள, சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய **5** இடங்களில் மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களை தமிழக அரசு நடத்தி வருகிறது.

ஒழுக்க அச்சுறுத்தலுக்குள்ளாகி பாதிக்கப்பட்ட பெண்கள் **1956** ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு)

சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ், நீதிமன்ற ஆணையின்படி இவ்வில்லங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். இங்கு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் அடிப்படை வசதிகளான பராமரிப்பு, மருத்துவ உதவி மற்றும் ஆற்றுப்படுத்துதல் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மீண்டும் சமுதாயத்தில் மதிப்புடன் வாழ வழி ஏற்படுத்த அவர்களின் விருப்பதிற்கேற்ப பல்வேறு தொழிற்பயிற்சிகள் இவ்வில்லங்களில் வழங்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட பெண்களின் மாண்பை பாதுகாக்கவும், பாலியல் குற்றங்களில் ஈடுபடும் சமூக விரோதிகளை பாதுகாக்கவும் ஏதுவாக நீதிமன்றத்தின் நேரடி விசாரணைக்கு பதில் காணொலி ஒளிக்காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ள ஏதுவாக ₹20.00 லட்சம் செலவில் மயிலாப்பூர், அரசினர் மகளிர் காப்பகத்திற்கும், சைதாப்பேட்டை முதன்மை நடுவர் நீதிமன்றத்திற்கும் இடையே, காணொலி ஒளிக்காட்சி வசதி ஏற்படுத்தப்பட்டு, அவர்களின் வழக்குகள் விரைவில் தீர்வு செய்யப்படுகின்றன.

### 7.11.3 மீட்புப் புகலிடங்கள்

**1956** ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் மீட்கப்பட்ட சிறுமியர் மற்றும் மகளிருக்காக.

**6** மீட்புப் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன. நீதிமன்றத்தால் வழக்குகள் முடிக்கப்படும் வரை, பாதிக்கப்பட்ட பெண்கள் தற்காலிகமாக இங்கு தங்க வைக்கப்படுகின்றனர். இந்தப் புகலிடங்கள், பெண்கள் கண்காணிப்பு/பாதுகாப்பு இல்ல வளாகத்திலும், வேலூர், பிற்காப்பு நிறுவனத்திலும் இயங்கி வருகின்றன.

### 7.11.4 மணமாகாத தாய்மார்கள் இல்லம்

பாலியல் சுரண்டல்களுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்ட மணமாகாத தாய்மார்களின் நலனுக்காக சென்னை, மைலாப்பூர் அரசினர் மகளிர் காப்பகத்துடன் இணைக்கப்பட்ட, மணமாகாத தாய்மார்கள் இல்லம் இயங்கி வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள அடைக்கலாபுரத்தில் ஒரு மணமாகாத தாய்மார்கள் இல்லம் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் செயல்பட்டு வருகிறது.

**2016–2017 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹323.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7.12 மறுவாழ்வுக்கான திட்டங்கள்

தமிழ்நாட்டில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் நலனுக்காக மாநில அரசு பல்வேறு மறுவாழ்வு

நடவடிக்கைகளையும், நலத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது. அத்தகைய ஒரு நடவடிக்கையாக, தமிழக அரசு, ‘பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதி’ ஒன்றை இத்துறையின் கீழ் உருவாக்கியுள்ளது.

இல்லங்களிலுள்ள வசதிகளை மேம்படுத்துதல், ஆதரவற்ற குழந்தைகளுக்கான கல்வி உதவி போன்ற செலவினங்களை மேற்கொள்வதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். தொழிற்பயிற்சி பெற்ற மாணவர்கள் தொழில் தொடங்க **₹5,000** வரையிலான நிதியுதவி அல்லது தேவையான கருவிகள், மூலப்பொருட்கள் வாங்க **₹10,000** நிதியுதவி அளிக்கப்படுகிறது.

தச்சு வேலை, நெசவு, புத்தகம் கட்டுதல், தோட்ட வேலை, கட்டட வேலை, தையல், பூ தையல், பாய் நெசவு, குழாய் வேலை போன்ற தொழிற் பயிற்சிகள் சிறுவர் சிறுமியர்களுக்கு அளிக்கப்படுகின்றன. அதே போன்று, கண்காணிப்பு / பாதுகாப்பு இல்லங்களிலிருந்து வெளியேறும் பெண்கள் மற்றும் சிறுமிகள் சுய தொழில் தொடங்க நிதியுதவி அளிக்கப்படுகிறது.

### 7.12.1 வணிக ரீதியிலான பாலியல் சுரண்டலுக்காக மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுத்துவதைத் தடுக்க மாநில அரசின் சிறப்பு முயற்சிகள்

கடத்தப்படுதல் மற்றும் வணிகரீதியிலான பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்காக தமிழக அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:–

❖ மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒன்று தலைமைச்செயலரின் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் மாவட்ட அளவிலான ஆலோசனைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

❖ ஒவ்வொரு கிராமங்களிலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுவது தொடர்பான பிரச்சனைகளைக் கண்காணிக்க கிராம ஊராட்சி தலைவர் தலைமையில் கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடுப்பதற்காக இம்மூன்றடுக்கு திட்டம், தோற்றுவிக்கப்பட்டதில் தமிழ்நாடு முதல் மாநிலமாக திகழ்கிறது.

❖ மேற்குறிப்பிட்ட குழுக்கள் மட்டுமல்லாது மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் உயர்மட்ட மேற்பார்வைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதல் / வணிக ரீதியாக பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளை மேற்பார்வையிடுதலை, இக்குழு கவனிக்கும்.

❖ பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்தி, வணிகரீதியில் பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதைத் தடுக்கவும், கடத்தலுக்கு எதிராக பிரசாரம் செய்யவும், சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டிருந்தால், அவர்களின் மறுவாழ்வுக்கு உதவிகரமாக இருக்கவும் அதற்காக செயல்படும் அமைப்புகளுக்கு புத்தாக்க பயிற்சி இத்துறையின் மூலம் அவ்வப்போது அரசு மற்றும் யூனிசெப் போன்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது.

### 7.12.2 எளிதில் வன்செயல்களில் பாதிக்கப்படும் பெண்களுக்கான திட்டங்கள் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண நிதி

கடத்தலிலிருந்து மீட்கப்படும் மகளிருக்கு அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் மறுவாழ்விற்கு நிதியுதவியாக **₹10,000** வழங்க தமிழக அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இதன் மூலம்

இதுவரை 209 பாதிப்பிற்குள்ளான பெண்கள் பயனடைந்துள்ளனர்.

**‘உஜ்ஜவாலா’ திட்டம்**

பெண்கள் மற்றும் குழந்தைகள் வணிகரீதியான பாலியல் சுரண்டலுக்காக கடத்தப்படுவதென்பது மனித உரிமைகளை மீறும் குற்றமாகும். கடத்தலுக்குள்ளாகக் கூடிய வாய்ப்பு மிகுதியாக உள்ள பகுதிகளில், கடத்தலைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

மேற்கண்ட பிரச்சினையை சமாளிக்க, இந்திய அரசு, ‘உஜ்ஜவாலா’ என்றொரு விரிவான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் ஆட்கடத்தலைத் தடுக்கவும், வணிக ரீதியான பாலியல் சுரண்டலைத் தடுக்கவும், கடத்தபட்டவர்களை மீட்டு, மறுவாழ்வளித்து, சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் வழிவகை செய்கிறது. இந்திய அரசின் உதவியோடு, தமிழ்நாட்டில் இத்திட்டம், எட்டுத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**போதை தடுப்புத் திட்டம்**

மத்திய அரசின் நிதியுதவியுடன், போதைத் தடுப்புத் திட்டத்தை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், குடி மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள், ஒருங்கிணைந்த மறுவாழ்வு மற்றும் சிகிச்சை மையங்களில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு, சுமார் 21 நாட்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதும் 26 மையங்கள், இந்திய அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் இயங்கி வருகின்றன.

## 7.13 தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்

மனித வள மேம்பாட்டிற்கான தேசிய திட்டங்களில் குழந்தைகளுக்கான திட்டங்களுக்கு பிரதானமான இடம் அளிக்கப்பட வேண்டும் என்பதை 1974 ஆம் ஆண்டின் குழந்தைகளுக்கான தேசியகொள்கை அங்கீகரித்துள்ளது. இந்திய அரசானது ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையினை 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் நாள் ஏற்றுக்கொண்ட நிலையில், கடந்த 2004 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் 9ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2003ஆம் ஆண்டிற்கான குழந்தைகளுக்கான தேசிய சாசனம், ஒவ்வொரு குழந்தையும் குழந்தையாக இருப்பதற்குரிய உள்ளார்ந்த, உள்ளடக்கிய உரிமை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தையே வலியுறுத்துகிறது.

2003 ஆம் ஆண்டிற்கான குழந்தைகளுக்கான தேசிய சாசனம் ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 2005 ஆம் ஆண்டில் தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்த சட்டம் தேசிய குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையம் மற்றும் மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் உருவாக்கிட வழிவகை செய்கிறது. தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் கடந்த 18.01.2013 முதல் தமிழகத்தில் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளஅதிகாரங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் பின்வருமாறு:—

| அதிகாரங்கள் | செயல்பாடுகள் |
|---|---|
| இவ்வாணையம் உரிமையியல் நெறிமுறை தொகுப்புச் சட்டம், 1908—ன்படி வழக்குகளை விசாரிப்பதற்கு உரிமையியல் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரங்கள் கொண்டதாகும். | குழந்தைகள் தொடர்பான கீழ்க்காணும் சட்டங்களின் அமலாக்கத்தினை கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்<br>அ) குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005.<br>ஆ) குழந்தை தொழிலாளர் (ஒழித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1986.<br>இ) இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015.<br>ஈ) குழந்தைத் திருமண தடைச் சட்டம், 2006 |

| | |
|---|---|
| | உ) குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009.<br>ஊ) பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012. |
| காவல் துறை மற்றும் பிற அரசு துறை அலுவகங்களிலிருந்து குழந்தை உரிமை மீறல் தொடர்பான உரிய ஆவணங்களை கோரிப் பெறுதல். | ➢ குழந்தை உரிமை மீறல்கள் மீது விசாரணை செய்து தேவையான நடவடிக்கைகளை தொடங்குவதற்கு சம்பந்தப்பட்ட அரசுத்துறை சார்ந்த அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்தல்.<br>➢ குழந்தை உரிமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.<br>➢ ஊடகங்கள், பொதுமக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களிலிருந்து பெறப்படும் குழந்தை உரிமை மீறல்கள் தொடர்பான புகார்கள் அடிப்படையில் மட்டுமின்றி குழந்தை உரிமை மீறலாகக் கருதப்படும் இனங்களில் ஆணையம் தானாக முன்வந்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளல்.<br>➢ குழந்தை உரிமைகள் பாதுகாப்பு குறித்து அரசு/அரசுசாரா நிறுவனங்களின் அலுவலர்களுக்கு புத்தாக்க பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்கங்கள் நடத்துதல்.<br>➢ குழந்தை நலன் சார்ந்த கொள்கைகளை வடிவமைத்தல். |
| பாலியல் குற்றங்கள் மற்றும் பாலியல் சட்டம் 2012ன் கீழ் சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்தல் | |
| உரிமை மீறல்கள் காரணமாக பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு உரிய நிவாரணம் மற்றும் உரிய மறுவாழ்வு நடவடிக்கை குறித்து அரசுக்கு பரிந்துரை செய்தல். | |

**குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்,2009**

தமிழ்நாடு மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை சட்டம், 2009 (RTE Act) பிரிவு 31ன்படி, தமிழகத்தில் இச்சட்டத்தின் செயலாக்கத்தினை கண்காணித்து வருகிறது.

மேலும், இவ்வாணையம் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை சட்டம், 2009ன் பிரிவு12(1C)ன்படி, தனியார் மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில், சமூகத்தில் நலிந்து மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் குழந்தைகளுக்கான 25% பள்ளிச் சேர்க்கையினை உறுதி செய்யும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

**பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம்,2012**

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 பிரிவு 44ன்படி, தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையமானது, தமிழகத்தில் இச்சட்டம் நடைமுறைப்படுத்துதலை கண்காணித்து வருகிறது.

**இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்,2015**

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், **2015** பிரிவு **109**ன்படி, இச்சட்டத்தின் செயலாக்கத்தினைக் கண்காணிக்கும் அதிகாரம் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**ஆணையத்தால் கையாளப்பட்ட வழக்குகள்**

இவ்வாணையம் துவங்கப்பட்ட நாள் **(18.01.2013)** முதல் இந்நாள்வரை செய்திதாள் மற்றும் ஊடகங்கள், பொதுமக்கள்/தொண்டு நிறுவனங்கள், தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் மற்றும் இதர அமைப்புகள் மூலம் வரப்பெற்ற பல்வேறு குழந்தை உரிமைகள் மீறல்கள் தொடர்பான 757 வழக்குகளைக் கையாண்டு தீர்வு செய்துள்ளது. இவ்வாணையத்தின் மின்னஞ்சல் முகவரி **scpcrtn@gmail.com** மற்றும் இணையதள முகவரி www.scpcr.tn.gov.in

**2016–2017 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு ₹48.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

## 7.14 குழந்தை பாதுகாப்பிற்காக பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு

குழந்தை பாதுகாப்பு என்பது பரந்த எல்லையைக் கொண்டதாகும். எனவே குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பிலுள்ள பல்வேறு துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியுள்ளது. பல்வேறு துறைகளிலுள்ள குழந்தைகளுக்கான பலதரப்பட்ட சேவைகளை ஒருங்கிணைந்து செயல்படுத்த சமூகப் பாதுகாப்புத் துறை ஒரு பாலமாக செயல்படுகிறது.

சமூக நலம், கல்வி, தொழிலாளர் நலம், அனைவருக்கும் கல்வித் திட்டம் (SARVA SHIKSHA ABHIYAN), தேசிய குழந்தைத் தொழிலாளர் தடுப்புத் திட்டம், இரயில்வே காவல், வருவாய், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி, மருத்துவம் மற்றும் சுகாதாரம், காவல், நீதி மற்றும் மாற்றுத் திறானாளிகள் நலம் ஆகிய துறைகளுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பினை சமூகப் பாதுகாப்புத் துறை கொண்டுள்ளது.

குழந்தைகளுக்கான சேவைகள் வழங்கக்கூடிய பல்வேறு துறைகளை உறுப்பினர்களாகக் கொண்டு மாவட்ட அளவிலான குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு வலிமையான மாவட்ட அளவிலான செயலமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரை

தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழுக்கள் மற்றும் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு குழுக்களும் செயல்பாட்டில் உள்ளன. குழந்தைத் திருமணம், பாலியல் வன்கொடுமை, குழந்தை கடத்தல், பிச்சை எடுத்தல், சுரண்டல், குழந்தைத் தொழில் மற்றும் உடல் ரீதியான துன்புறுத்தலிலிருந்து தடுப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் சமூகப் பாதுகாப்பு துறையால் நடத்தப்பட்டுள்ளன.

## 7.15 சமூகப்பாதுகாப்புத் துறைக்கான இணைய தளம் மற்றும் மின்னஞ்சல்

இத்துறைக்கான இணையதள முகவரி **www.socialdefence.tn.gov.in** மற்றும் மின்னஞ்சல் முகவரி dsd.tn@nic.in.

*******

## அத்தியாயம்–8

## சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள்

**8.1** தமிழ்நாடு அரசு சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரைப் பாதுகாக்கும் பொருட்டு, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற மற்றும் ஏழை முதியோர், விதவைகள், வேளாண் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் **50** வயதும் அதற்குமேல் வயதுடைய திருமணமாகாத பெண்கள் ஆகியோர் பயனடைந்து வருகின்றனர். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகை **₹1000/–** தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

**2015–16**ஆம் ஆண்டில் **₹3962.81/-** கோடி ஓய்வூதியத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. **31.03.2016** அன்று வரை **30.74** இலட்சம் பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

**சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் விவரம்**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை 31.03.2016 வரை |
|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 13,59,010 |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 58,355 |
| 3. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 5,58,073 |
| 4. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 2,07,422 |
| 5. | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | 4,25,335 |
| 6. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதியோர் ஓய்வூதியத் திட்டம் | 3,21,493 |
| 7. | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 1,18,909 |
| 8. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 21,165 |
| 9. | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டங்கள் | 4,461 |
| | மொத்தம் | 30,74,223 |

## 8.2 மத்திய அரசு கீழ்க்காணும் ஓய்வூதியத் திட்டங்களுக்கு பின்வருமாறு நிதி வழங்குகிறது

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் | மத்திய அரசின் பங்களிப்பு |
|---|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 60 முதல் 79 வயது வரை | ₹200 |
| | | 80 வயது மற்றும் அதற்கு மேல் | ₹500 |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 18 முதல் 79 வயது வரை | ₹300 |
| 3. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 40 முதல் 79 வயது வரை | ₹300 |

பயனாளிகளின் நலனை கருத்திற் கொண்டு, தகுதியான ஆதரவற்ற ஏழைகள் அனைவரும் பயனடையும் வகையில், 1962ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின்படி, ஆதரவற்றோருக்கான நிபந்தனைகளைத் தளர்த்தி, வயது வந்த மகன்/மகள் இருந்தாலும் அவர்கள் ஒரே குடும்பமாக வசித்து வரும் பட்சத்தில் அவர்களும் வறுமைக் கோட்டிற்கு கீழ் இருக்கும்பட்சத்தில் ஓய்வூதியம் பெறும் வகையில் அரசாணை

வெளியிடப்பட்டது. மேலும், அவர்களின் அசையா சொத்தின் மதிப்பு ₹5,000/–மிகாமல் இருத்தல் வேண்டும் என்கிற விதியும் தளர்த்தப்பட்டு, தற்பொழுது ₹50,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மாற்றுத் திறானாளிகள் ஒய்வூதியம் பெற ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையினை நீக்கியும், ஊனத்தின் விழுக்காட்டினை 60லிருந்து 40 விழுக்காடாக குறைத்தும் அரசு உத்தரவிட்டுள்ளது.

**தேசிய சமூக உதவித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மூன்று ஒய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:-**

| வ. | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் |
|---|---|---|
| 1. | இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 60 வயது அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும். |
| 2. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 40 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ விதவையாக இருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 3. | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஒய்வூதிய தேசியத் திட்டம் | ➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ ஊனத்தின் விழுக்காடு 80 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |

**தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தபடும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன்பெற கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:-**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | ➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ ஊனத்தின் விழுக்காடு 40 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 2. | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதிய த் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ விதவையாக இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 3. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 4. | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 5. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும்.<br>➢ அசையா சொத்தின் மதிப்பு ₹50,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |

31.03.2016 அன்று மொத்தமுள்ள 30.74 இலட்சம் பயனாளிகளில் 23.46 இலட்சம் பயனாளிகளுக்கு வங்கிகள் வழியாகவும் இதர பயனாளிகளுக்கு அஞ்சலகங்கள் வழியாகவும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின் கீழ் உள்ள பயனாளிகளுக்கு கீழ்க்கண்டவாறு விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது.

அ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒரு முறை 4 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.

ஆ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒரு முறை 2 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.

## 8.3 விபத்து நிவாரணத் திட்டம்

44 வகையான தொழில்களில் ஈடுபட்டுள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பத்தைச் சார்ந்த வருமானம் ஈட்டும் பிரதான நபர் விபத்தின் மூலம் மரணமடையும்

போது வாரிசுதாரருக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையினை ₹15,000/– லிருந்து ₹20,000/– ஆக 31 டிசம்பர் 2015 முதல் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**8.4 நலிந்தோர் நிவாரணத் திட்டம்**

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் இயற்கை மரணமடையும் பொருளீட்டக்கூடிய குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ₹10,000/–த்திலிருந்து ₹20,000/–ஆக 31.12.2015 முதல் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**Dr. V. சரோஜா**
**சமூக நலம் மற்றும் சத்துணவுத்**
**திட்டத் துறை அமைச்சர்**

# பிற்சேர்க்கை

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு – 2016–2017

## மானியக் கோரிக்கை எண்.45

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**2016–2017** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு **₹451231.84** இலட்சம். இதில் திட்ட பணிகளுக்கு மட்டும் **₹428150.05** இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

| **2016–2017 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு** | | | | |
|---|---|---|---|---|
| | | **(ரூபாய் இலட்சத்தில்)** | | |
| **கணக்குத் தலைப்பு** | | **திட்டத்தில் சேராதது** | **திட்டம்** | **மொத்தம்** |
| **வருவாய் பகுதி** | | | | |
| **2059** | பொதுப் பணிகள் | 268.75 | - | 268.75 |
| **2225** | சமூக நல இயக்ககம் | 31.13 | - | 31.13 |
| **2235** | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 2372.02 | 6736.39 | 9108.41 |
| **2235** | சமூக நல இயக்ககம் | 9605.14 | 85484.26 | 95089.40 |
| **2235** | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 5736.86 | - | 5736.86 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2236 | தலைமைச் செயலகம் | 17.81 | - | 17.81 |
| 2236 | சமூக நல இயக்ககம் | 4637.54 | 159814.35 | 164451.89 |
| 2236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | - | 176115.01 | 176115.01 |
| 2251 | தலைமைச் செயலகம் | 412.52 | - | 412.52 |
| 2551 | சமூக நல இயக்ககம் | - | 0.01 | 0.01 |
| **வருவாய் பகுதி மொத்தம்** | | **23081.77** | **428150.02** | **451231.79** |
| **மூலதனப் பகுதி** | | | | |
| 4235 | சமூக நல இயக்ககம் | - | - | - |
| 4235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | - | 0.02 | 0.02 |
| 4236 | சமூக நல இயக்ககம் | - | 0.01 | 0.01 |
| **மூலதனப் பகுதி மொத்தம்** | | | **-** | **0.03** |
| 7610 | அரசு பணியாளர்களுக்கான கடன்கள் | 0.02 | - | 0.02 |
| **கடன் பகுதி மொத்தம்** | | **0.02** | **-** | **0.02** |
| **பெரு மொத்தம்** | | **23081.79** | **428150.05** | **451231.84** |

பெரு மொத்தம் :

| | | |
|---|---|---|
| வருவாய் பகுதி | :: | ₹ 451231.79 இலட்சம் |
| மூலதனப் பகுதி | : | ₹ 0.03 இலட்சம் |
| கடன் பகுதி | : | ₹ 0.02 இலட்சம் |
| **மொத்தம்** | **:** | **₹** 451231.84 இலட்சம் |
| | | அல்லது |
| | | ₹ 4512.32 கோடி |

**2016–2017**ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண்.**41**ன் கீழ் ₹**3949**.97 கோடி சமூகப் பாதுகாப்பு திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*******